
கல்கி

KALKI
24.9.2000
ரூ. 5.00



கோடி ரூபாய் க்விஸ் சூதாட்டம் இல்லையா?

— சரத்குமார் பேட்டி!





வீரப்ப வினாத்தாள்!

நாட்டு நடப்புகளை விடக் காட்டு நடப்புகளை மீடியா நமக்கு நன்றாக 'ஃபிலிம் காட்டும்' இந்தக் கால கட்டத்தில், வீரப்பனால் ஏற்பட்ட பாதிப்பைச் சோதனை செய்யும் வித்தியாசமான வினாத்தாள்-இதோ!

(ரகசியக் குறிப்பு: உங்கள் விடைகளை ஆடியோ காசெட்டில் தெளிவாகப் பதிவு செய்து மர்ம முறையில் நாம் சுட்டிக் காட்டப்போகும் இடத்துக்கு மீசை உள்ள தூதர் மூலமாக அனுப்பவும்)

1) தன் 'பிரத்யேக' விருந்தினர்களுக்கு 'உடும்புக்கறி' பரிமாறி வீரப்பன் உபசரிப்பதால், நாளடைவில் அவன் மேல் 'உடும்புப் பிடி' போன்ற ஒரு பிணைப்பு ஏற்பட்டுவிடக் கூடிய சாத்தியக் கூறுகளை மனோதத்துவ ரீதியில் (இடைஇடையே டாக்டர் மாத்ருபூதம் போல் பாட்டுப் பாடாமல்) விளக்கவும்.

2) 'கண்ணை மூடிக் காட்டில் விட்டது போல்' என்ற சொல் வழக்கு:

(அ) நக்கீரன் கோபாலுக்குப் பொருந்துமா?

(ஆ) 'கலைஞர்-கிருஷ்ணா' கூட்டணிக்குப் பொருந்துமா? அல்லது

(இ) நம்மைப் போன்ற அப்பாவி மக்களுக்குப் பொருந்துமா?

3) நடிகர், வயதில் பெரியவர், ராஜ்குமாரைக் கடத்திக் கொண்டு போக வந்த வீரப்பன் நியாயமாக அவரிடம் கேட்டிருக்க வேண்டியது:

(அ) மன்னிப்பா?

(ஆ) கால்ஷீட்டா?

4) 'தொலைக்காட்சிப் பெட்டியே உலகம்' என்று இப்போது உள்ள நிலையில் 'ரேடியோவே உயிர்' என்று அதனுடன் ஒட்டிக் கொண்டு இருக்கும் வீரப்பன் செயல்களில் 'பண்பலை' வீசுகிறதா?

5) 'வீரப்பனுக்கு வன தேவதைகள் உதவுகின்றன' என்று நம்பிக்கையைக் கருத்தில் கொண்டு, தேவதைகள், பிசாசுகள், மதம் பிடித்த யானைகள், கொள்ளைக்காரர்கள்-போன்ற கதா பாத்திரங்களுடன் 575 வாரங்களுக்குக் குறையாமல் இழுக்கப்படப் போகும் ஒரு மெகா சீரியலுக்குப் பொருத்தமான



ஜே.எஸ். ஜம்புநாத்

தலைப்பைச் சூட்டிக் கதையின் (ஆண்) கருவை(கவனிக்க: வீரப்பனுக்குப் பெண் சிசு பிடிக்காது) சுருக்கமாகச் சொல்லவும்.

6) 'தந்-தம், தந்-தம், தனனன....' என்ற சந்தத்தில் மேற்படி மெகா சீரியலுக்கு திகில் 'டைட்டல் பாட்டை'ப் படைத்து, பாடிக் காட்டவும்.

7) 'ஒளிமயமான நாடாக' தமிழ்நாடு திகழாவிட்டாலும் வீரப்பனின் புண்ணியத்தால் 'ஒளிநாடா' மயமாக மலர வாய்ப்புகள் உண்டா? ஒளிவு மறைவில்லாமல் சொல்லவும்.


8) 'வெற்றிகரமான 50-வது நாள்!' என்று கொக்கரித்து, வீரப்பன்-மிச்ச மிருக்கும் ஒவ்வொரு சந்தன மரத்திலும், யானையிலும் போஸ்டர் ஒட்டுவானா? அல்லது சந்தன சென்ட் தடவிய காசெட்டுகளை அனுப்புவானா?

9) 'பெற்றோர் ஆணைப்படி காடு சென்ற ராமர் சிறந்தவரா?- அல்லது முதல்வர்கள் சொற்படி காடு சென்ற (சென்று வருகின்ற) கோபால் சிறந்தவரா?' என்ற சிக்கலான பட்டிமன்ற நிறைவாக தலைவர் சாலமன் பாப்பையா எவ்வாறு தீர்ப்பளிப்பார்?

10) கடத்தப்பட்டவர் பிரபல நடிகராக இருப்பதால் தீபாவளி சமயத்தில் ரிலீஸ் செய்வதுதான் பொருத்தம் என்று வீரப்பன் விபரீதமாக எண்ணக் கூடிய சாத்தியங்கள் உண்டா?

11) சினிமாக்காரர்களுக்கும் எட்டாம் நம்பருக்கும் அவ்வளவாக ராசியில்லை என்கிற நிலையில், நக்கீரன் கோபால் (கூட்டினால் எட்டு எழுத்து) தூதராக இம்முறை வெற்றி பெற முடியவில்லை போலும் என்கிற நியூமராலஜி செண்டிமெண்டைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?

12) காட்டில் வீரப்பன் கண் மூடி, கைகூப்பி சாமி கும்பிடும் போது உச்சரிப்பது தேவாரமாக இருக்குமா?



''புதுசா கேசட் கடை ஆரம்பிச்சிருக்கியாமே. என்ன பெயர் வைத்திருக்கிறாய்?''
''வீரப்பன் கேசட் கடை!''
— எஸ். மோகன்

''நம்ம தலைவர் குஷியா இருக்காரே... என்ன விஷயம்?''
''சந்தன வீரப்பன் 'ஹிட் லிஸ்ட்'ல எதிர்க் கட்சித் தலைவர் பேரு இருக்காம்!''
- மலர் சூர்யா

''வீடு ஒழுகுதுன்னு வீட்டுக்காரரிடம் சொன்னேன்...''
''என்னங்க சொன்னார்?''
''கொட்டும் மழையில் வீரப்பன் முப்பது வருஷமா காட்டுக்குள் வாழறான்... வீட்டுக்குள் இலேசா ஒழுகறதைப் போய் பெரிசாச் சொல்ல வந்துட்டியேங்கிறார்!
— உ. ராஜாஜி



'முடியாது' என்று சொல்லுவதற்கு முன்னால், 'முயலுகிறேன்'என்று சொல்லுங்கள் என்ற அர்த்தம் தரும் ஆங்கில வாசகம், ஒரு குட்டி பாஸ்கெட் பால் கூடையுடன் 'ரஸா' வாயிலிலேயே ஒரு கணம் நம்மை நிற்கச் செய்து, யோசிக்க வைக்கிறது.

தாரா ராமையா
தங்கக் குடுமையா
காகுப்பி சந்தனக்குப்பி
குங்குமக் குப்பி கூ.....

என்று உள்ளே பாட்டுக் கேட்கிறது. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளோடு அமர்ந்து, கைகளைத் தட்டிக் கொண்டு பயிற்சி கொடுக்கிறார் அம்பிகா காமேசுவர்.

அடுத்த அறைக்குப் போய், தட்டுக்குச்சியை வைத்துக் கொண்டு வட்டமாக உட்கார்ந்து, இரண்டிரண்டு பேராகத் தட்டிக் கொண்டு ரிதம் எக்சர்ஸைஸ் செய்கிற குழந்தைகளிடம் தாமும் உட்கார்ந்து, பாடியபடியே தட்டுகிறார்.

நாற்பது - ஐம்பது வயதுக்கு மேல் இம் மாதிரிக் கடமைகளை ஏற்கும் பெண்மணிகளைப் பார்த்திருப்போம். ஆனால் அம்பிகாவின் இளமை நம்மைக் கேள்வி கேட்கத் தூண்டுகிறது:

"இங்கே எல்லாக் குழந்தைகளுமே மென்டலி ரிடார்டட் தானா?"

"அதைவிட மோசமான ஆடிஸம் குழந்தைகளும் இருக்கிறார்கள்!"

"எப்படி இந்தப் பணியில் ஆர்வம் வந்தது, அம்பிகா?"

"அஞ்சு வயசுலயே அம்மாகிட்ட சங்கீதம் கத்துக்க ஆரம்பிச்சேன். ஏழு வயசுல டான்ஸ், பெங்களூர் மீனாட்சியம்மா கிட்ட....."

"இந்த எம்.ஃபில், பி.எச்டி எல்லாம்?"

"இந்தியன் டான்ஸ் அன்ட் மியூசிக்ல வாங்கினதுதான். பி.எச்டி மெட்ராஸ் யூனிவர்சிடில பண்





ணேன்."

"எல்லாரும் டான்ஸ் கத்துக்கிட்டு சபால சான்ஸ் கேப்பாங்க. நீங்க ஸ்பெஷல் சில்ரனுக்கு அதைப் பயன் படுத்த நினைச்சது எப்படி?"

"எல்லாக் கலைகளுக் குமே கம்யூனிகேஷன்தான் முக்கிய அம்சம். இல்லியா? தன்னை வெளிப்படுத்திக் கிறது, தன்னை உசத்திக் கொள்ளுவது, வளர்த்துக் கொள்ளறது மாதிரியான செல்ஃப் எக்ஸ்பிரஷன், செல்ஃப் டெவலப்மென்ட் தான் கலைகளுக்கே அடிப் படையா இருந்திருக்கு. இது இன்னொரு வழி."

"உங்களோட திருப்பு முனை எங்க கிடைச்சது?"

"83லிருந்து 85வரை பெங்களூர்ல ரமண மகரிஷி அகடமி ஃபார் ப்ளைன்டுனு ஒரு பார்வையற்றோர் அமைப்புல, அவங்க வருடாந்தர விழாவுல ஸ்ட்டூடன்ட்ஸ் பங்கு கொள்ள, பரதநாட்டியம் சொல்லிக் கொடுக்கச் சொன்னாங்க. கையால பிடிக்கிற முத்திரை எல்லாம் அவங்க தொட்டுத்தான் தெரிஞ்சுக்கிட்டாங்க. 'அரைமண்டி'யும் அப்படித்தான். விழா முடிஞ்சப்றம் அவங்களோட தன்னம்பிக்கை அதிகமாச்சு! ஸ்டெப் பை ஸ்டெப் நடந்தவங்க, தைரியமா நடக்க ஆரம்பிச்சாங்க. இது எனக்கு ஒரு புதுப் பாடத்தையே சொல்லித் தந் தது."

"ஸோ, இது திருப்பு முனை மட்டுமில்லே?"

"ஆமா. இதைக் கேள்விப்பட்ட ஸ்பாஸ்டிக் சொஸைடி அஃப் இந்தியா, கிளாஸ் எடுத்து நடத்த முடியுமான்னு கேட்டாங்க. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ரெகுலர் படிப்பு சொல்லிக் கொடுக்க முடியாது. அவங்களுக்குத் தேவையான அவேர்னஸ், அவங்க வாழ்க்கைக்கு வேண்டிய படிப்புத்தான் சொல்லித் தர முடியும். சரின்னேன். 89க்கு அப்புறமா, இதுபோல நிறைய ஸ்கூல்ல என்னை அப்ரோச் பண்ணாங்க. அப்பத்தான் நான் ஒரு சிலபஸ் தயார் பண்ணேன். மியூசிக்கையும், டான்ஸ் மூவ்மென்ட்சையும் வச்சு, சின்னச் சின்னப் பயிற்சியா, அவங்க அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான மாதிரி சொல்லிக் கொடுக்க

"குழந்தைகளே என் குரு!"



ஆரம்பிச்சேன். இப்போ இந்தக் குழந்தைங்கதான் எனக்கு குரு. இவங்ககிட்ட இருந்தும் நான் நிறையக் கத்துக்கிட் டிருக்கேன். இங்கிலாந்தில் இருக்கிற டயானா கூப்பர் டான்ஸ் அன்ட் டிராமா தெரபி எக்ஸ்பர்ட். என் முயற் சிக்குப் பாராட்டுத் தெரிவிச்சபோது சந்தோஷமா இருந் தது."

"உங்க குடும்பம் இதுக்கெல்லாம் தடை-தடங்கல் எதுவும் சொல்லலியா?"

"என் பெற்றோர், என் கணவர், என் குழந்தை எல்லாருமே எனக்கு ஆதரவாத்தான் இருக்காங்க!"

"நம்ம கலைகளை ஃபைன் ஆர்ட்னு சொல்வாங்க. இந்தக் குழந்தைங்களுக்கு, இந்த மாதிரி நுண்கலைகளைப் பயன்படுத்த முடியுமா?"

"குழந்தைங்க குழந்தைங்கதான். ஏன் ஏபிள், டிஸேபிள்னு பிரிச்சுப் பார்க்கணும்? டீச் தெம் எபவுட் லைஃப் த்ரூ இயேட்டர். இதுதான் என் கொள்கை. கிரியேடிவ் மூவ் மென்ட் எஜுகேஷன்னு நான் ஆரம்பிச்சு வச்சது, கொஞ்சம்



கொஞ்சமா பரவ ஆரம்பிச்சிருக்கு. இங்க, நான் 50 பேருக்குச் சொல்லிக் கொடுக்கறேன். வெளியிலயும் 'அவுட்ரீச்' நிகழ்ச்சி மூலமா மனவளர்ச்சி குன்றிய குழந்தைங்க படிக்கிற பத்து ஸ்கூல்ஸ்ல போய்ப் பாடம் நடத்தறோம். எங்கிட்ட இருபதுக்கு மேல டிரெயின்ட் டீச்சர்ஸ் இருக்காங்க. நாங்களும் அந்த மாதிரி டீச்சர்ஸ் ஆக விரும்பறவங்களுக்கு இங்க டிரெயினிங் கொடுக்கறோம்.''

''தட்டுக்குச்சியை வச்சு ரிதம் டிரெயினிங் கொடுக்கறபோது அவங்க கைக்கு க்ரிப் கிடைக்கறது மட்டுமில்லே, லயமும் தெரிஞ்சுக்கறாங்க. பாட்டைப் போட்டுட்டு, பக்கத்துலயே பெயின்ட்டை வச்சுட்டா, பத்து விரல்களாலயும் பெயின்டிங் பண்ணறாங்க...நான் டான்ஸை தியாகம் பண்ணலே. எப்போ மேடை கிடைக்குதோ, அப்போ ஆடறேன். ஆனா வாழ்க்கையோட பர்ப்பஸ் என்ன? நமக்குத் திருப்தி தரணும். அது நிறையவே கிடைக்குது. அது போதுமே?''

''பணத்துக்கு என்ன செய்யறீங்க?''

''நன்கொடைகள்தான். முதல் தேதி வரதே, சம்பளம் கொடுக்கணுமேனு கலங்கிட்டு இருப்பேன். 29ஆம் தேதி எப்படியாவது வந்துடும். அவன் தந்துடுவான். நாங்க, வழிவழியா ரமண பக்தர்கள்... மணிரத்னம் 'அலைபாயுதே' மூலம் பணம் கொடுத்தார். இந்த மாசம் ராஜாஜி வித்யாசிரம் மைதானத்துல, ஒரு கார்னிவல் நடத்த அனுமதி தந்திருக்காங்க. நிறையப் பெற்றோரும் குழந்தைங்களும் வருவாங்கனு எதிர்பார்க்கறேன். எங்க மாமா சொல்லுவார்: 'நீ நாராயணன் (வேலை) மீது கவனம் செலுத்து. லட்சுமி தானாவே வருவாள்' என்பார். பல பேருக்கு நல்லது நடக்கிற மாதிரி வேலை செஞ்சா, பலன் நிச்சயம் நல்லாத்தான் இருக்கும். இல்லியா?''

அம்பிகாவுக்கு ஸ்த்ரீரத்னா, பரதகலா ரத்னா, பெருமைக்குரிய பெண்மணி போன்ற பட்டங்கள் கிடைத்திருக்கின்றன. அவை நியாயமாகக் கொடுக்கப்பட்டவை என்றே தோன்றுகிறது.

சந்திப்பு: **சாருகேசி**
படம்: **வெங்கடேஷ்**



''ஆபீஸ்ல சுறுசுறுப்பை அதிகப்படுத்த ஒரு காரியம் பண்ணினேன்...''

''என்ன?''

''எல்லாரையும் உற்சாகப்படுத்த தினம் ஒரு ஜோக் சொல்றதா அறிவிச்சேன்; 'வேண்டாம் வேண்டாம், நாங்களே சுறுசுறுப்பா வேலை செய்யறோம்'னு ஆரம்பிச்சிட்டாங்க!''

— பிரியா சாந்தகுமார்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

பவர்ஃபைனான்ஸ்

நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

டெல்லி

தில்லித் தமிழ்ச் சங்கம்

தமிழ்ச் சங்கம் மார்க், செக்டார்-5, R.K.புரம்,
புதுடெல்லி - 110 022.

தொலைபேசி : 6193966 / 6174217

நாள் : 21, 22 & 23 செப்டம்பர், 2000

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

12.12%

12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%.
24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 11.10%
36, 48, 60 மாதங்களுக்கு மாதத்திற்கு 12.00%,
காலாண்டிற்கு 12.12%.

16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

விண்ணப்ப படிவங்கள் கீழ்க்கண்ட கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும் :

● **பாண்டிச்சேரி** : 28, ஜவஹர்லால் நேரு தெரு. ● **பெங்களூர்** : 109, காந்தி பஜார், பசவங்குடி; 315, கே. காமராஜ் ரோடு; ஹோட்டல் மயூரா பில்டிங், டேங்க் பண்டு ரோடு; 30, 9வது மெயின் ரோடு, ஜெயநகர்; V பிளாக், ராஜாஜி நகர்; 2947, ராஜாஜி நகர் II ஸ்டேஜ். ● **மும்பை** : மகாலக்ஷ்மி, 64, டாக்டர் டி.என். ரோடு; 78, ஷீராபாக், M.D.S. மார்க், செம்பூர்; 356, பந்தர்கேஷ் ரோடு, மாதுங்கா; 2, வால்சந்த் ஹீராசந்த் மார்க், ஃபோர்ட்; ● **அகமதாபாத்** : பஞ்சராபோல், அம்பாவாடி. ● **எர்ணாகுளம்** : பள்ளிமுக்கு; சண்முகம் ரோடு; ● **திருவனந்தபுரம்** : கிழக்கு ஃபோர்ட்; M.G. ரோடு. ● **ஹைதராபாத்** : அபிட்ஸ் ரோடு; சார்மினார் X ரோடு; நாம்பல்லி. ● **செகந்திராபாத்** : ஸ்டேஷன் ரோடு ● **புது தில்லி** : கரோல்பாக்; இர்வின் ரோடு; நேரு பிளேஸ்; ஜனக்புரி; 22-பி, கான் மார்க்கெட்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)
பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

28-9-99 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

Visit us at : www tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com

மக்கள் போடும் மதிப்பெண்கள்!



'தி.மு.க. அமைச்சர்களில் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இன்றும் பல விஷயங்களில் வீரபாண்டியார் கருத்து என்னவென்று தெரிந்து கொண்டுதான் கட்சி விவகாரங்களில் கலைஞர் செயல்படுவார். வைகோ கட்சியைப் விட்டுப் பிரியும் நேரத்தில் வீரபாண்டியார் அந்தப் பிரிவைத் தடுக்க எவ்வளவோ முயன்றார். ஆனால் முயற்சி தோற்றது. தி.மு.க. பொதுக்குழு, செயற் குழுக்களில் தொண்டர்களின் மன நிலையை வெளிப்படுத்தும்படி பேசுபவர் வீரபாண்டியார். அதனால் அந்த அவைகள் கூடும்போது 'என்ன பேசப் போகிறாரோ?' என்ற பரபரப்பு இருக்கும்.

தி.மு.கவை ராமதாஸ் உரசும் நேரங்களிலெல்லாம், பதிலடி கொடுப்பவர் வீரபாண்டியார்தான். பல அமைச்சர்கள், கலைஞரிடம் காட்டி விட்டுத்தான் அறிக்கைகளை வெளியிடுவார்கள். ஆனால் வீரபாண்டியார் அப்படியல்ல. அதே சமயத்தில் முதல்வர் தம் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு எந்த பங்கமும் வராமல் செயல்படுவார்.

சேலத்துச் செல்லப்

1989ல் உள்ளாட்சித் துறையை கவனித்து வந்த வீரபாண்டியார், ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்னர் வேளாண்மைத் துறைக்குப் பொறுப் பேற்றார்.

1996ல் மீண்டும் தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது, வீரபாண்டியாரிடம் மீண்டும் வேளாண்துறை ஒப்படைக்கப் பட்டது. "நாம் நம்மாலான முயற்சிகளை எடுப்போம்; இயற்கையும் ஒத்துழைத்தால் மிகச் சிறப்பாக செயல்படலாம்" என்று

பொறுப்பேற்றுக் கொண்டதுமே சொன்னார் அமைச்சர். இந்த நான்கு வருடங்களும் இயற்கை நமக்கு ரொம்பவே கருணை காட்டியிருக்கிறது" என்கிறார் உயர் அதிகாரி ஒருவர். "தமிழகத்தைப் பொறுத்தவரை விவசாய சூழலே மிக சந்தோஷமாக இருக்கிறது. இதற்குக் காரணம், விவசாயிகளுக்குச் சிறு குறைகள் இருந்தாலும், அதைக் கேட்டு உடனே களையும் அமைச்சர் இருப்பது தான்" என்கிறார்கள் அதிகாரிகள்.

"தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றபோது அரிசி உற்பத்தி சுமார் 56 லட்சம் மெட்ரிக் டன். சென்ற வருடம் அது 81 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது. 1996, 1997ல் பெரும் மழை காரணமாக கால்நடை மற்றும் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்ட போது 192 கோடி ரூபாய் நிவாரணம் கொடுத்தது தமிழக அரசு. விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குக் கட்டவேண்டிய அபராதத் தொகையான 50 கோடியை அரசே செலுத்தி விவசாயிகளைச் சந்தோஷப்படுத்தியது.

"அதே போல் கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு 1000 ரூபாய் கொடுப்பதுபற்றி பரிசீலிப்போம்" என்று தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, பத்து சதவீத பிழிதிறன் உள்ள கரும்புக்கு 1000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு வீரியமுள்ள விதை நெல் சப்ளை செய்யப் படுகிறது. இந்தியாவிலேயே முதன் முறையாக மாநிலம் முழுவதும் உள்ள 200 உயர் நிலை / மேல் நிலைப் பள்ளிகளில் வேளாண் கல்வி அறிமுகமாகியிருக்கிறது. தமிழகத்தில் ஒரு ஹெக்டேரில் கரும்பு உற்பத்தி 125 டன். உலக அளவில் இது ஒரு ரெகார்ட்!" என்று விவசாய அமைச்சகத்தைப் புகழ்கிறார்கள்.

பிள்ளை!

அமைச்சர் மிகவும் சந்தோஷப்படுவது உழவர் சந்தைகள் குறித்து தான். உழவர் சந்தை உருவாக்குவது, அவற்றை நிர்வகிப்பது ஆகியவற்றை அமைச்சரின் இலாகாதான் கவனிக்கிறது. இதுவரை 84 உழவர்



சந்தைகள் தமிழகமெங்கும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வருடத்திற்குள் 101 உழவர் சந்தைகள் செயல்படத் துவங்கி விடுமாம்.

இந்த உழவர் சந்தைகள் விவசாயிகளுக்கும் நுகர்வோர்களுக்கும் எதிர்பார்த்த பலன் தரவில்லை என்று ஒரு தரப்பு விமர்சனம் கடுமையாய் இருக்கிறது. ஆனால், உழவர் சந்தை விற்பனை கொடுக்கும் ஊக்கத்தில் விவசாயிகள் காய்கறி, கனிகள் பயிரிடும் பரப்பளவு உயர்ந்திருக்கிறது என்கிறார்கள் அதிகாரிகள்.

அமைச்சரைத் தற்போது மிகவும் கவலைக்குள்ளாக்குவது, தென்னை மரங்களுக்கு வந்திருக்கும் சிலந்தி நோய். இதன் காரணமாக உற்பத்தி குறைவது மட்டுமல்லாமல் தேங்காயும் முழு வளர்ச்சி அடைவதில்லை. வேளாண் பல்கலைக் கழகம் மூலமாக இந்தச் சிலந்தி நோய்க்குத் தக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. "மத்திய அரசு கொஞ்சம் நிதி உதவி செய்தால் தமிழ்நாட்டிலுள்ள பாதிக்கப்படாத தென்னை மரங்களுக்கும் முன் ஜாக்கிரதையாக மருந்து அடித்து விடலாம்" என்கிறார் அமைச்சர்.

விவசாய இலாகா இவ்வாறு ஒளிமுகத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் நிலையில், அமைச்சரின் சொந்தத் தொகுதியான வீரபாண்டியிலும் வளர்ச்சிப் பணிகள் நடக்கின்றன.

தமிழ்நாட்டில் வேறு எந்தத் தொகுதியிலும் நடந்திராத அளவுக்கு சுமார் 28 கோடி செலவில் குடிநீர்த்திட்டம், சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், கால்வாய்கள் என்று அசத்தியிருக்கிறார் அமைச்சர். தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர்களை அணுகி, அவர்களின் தொகுதி மேம்பாடு நிதியினைப் பெற்று பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார் அமைச்சர். பன்னிரண்டு பஞ்சாயத்துகளுக்கு ஐந்து கோடி ரூபாய் செலவில் காவிரியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் பணிகள் நடக்கின்றன. சின்ன சீரகப்பாடி கிராமத்தில் சமத்துவபுரம் அமைக்கப்பட்டு வருகிறது.

"பொதுவான வசதிகளுக்காக வரும் மனுக்களை உடனே படித்து அமைச்சர் நடவடிக்கை எடுத்து விடுவார். வேலை, டிரான்ஸ்பர் போன்ற விவகாரங்களில், தகுதிக்கேற்ப முடிவு செய்வார் அமைச்சர்" என்கிறார் அவரது உதவியாளர். இதுவரை அமைச்சரிடம் கொடுக்கப்பட்ட 80000 மனுக்களில் 45000 மனுக்களுக்குத் தலத்திலேயே நடவடிக்கை எடுத்தாராம்.

"சாலையோர மரக்கன்றுகள் நடுவதில் ஊழல்" என்று த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் செல்லகுமார் அமைச்சர் மீது குற்றம் சாட்டினார். உடனே அமைச்சர் அவர் மீது வழக்கு தொடர்ந்து "கோர்ட்டுக்கு வந்து உங்கள் குற்றச்சாட்டை நிரூபியுங்கள்" என்று சவால் விட்டார். ஆனால் செல்லக்குமார் சேலம் கோர்ட்டுக்குச் சென்றபோது சில உற்சாகமான உடன்பிறப்புகள் செல்லக்குமாரைத் தாக்க முயன்றது அமைச்சருக்கு அவப்பெயராகியிருக்கிறது.

சென்ற வருடம் சட்டமன்றத்தில், "சேலம் நகரில் உள்ள அரசு நிலத்தைத் தனியாருக்கு மாற்ற முயற்சி செய்கிறார் அமைச்சர்" என்று குற்றச்சாட்டு எழுந்தது. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலேயே, அந்த அரசு நிலத்தை தனியார் அபகரிக்கப் பார்க்கிறார்கள் என்று புகார் சொல்லி நடவடிக்கை எடுத்தவன் நான்" என்கிறார் அமைச்சர். அரசியல்ரீதியாக அமைச்சரை சேலம் மாவட்டத்தில் சந்திக்க அஞ்சுபவர்கள், இப்படிப் பட்ட புகார்களைச் சொல்கிறார்கள் என்கிறார்கள் அமைச்சரின் ஆதரவாளர்கள்.

அமைச்சரின் மகன் செழியன் மாவட்டச் செயலாளராக இருக்கிறார். 'மகனை அரசியலில் வளர்க்கிறார்' என்பதும் ஒரு குற்றச்சாட்டாக அமைச்சர் மீது வைக்கப்படுகிறது.

அமைச்சர் அதிகம் பேசுவதில்லை. சீனியர் அமைச்சர்களையே 'தண்ணி' காட்டும் சில முதல்வர் அலுவலக அதிகாரிகள் கூட, வீரபாண்டியாரிடத்தில் கொஞ்சம் 'உஷார்' உணர்வோடுதான் பழகுவார்கள்.

— ப்ரியன்



"டி.வி. தொடர் எடுக்கப் பண உதவி செய்தது தப்பாப் போச்சு..."

"எப்படி?"

"அந்தத் தொடர் முடிஞ்சதும் பணத்தைத் திருப்பித் தர்றேன்றாங்க!"

— வந்தவாசி பா. ஜெயக்குமார்



• கச்சேரி மேடை

ரகசிய சிநேகமும் ரசிக உள்ளங்களும்!

நிலா மலர்ந்த
இரவினில் தென்றல்
உலாவிடும் நதியில்
நீல நிறத்து பாலகன்
ஒருவன்
குழல் ஊதி நின்றான்
காலமெல்லாம்,
காலமெல்லாம் அவன்
காதலை எண்ணி
உருகுமோ என்
உள்ளம்

என்று காற்றினிலே வரும் கீதம் பாடலில் குழலோசையை ஆன்மத் தேடலாகவே உருவகப் படுத்தி ('இன்பக் கனவு' பாடல்) என்றும்

குழலோசையால் கட்டுண்டு போய் தமது இசைப் பாடல்கள் பலவற்றில் அதன் ஆகர்ஷண சக்தியை விவரித்திருக்கிறார் அவர்.

அலை ஓசை அவர் மனத்தை ஆக்கிரமித்து இயக்கியதைப் போலவே குழலோசையும் அவர் சிந்தனையையும் கற்பனையையும் நிறைத்து, எழுத்தை இயக்கியிருக்கிறது.

அவரது மனங்கவர்ந்த அந்த குழலிசை கச்சேரி ஒன்று அவரது நூற்றியோராவது பிறந்த நாளன்று (9.9.2000) நடந்தது மிகப் பொருத்தமான அஞ்சலியாக அமைந்தது.

நிகழ்ச்சியை வழங்கியவர் சிக்கில் மாலா சந்திரசேகர்.

இளம் இசைக் கலைஞர்களுக்கான கல்கி விருதையும் பரிசையும் அதே மேடையில் அன்று மாலையில்

...யிருக்கிறார் அமரர் கல்கி.

'குழலோசை கேட்டாயோ கிளியே',
என்றும்

செங்கனி வாயில்
ஒரு வேய்ங்குழல்
கொண்டிசைத்து
என்றும்

கண்ணன், குழலினை அழகாய்
கையில் எடுத்தான்





தான் பெற்றிருந்தார் மாலா. அதே நேரத்தில் அவருக்கு மிருதங்கம் வாசித்த அருண் பிரகாஷ் அதே விருதை பக்கவாத்திய திறனுக்காகப் பெற்றிருந்தார்.

சிரிக்க சிரிக்க ஒரு வரவேற்புரை, தென்றலைப் போல் வருடிப் பாராட்டிய தலைமையுரை, தேனான செய்தியைப்



• விருதும் பரிசும் பெற்ற கலைஞர்களுடன் நீதிபதி, கல்கி அறக்கட்டளை அறங்காவலர்கள்



• தலைமையுரை

பகிர்ந்து கொண்ட நன்றியுரை ஆகியவற்றைத் தொடர்ந்து நடந்த கச்சேரியில் மாலா சந்திரசேகரும் அருண் பிரகாஷும் தங்கள் திறமைகள் முழுமையாய் வெளிப்படும்படி நிகழ்த்திய இன்னிசைக் கச்சேரி, தலைமை வகித்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி பிரபா ஸ்ரீதேவனைக்கூட இறுதி வரை கட்டிப் போட்டுவிட்டது! மரியாதைக்காக ஓரிரு பாடல்களைக் கேட்டுவிட்டு விடைபெறும் 'சீஃப் கெஸ்ட்'களைத் தான் நாம் பெரும்பாலும் பார்க்கிறோம். ஆனால் 'வாழிய செந்தமிழ்' வாசிக்கும்வரை இருந்து வாழ்த்தி விட்டுப் போனார் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன்.

அவரது உயர்பண்பு அவரது தலைமையுரையின் ஒவ்வொரு சொல்லிலும் கூட தெரிந்தது.

"கடவுள் நண்பர்கள் மூலமாகத்தான் காட்சி தருகிறார்" என்று ஆரம்பித்தவர் அமரர் கல்கிக்கும் தமது தாத்தா கே. பாலசுப்பிரமணிய அய்யருக்கும் இடையே இருந்த நட்பு மீண்டும் புதுப்பிக்கப்பட்டு அடுத்த தலைமுறைகளில் தொடர்வதைக் குறிப்பிட்டு நெகிழ்ந்தார். கல்கியின் எழுத்துகளைத் தாமும் தமது குடும்பத்தினரும் போட்டி போட்டுக் கொண்டு படித்த இளமைப் பருவ நாட்களை நினைவு கூர்ந்தார். புத்தகங்கள் வாசிக்கும் அனுபவம் என்பது எவ்வாறு இரு உள்ளங்களுக்கு மட்டுமே உரிய தனி உலகத்தை சிருஷ்டித்து மேன்மையான அனுபவமாக அமைய முடியும் என்பதை வெகு அழகாக எடுத்துச் சொன்னார். கலைகளுள் இசைக் கலையின் தனிச் சிறப்பை சுட்டிக் காட்டி, கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை இளம் இசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதன் பொருத்தத்தைப் பாராட்டினார். இறுதியாக, தாம் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்குக் கதை எழுதி அனுப்பி வெற்றி

துப்பறியும் அசட்டு சாம்பு!

மும்பையைச் சேர்ந்த பத்திரிகையாளர் வி. கங்காதர். சென்னையில் 'ஹிந்து' பத்திரிகையின் துணை ஆசிரியர் சி.வி. கோபால கிருஷ்ணன். இரண்டு பேருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இருவருமே எழுத்தாளர் தேவனின் ஆழ்ந்த ரசிகர்கள். கங்காதர் ஹிந்து, டைம்ஸ் ஆப் இந்தியா, எகனாமிக் டைம்ஸ், மிட் டே என்று பல்வேறு பத்திரிகைகளிலும் பல வருடங்களாக எழுதிக் கொண்டிருப்பவர். சமயம் கிடைத்தால், தேவன், கல்கி ஆகியோர் பற்றி எழுதத் தவறாதவர். சி.வி. கோபால கிருஷ்ணன், புத்தக விமர்சனத்தில், கல்கி, தேவன் எழுத்துக்கள் என்றால், பிரத்யேக முக்கியத்துவம் கொடுத்து, எழுதுபவர். இந்த இருவரையும், தேவன் நினைவுப் பதக்கம் அளித்து கௌரவித்தது தேவன் நினைவு அறக்கட்டளை.

பாரதிய வித்யா பவன் அரங்கில் தேவன், நினைவு அறக்கட்டளையும், கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளையும் இணைந்து



நடத்திய விழாவுக்குத் தலைமை

பெறாமல் போனதையும் மேடையில் வெளிப்படுத்தி, தமக்கும் கல்கி இதழுக்குமான 'ரகசிய சினேகம்' அது என்று அவர் சொல்ல, சென்னை, பாரதிய வித்யா பவன் அரங்கம் சிரிப்பில் நிறைந்தது!

"நாங்களும் நீதிபதிகளாக இருந்தே கதைகளை எடைபோடுகிறோம். பெயரைப் பார்த்துப் பரிசளிப்பதில்லை என்று இதிலிருந்தே தெரியவில்லையா...?" என்று கல்கி ராஜேந்திரன் கூற, மீண்டும் கரவொலி!

படிப்பில் சிறந்த, ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு, கடந்த 14 ஆண்டுகளாக கல்வி உதவித் தொகை வழங்கி வரும் அறக்கட்டளை, இவ்வாண்டு ஒரு லட்சத்து அறுபத்தைந்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள உதவித் தொகைகளை 146 மாணவர்களுக்கு வழங்கியுள்ளது என்ற நற்செய்தியைத் தாங்கி அமைந்தது நன்றியுரை. கடந்த 14 ஆண்டுகளில் பத்து லட்சம் ரூபாய்க்கும் மேலாக உதவித் தொகை அளிக்கப்பட்டுவிட்டது என்றனர் அறங்காவலர்கள்.

தொடர்ந்தது மாலாவின் கச்சேரி. ஸ்ரீ ராக வர்ணம், வினாயகர் பேரில் ஒரு தீக்ஷிதர் கிருதி, தியாகராஜரின் தெலியலேது ராமா, பாபநாசம் சிவனின் உனையலால் வேறு கதி...(கல்யாணி) என்று முத்தான பாடல்களைத் தேர்ந்தெடுத்து வாசித்தார் மாலா. அனைத்திலும் அதிக வரவேற்பையும் கரவொலியையும் அவருக்கு வாங்கித் தந்தது ஹரிகாம்போதி தான்! எல்லோரும் எதிர்பார்த்த அமரர் கல்கியின் 'வண்டாடும் சோலை' பாடலை அவர் ஒலிபெருக்கியில் அறிவித்தவுடனேயே அவை கலகலத்து விட்டது. கச்சிதமான ஆலாபனையைத் தொடர்ந்து கீர்த்தனை, நிரவல் ஸ்வரம் என்று

'ஹிந்து' ராம். அவரது உரை, தமிழ்ப் பத்திரிகைகள் குறிப்பாக தேவன் மற்றும் கல்கி மீது அவர் வைத்துள்ள மரியாதையை வெளிப்படுத்தியது. தான் ஹிந்துவில் நிருபராக வேலைக்குச் சேர்ந்தபோது, தனக்கு ரிப்போர்டிங் சம்பந்தப்பட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்தவர் சி.வி. கோபாலகிருஷ்ணன்தான் என்று கூறினார். கங் காதர் பேசும்போது, அகதா கிறிஸ்டியின் நீதிமன்ற காட்சிகளைவிட, நுணுக்கமாக, விறுவிறுப்பாக தேவன் தமது ஜஸ்டிஸ் ஜகன்னாதன் நாவலில் எழுதியிருக்கிறார் என்ற கையோடு, துப்பறியும் சாம்புவுக்கு 'அசடு' பட்டம் கொடுத்தார்.

கல்கியின் கடிதங்கள், கல்கி வளர்த்த சிரிப்பு அலைகள் என்ற இரு நூல்கள் இந்த விழா மேடையில் வெளியிடப்பட்டன. ராஜாஜி, டி.கே.சி., கல்கி மூவரும் தங்களுக்குள் எழுதிக் கொண்ட கடிதங்கள், கல்கி தம் மனைவி, மகன், மகளுக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவற்றின் தொகுப்பு இந்தப் புத்தகம். தொகுத்தவர்: சுப்ர. பாலன்.

தேவன் மற்றும் கல்கி அறக் கட்டளைகள் இணைந்து போன வருடம் கல்லூரி மாணவர்களுக்கு நடத்திய நகைச்சுவை-பயிலரங்கில் சுஜாதா, மதன், கிரேஸி மோகன், துக்ளக் சத்யா, ரா.கி. ரங்கராஜன் போன்றவர்கள் பேசியவற்றின் தொகுப்புதான் கல்கி வளர்த்த சிரிப்பு அலைகள். உபரியாய் கல்கியின் எழுத்துக்களிலிருந்து தொகுப்பாசிரியர் வாதூலன் பொறுக்கியெடுத்த சில பளீரென்ற நகைச்சுவை முத்துக்கள் கொண்ட கட்டுரையும் உண்டு.

புத்தகங்களை ஹிந்து ராம் வெளியிட, பெற்றுக் கொண்டவர் எழுத்தாளர் பரணீதரன். கல்கியால் பத்திரிகையில் அறிமுகப்படுத்தப்பட்டு அவர் அளித்த ஊக்கத்தால் வளர்ந்து, பின் தேவன் ஆதரவில் விகடனில் கார்ட்டூன் போட்ட அனுபவங்களை நெகிழ்வுடன் நினைவு கூர்ந்தார் பரணீதரன்.

நிகழ்ச்சியின் கடைசி கட்டமாக சங்கீதா கிருஷ்ணமூர்த்தியின் கச்சேரி நடைபெற்றது.

— மானஸா

குழலிசை நாயகன் கண்ணனுக்குக் குழலிசையாலேயே சிறப்புச் செய்தார் மாலா. சிக்கில் சகோதரிகளின் மகள் என்பது அவர் மனோதர்மத்தில் தெரிந்ததென்றால் எம்.எஸ். குடும்பத்து மருமகள் என்பது 'வண்டாடும் சோலை' பாடல் அமைப்பைப் பிரதியெடுத்ததுபோல் வாசித்ததில் பளிச் சிட்டது.

கச்சேரியின் பிற்பகுதியில் பெ. தூரன் இயற்றிய தாயே திரிபுர சுந்தரி (சுத்த சாவேரி) பாரதியார் பாடலாகிய செந்தமிழ் நாடு - (ராக மாலிகை) அமரர் கல்கி எழுதி டி.கே. பட்டம்மாள் பாடி, பிரபலப்படுத்திய 'பூங்குயில்', பக்த மீரா திரைபடப் பாடலான 'காற்றினிலே வரும் கீதம்' என்று தமிழிசை வெள்ளம்தான்!

'வாசிப்பில் தான் இவர் இடதுகை; வித்வான்களுக்கு இவர் வலது கை' என்று அருண் பிரகாஷுக்கு வழங்கிய விருது பத்திரத்தில் ஒரு வரி இடம் பெற்றிருந்தது. அதை நூறு சதவிகிதம் நிரூபித்தது அன்றைய அவரது வாசிப்பு! வயலின் எச்.என். பாஸ்கருக்கும் கடம் எஸ்.வி. ரமணிக்கும் அந்த உற்சாகம் தொற்றிக் கொள்ள, கச்சேரி நெடுக விறுவிறுப்பும் கலகலப்பும் கோத்து கோத்துக் கொடுத்தார்கள். தனியாவர்த்தனத்தில் அபூர்வமான, அழகான தீர்மானங்கள் பேசின.

சிறுமி மாளவிகா இறை வணக்கமும் அமரர் கல்கி, பாரதியாரைப் பற்றி இயற்றிய 'தெய்வத்தமிழ் நாட்டினிலே' பாடலும் பாட, ஆரம்பித்தது அன்றைய நிகழ்ச்சி. அந்தச் சிறுமி யின் திறமை இனிய ஆச்சர்யம். தொடர்ந்து மனத்துக்கினிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட பேச்சுக்கள், செவிக்கினிய இசை, இவற்றுடன் வாய்க்கினிய மைசூர்பாவும் கிடைத்தது விழா முடிவில்... வழங்கி மகிழ்ந்தவர்கள்- வேறு யார்... ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தான்!

— பாரதி

படங்கள்: யோகா

உலகத்தரம் வாய்ந்த சீட்டுத் திட்டங்கள்

மேன்மேலும் பொலிவுடன்

இந்தியாவில் தோன்றிய தொன்மையான சீட்டு வழிமுறை 2000 ஆண்டுகளை வயதில் கடந்திருந்தாலும், 21ஆம் நூற்றாண்டிலும் வளமைக்கு வழி காட்டுகிறது. கடந்த 200 ஆண்டுகளில் தோன்றிய பல அந்நிய முதலீட்டு முறைகளை விட உன்னதமானவை சீட்டுத் திட்டங்கள். காலத்தை வென்று நிற்கும் இந்தப் பொலிவான வழிமுறை அதிக மக்களுக்கு ஆண்டாண்டுகளாய் பயன் வழங்கி வருகிறது.



ஸ்ரீராம் சீட்டுத் திட்டங்கள்

மாறிவரும் பொருளாதாரச் சூழல்களை மனதில் கொண்டு, சீட்டுத் திட்டங்களில் பல்வேறு மாறுதல்களை உடனடியாய் செயல்படுத்தி இன்றளவும் புதுப்பொலிவுடன் திகழ்கிறது ஸ்ரீராம் சிட்ஸ். தனது சிறப்பான திட்டங்கள் மூலம் கடந்த 27 வருடங்களாக இணையற்று திகழும் ஸ்ரீராம் சிட்ஸ் தற்போது மேன் மேலும் சிறப்பு கொண்ட புதியதொரு திட்டத்தின் மூலம் உங்களுக்கு கூடுதல் லாபம் தர காத்திருக்கிறது.

கூடுதல் டிவிடெண்ட் திட்டம்

விழாக்காலங்களில் சீட்டுத் திட்டங்களில் இணை வோருக்கு ஸ்ரீராம் சிட்ஸ் பல பரிசுகள் வழங்கும். ஆனால் இந்த நவராத்திரி விழாவில் ஒரு சீட்டுத் திட்டமே பரிசாக கிடைக்கிறது. ஆம்! அனைவருக்கும் ஆதாயம் தரும் கூடுதல் டிவிடெண்ட் திட்டம். இந்தப் புதிய திட்டத்தில் உடனடியாக சீட்டைத் தள்ளி எடுப்போரும், சேமிப்பதற்காக சீட்டைப் பயன்படுத்துவோரும் - இரு சாராருமே பயனடையப் போகின்றனர்.

பணத்தேவைக்காக, சீட்டில் சேர்பவர்களுக்கு அதிகப் போட்டியின்றி உடனடியாக தள்ளியெடுக்க வாய்ப்புள்ளது.

இதைத் தவிர, சேமிக்கும் நோக்கத்தில் சீட்டில் சேர்பவர்களுக்கு, முதலில் தள்ளியெடுப்பவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட டிவிடெண்ட் தொகை பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இதன் மூலம் சந்தாதாரர்கள் கூடுதல் டிவிடெண்ட் தொகையை ஆதாயமாகப் பெறுவார்கள்.


ரூ. 7,000/- கோடி பட்டுவாடா

ஸ்ரீராம் சிட்ஸ் மூலம் இதுவரை பரிசுப் பணமாக விநியோகிக்கப்பட்ட ரூ.7,000/- கோடியை, 30 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பகிர்ந்து கொண்டுள்ளன. 15 லட்சத்திற்கும் மேலானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

நலம் பெற இணைவோம் நவராத்திரி விழாவில்!

நலன்களை அள்ளித்தரும் நவராத்திரி விழாவில் ஸ்ரீராம் சிட்ஸில் இணைந்து சந்தோஷமாய் சேமிப்போம். வாழ்வை வளமாக்கிக் கொள்வோம் பல்வேறு பரிசுகள், பற்பல திட்டங்களுடன் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கிறது ஸ்ரீராம் சிட்ஸ்.







2000 செப்டெம்பர் 24
விக்ரம புரட்டாசி 8
மலர் : 59
இதழ் : 8

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




அமெரிக்காவில் ஆர்.எஸ்.எஸ். பிரதமர்!

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியாவும் இடம்பெற வேண்டும் என்று ஆணித்தரமாகப் பேசினார் பிரதமர் வாஜ்பாய். இந்தியாவையும் இந்தியப் பிரதமரையும் உலக நாடுகளின் பார்வையில் உயர்த்தி நிறுத்தியது அந்த உரை. தீவிரவாதத்தை ஆதரிக்கும் பாகிஸ்தானையும் அதே ஐந்து நிமிட உரையில் அவர் வன்மையாகக் கண்டிக்கத் தவறவில்லை.

ஆனால், இரண்டு நாள் கழித்து தாமே ஹிந்து தீவிரவாத அமைப்புகள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்று, தாம் ஓர் ஆர்.எஸ்.எஸ். தொண்டர் என பிர கடனப்படுத்திக் கொண்டிருக்கிறார் வாஜ்பாய்!

நாக்பூரில் சில வாரங்களுக்கு முன்பு நடந்த பி.ஜே.பி. கூட்டத்தில், அதன் புதிய தலைவர் பங்காரு லக்ஷ்மண் பாடியதோ முற்றிலும் வேறான பல்லவி: "கட்சிக் கும் ஹிந்து அமைப்புகளுக்கும் தொடர்பு எதுவும் இல்லை. ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பி. போன்றவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு பி.ஜே.பி. சுதந்தரமாய் இயங்கும்" என்று பேசினார் பங்காரு லக்ஷ்மண். சிறுபான்மையினர் ஆதரவு கட்சி எங்களுடையது



என்று கூட பிரகடனம் செய்தார்.

பிரதமரின் ஸ்டேடன் தீவு (நியூயார்க்) உரையோ 'கட்சியைக் காட்டிலும், ஆட்சியைக் காட்டிலும் பிரதமர் பொறுப்பைக் காட்டிலும் முக்கியமானது ஆர்.எஸ்.எஸ். தொண்டன் என்கிற தகுதியே' என்ற அர்த்தத்துடன் தொனிக்கிறது!

"நான் நிரந்தர பிரதமராக இருக்க முடியாது. ஆனால் நிரந்தர ஆர்.எஸ்.எஸ். தொண்டனாக இருக்கலாம்; இருப்பேன்" என அவர் சொன்னது அமெரிக்கா வாழ் இந்தியர்களின் கிறிஸ்தவ அமைப்புகளிடையே மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. எதிர்ப்புப் போராட்டங்களுக்கு அவை தயாராகிக் கொண்டிருக்கின்றன.

பிரதமர் என்கிற முறையில், பணித் தகுதி அடிப்படையில் அமெரிக்கா சென்ற வாஜ்பாய், அமெரிக்க (வி.எச்.பி) ஹிந்து தலைவர்கள் வழங்கிய வரவேற்பு விருந்தில் எதற்காகப் பங்கேற்க வேண்டும்? அங்கு சென்று அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் அயோத்தியில் ராமர் கோயில் உருவாகும் என்பதுபோல் ஏன் பேசவேண்டும்?

மதச்சார்பற்ற நாட்டின் பிரதமர் ஒருவர் மத அமைப்புகளுடனான நெருக்கத்தைப் பிரகடனப்படுத்துவதே ஆட்சேபனைக்குரியது. அதையும் அயல்நாடுகளில் போய்ச் செய்யும்போது உலக அளவில் கவனம் கவர்கிறார் பிரதமர்.

மதச்சார்பற்ற இந்திய மக்கள் சார்பாக, அவர்கள் வரிப்பணத்தில் அயல்நாடு செல்பவர், பிரதமருக்குரிய நிலையில் இருந்துதான் பேசவேண்டுமேயொழிய, தமது தனி ஆசைகளையும் கட்சி அபிலாஷைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்கான



தருணம் அதுவல்ல.


திட்டமிடப்படாத ஸ்டேடன் தீவு விஜயமும் அங்கே பிரதமர் ஆற்றிய அதிரடி உரையும் நியாயமான சந்தேகங்களைக் கிளப்பியிருக்கின்றன.

உள்நாட்டு வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள், பி.ஜே.பியின் நாக்பூர் பிரகடனங்களால் அடைந்த அதிருப்தியைத் தணிப்பதற்காக பிரதமர் ஸ்டேடன் தீவுக்குப் போனாரா...?

அமெரிக்காவில் வாழும் பி.ஜே.பியின் நண்பர்கள் மகிழ்விக்கப்பட்டால் அவர்களிடமிருந்து கிடைக்கக் கூடிய டாலர் ஆதரவு தேர்தல் சமயத்தில் உதவும் என்பதால் அப்படிப் பேசினாரா...?

இரண்டுமே அல்ல என்றும், தமது பேச்சு பத்திரிகைகளால் திரித்து வெளியிடப்பட்டிருக்கிறது என்றும் அரசியல்வாதிகளின் வழக்கமான பல்லவி பாட ஆரம்பித்திருக்கிறார் பிரதமர். ஆனால், இந்த விளக்கங்களில் சாரமில்லை, அப்பன் குதிருக்குள் இல்லை என்பது போலவே தொனிக்கின்றன. வி.எச்.பியின் அமெரிக்கப் பிரிவுக்கு இவர் போனது முதல் கோணல்; பின்னர் நடந்தவை முற்றும் கோணலாகிப்போனதில் வியப்பில்லை.

பிரதமர் செய்திருக்கும் காரியம் மிக துரதிர்ஷ்டவசமானது. கட்சிக்கு மட்டுமல்ல; தேசம் முழுமைக்குமே மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. சாண் ஏறி முழம் சறுக்கியதுபோல் அமெரிக்க விஜயத்தின் வெற்றிக்களிப்புக்குக் கணிசமான பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. ●



தனக்கும் அண்ணா வாலிக்கும் விரோதம் ஏற்பட்ட வரலாறை விரிவாக ஸ்ரீராமனுக்கு எடுத்துச் சொல்கிறான் சுக்ரீவன். சொல்லி விட்டு, தான் சோர்ந்து போய் முடங்கிவிடாமல் ஸ்ரீராமபிரானுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுகிறான்!

"துக்கத்தை விடுங்கள்!" என்கிறான் சுக்ரீவன்! "தைரியமாய் இருங்கள். நான் இருக்கிறேன் உங்களுக்கு. உங்கள் சினேகிதன் என்கிற முறையிலே சொல்கிறேன், சீதை எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபிடிக்க நான் உதவியாயிருப்பேன்'' என்று வாக்களிக்கிறான்.

அந்த நேரத்தில் மனம் நெகிழ்ந்து சுக்ரீவனை ஆலிங்கனம் செய்துகொள்கிறான் ஸ்ரீராமன்.

பூலோகத்தில் சுக்ரீவனுக்கு சகாயம் செய்யும்படி சூரிய பகவான் ஹனுமானிடம் கேட்டுக் கொண்டாரல்லவா...? அதை எத்தனை அழகாக நிறைவேற்றிவிட்டான் ஆஞ்சனேயன்! சுக்ரீவனுக்கு ஸ்ரீராமனின் அறிமுகத்துடன் ஆலிங்கனம் அல்லவா

கிடைக்கும்படி செய்துவிட்டான்.

அதற்கும் மேல், ஸ்ரீராமனின் வாய் மொழியாக நல்வார்த்தைகள் கேட்கும் பாக்கியமும் பெற்றான் சுக்ரீவன். ஸ்ரீராமன் என்ன சொல்லிப் பாராட்டினான்...?

"சுக்ரீவா! ஒரு நல்ல சிநேகிதனுக்கு என்னென்ன குணங்கள் இருக்க வேண்டுமோ, அவை எல்லாமே உன்னிடம் இருக்கின்றன. இந்தக் காலத்தில் இது மாதிரி பந்துக்கள் கிடைப்பது துர்லபம்" என்றான்!

என்ன வேடிக்கை பாருங்கள்! அந்த திரேதாயுகத்திலேயேகூட நல்ல மனிதர்களைப் பார்ப்பது அரிதாக இருந்திருக்கிறது. நல்ல நண்பர்களோ, பந்துக்களோ அமைவது கஷ்டமாயிருந்திருக்கிறது!

வாலி வதம் நடக்கிறது. மரணப் படுக்கையிலே இருந்தபடி வாலி கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தகுந்த பதில்களைச் சொல்கிறான் ஸ்ரீராமன்.

அந்தப் பதில்களையெல்லாம் கேட்ட பிறகு வாலியும்கூட ஸ்ரீராமனிடம் சமாதானம் கொள்கிறான்; மன்னிப்புக் கோருகிறான். தன் தம்பி சுக்ரீவனையும் மகன் அங்கதனையும் ராமபிரான்தான் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறான். அதுவும் பரத - லக்ஷ்மணர்களைப் போல காக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறான். அதன் பிறகுதான் ஸ்ரீராமன் திருவடியிலேயே வீழ்ந்து மாண்டு போகிறான் வாலி.

இங்கே கம்பர் ஒரு மிகச் சுவையான செய்தியைச் சொல்கிறார். வாலி உயிரை விடுகிற நேரத்தில் ராமபிரானைப் பார்த்துச் சொன்னானாம் -

"ராமா! நீ ஹனுமானை உன் வில் போல கருதி பக்கத்திலேயே இறுத்திக் கொள்ள வேண்டும்" என்று!

அனுமன் என்பவனை ஆழி ஐய!
நின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி...

என்பது கம்பன் வார்த்தை.

அதாவது, ராமன் தன் கையிலே வில்லை எப்படி விடாமல் வைத்துக்கொண்டேயிருக்கிறானோ, அப்படி ஹனுமானையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு அர்த்தம்தான். இன்னொரு விதமாகவும் இதற்குப் பொருள் கொள்ளலாம் - ராவணாதிகளை அழிக்க ராமனின் வில் பயன்படுவதுபோல் ஹனுமானும் அதற்கு ஈடான உதவியாக இருப்பான்.

ராம பக்த ஹனுமான் 8

இந்த மறை பொருளைத்தான் வாலியின் அந்தக் கடைசி வாக்கியம் உணர்த்தியிருக்கிறது.

வாலியின் மரணத்துக்குப் பிறகு நடக்கும் நிகழ்ச்சிகளில் ஹனுமானின் பொறுப்புணர்வும் உலக ஞானமும் எத்தனை சிறப்பாக வெளிப்படுகின்றன என்று கவனியுங்கள்...

வாலி மாண்டு கிடப்பதைப் பார்த்து தாரை புலம்புகிறாள். அந்த நேரத்தில் சொல்லின் செல்வன்தான் அவளைத் தேற்றுகிறான்:

"தாரையே! இந்த உலகத்திலே ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கர்மவினைப் பயனை அனுபவிக்கின்ற வகையில்தான்

கல்யாணபுரம் ஆராவமுதன்

காரியங்கள் நிகழ்கின்றன. ஆதலால் உனக்கு நிகழ்ந்த துக்கம் சுக்ரீவனால் ஏற்பட்டது என்று நினைக்காதே. வாலி நிச்சயமாக உத்தமலோகத்தை அடைந்திருப்பான். ஏனென்றால் அவனுக்கு மரணம் நேர்ந்தது ராமனின் திருக்கரங்களால் அல்லவா...! ஆதலால் நீ வருந்தி உடன்கட்டை ஏறுவதென்பது அறியாமை. அந்த எண்ணத்தைக் கைவிட்டு விடு! அங்கதனைக் கொண்டு வாலிக்கு ஈமக்கடன்களைச் செய்யச் சொல்லு..." – இவ்வாறு ஹனுமான் தாரையைத் தேற்றி, வாழ்க்கைப் பொறுப்புகளைத் தொடரும்படி செய்கிறான்.

இந்த இடத்திலே சொல்லின் செல்வனுடைய விவேகம் எப்படி வெளிப்படுகிறது பாருங்கள் – ஒருபுறம், கணவனை இழந்த தாரைக்கு ஆறுதல் சொல்கிறான்; அதே சமயம் வாலியை வீழ்த்திய ஸ்ரீராமன் பேரில் அவனுக்குப் பகைமையுணர்வு வளராமல் மாற்றுகிறான். இந்த ஆற்றல் எத்தனை உயர்வானது!

அதற்கப்புறம் என்ன ஆகிறது...? ராமபிரான் வாலிக்கு வாக்களித்தபடி சுக்ரீவனுக்கு கிஷ்கிந்தையில் முடிசூட்டச் செய்து, அங்கதனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

அதன்பின் சுக்ரீவனை அழைத்து, "நண்பனே! இழந்த ராஜ்ஜியத்தையும் மனைவியையும் இப்போதுதான் மீண்டும் அடைந்திருக்கிறாய். ஆதலால் மாரிக் காலம் முடிய நான்கு மாதங்கள் போகங்களை அனுபவித்து விட்டு வா... அதன் பிறகு சீதையைத் தேடும் முயற்சியில் நாம் ஈடுபடலாம்."

இவ்வாறு சுக்ரீவனுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார் ஸ்ரீராமன். நான்கு மாதங்கள் சென்றன. சுக்ரீவன் ராமனைப் பற்றியே நினைக்காமல் போகங்களில் தோய்ந்து போய்க் கிடந்தான். அவனுக்குப் பொறுப்புகளை நினைவூட்டி நல்வழியில் ஈடுபடுத்தியவன்... வேறு யார்? ஹனுமான் தான்!

கிஷ்கிந்தா காண்டம் 29வது ஸர்கத்திலே வருகிறது இந்தக் காட்சி–

ஆஞ்சனேயன் சொல்கிறான்: ''வானரர் தலைவனே! ராமனின் உதவியால் வாலியை

அருள்வாக்கு

நம்மிடத்தில் இருக்கும்படியான எல்லா சக்திகளும் ஈச்வர சக்தியில் துளித்துளிதான். இந்தச் சக்திகளை ஈச்வரனுக்கே அர்ப்பணிக்க வேண்டும். நாவினாலே அவன் நாமாவைச் சொல்வது, மனஸிலே த்யானம் பண்ணுவது, சரீரத்தாலே பூஜை பண்ணுவது என்று எல்லாம் ஈச்வர ஸம்பந்தமாக்க வேண்டும். பூஜை என்பதில் கர்மாவைச் செய்வதும், கடமையைச் செய்வதும் அடக்கம்தான். ஆசார்யாள் முடிவாக உபதேசித்த ''ஸோபான பஞ்சக''த்தில் கர்மாவைப் பண்ணுவதுதான் ஈச்வர பூஜை என்று

வட மருவத்தூர் பஞ்சமுக ஆஞ்சநேயர்

'சுதர்ஸன ஸம்ஹிதை' என்ற நூல் விளக்குகிற பஞ்சமுக ஹனுமாரைத் தரிசிக்க வேண்டுமா? திருச்சி சத்திரம் பஸ் நிலையத்திலிருந்து துறையூருக்குப் (வழி திருவள்ளரை) பத்து நிமிடத்திற்கு ஒரு பஸ் உளது. ஒரு மணி நேரப் பயணம். துறையூர் பஸ் நிலையத்திலிருந்து மருவத்தூருக்கு அடிக்கடி பஸ் உண்டு. பதினைந்து நிமிட பயணம்தான்! பெருமாள் கோயில் அருகிலேயே பஸ் நிற்கிறது. கோயிலுக்குள் செல்கிறோம். நுழைந்தவுடன் சேவடி தொழுகிறோம். அடுத்து ஆஞ்சநேயர் சன்னதி, அழகிய சிறு மண்டபம், பஞ்சமுக ஆஞ்சநேயர்! 'ஜருகண்டி' இல்லாமல் சாவகாசமாகக் கண் குளிர கண் நிறைய தரிசனம். கண்ணாடி மூலம் ஹயக்ரீவர் வழிபாடு. நிறைந்த மனத்துடன் திரும்புகிறோம். நினைத்தவை நிச்சயம் நிறைவேறும்.



— எம்.ஆர். வாசுதேவன், திருச்சி.

நிர்த்தாரணம் செய்திருக்கிறார். ஸ்வதர்மப்படி அவரவருக்கு ஏற்பட்ட கர்மாவோடு, ஸர்வ ஜனங்களுக்கும் ஏற்பட்ட 'ஸாதாரண தர்ம'ங்களைச் சேர்ந்த ஒரு முக்யமான கர்மா பரோபகாரம் என்பது.

அதனால், நாக்கால் நாமா சொல்கிறதோடு ஜனங்களுக்கு நல்லதாக, மதுரமாக நாலு வார்த்தை சொல்ல வேண்டும். மனஸால் த்யானம் பண்ணுவதோடு, 'லோகமெல்லாம் க்ஷேமமாயிருக்கணும்' என்று ஒவ்வொரு நாளும் நாலு க்ஷணமாவது அன்போடு நினைக்க வேண்டும். சரீரத்தால் பூஜை, ப்ரதக்ஷிணம், நமஸ்காரம் செய்வதோடு கொஞ்ச நேரமாவது வெட்டியோ கொத்தியோ வேறு தினுஸிலோ ஒரு பொதுத் தொண்டு பண்ண வேண்டும். திரவ்யத்தையும் இப்படியே தேங்காய், பழம், புஷ்பம் வாங்குவதோடு தான தர்மத்துக்கும் கொஞ்சமாவது செலவழிக்க வேண்டும். இவற்றையும் ஈச்வர ப்ரீதிக்காக ஈச்வர பூஜையாக நினைத்தே செய்ய வேண்டும். இதுவே நம் பூர்வீகர்கள் போன வழி. அதாவது தெய்வ கார்யம், ஸமூஹ கார்யம் இரண்டிலும் ஒன்றையும் விடாமல் பண்ண வேண்டும்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அழித்து அரசுரிமை, கீர்த்தி இரண்டையும் அடைந்தாய். ஆனால் அடைந்த நற்பயனுக்குக் கைமாறு செய்ய வேண்டிய கால கட்டத்தில், அதை மறந்துவிட்டு நீ உன் போக்கில் இருக்கிறாயே! சரத் காலம் தொடங்கிவிட்டது. ராம-லக்ஷ்மணர்களை நினையாமல் நீ காம சுகத்தில் திளைத்திருப்பது நியாயமில்லை. ராமனது கோபத்துக்கு நீ ஆளானால் என்ன கதி நேரும் என்று சிந்தித்துப் பார்த்தாயா...? வாலிக்கு நேர்ந்த முடிவுதான் உனக்கும் நேரும். இனியும் தாமதிக்காமல் ராமனது பணிகளில் உன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் வழியைப் பார்..."

அமைச்சருக்கு அழகு வரும்பொருள் உரைத்தல் என்று இன்று நாம் சொல்கிறோம். அன்றைக்கே ஆஞ்சநேயன் அப்படிப்பட்ட அமைச்சனாக, உதாரண புருஷனாகத் திகழ்ந்திருக்கிறான்.

ஹனுமானின் உரையைக் கேட்டுத் தன் தவறை உணர்ந்த சுக்ரீவன் உடனடியாக வானர சேனைகளை வரவழைத்துத் தயார் செய்யலானான்.

இதற்கிடையே என்னவாயிற்று...? ராமனுடன் இருந்த லக்ஷ்மணன் பார்த்தான். மாரிக்காலம் முடிந்தும் சுக்ரீவன் தான் சொன்னபடி வந்து சேரவில்லை. கோபம் மூக்குக்கு மேலாக வருகிறது அவனுக்கு. அந்தக் கோபம் மாறாமலே சுக்ரீவனைத் தேடி அவன் இருப்பிடம் போகிறான் லக்ஷ்மணன்.

அந்த நேரத்தில் சுக்ரீவனுக்குச் சரியானபடி அறிவுரை சொல்லி அவனைப் பணிந்து போகச் செய்து ஒரு பெரிய இக்கட்டைத் தவிர்ப்பவனும் ஹனுமான்தான்.

"வானரர் தலைவா! ராமன் உனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. இந்த நான்கு மாதங்களாக கிஷ்கிந்தையின் மன்னனாகி நீ போகத்தில் ஆழ்ந்துபோனாய். மதுபான மயக்கத்தில் காலத்தைக் கடத்தியபடி உனது பொறுப்பை மறந்தாய். உன் தவறை ஒப்புக்கொண்டு லக்ஷ்மணனிடம் கைகூப்பி மன்னிப்பு கேட்பதைத் தவிர வேறு மார்க்கம் உனக்கு இல்லை. இதோ லக்ஷ்மணன், மிகுந்த கோபத்தோடு வந்து கொண்டிருக்கிறான். அவனிடம் சென்று மன்னிப்பு கேள்... என்கிறான்.

ஆசார்யனின் லட்சணங்களை எடுத்துச் சொல்லும்போது வேதாந்த தேசிகர் சொல்லுவார்: "தவறு செய்யும் சிஷ்யனை குருவானவர் சிக்ஷிக்க வேண்டும். குருவின் முக்கியமான பொறுப்பு அது" என்பார். அந்த குணம் ஹனுமானிடம் இருந்தது. சுக்ரீவனுக்குத் தோழனாகவும் தொண்டனாகவும் இருந்ததோடு அமைச்சனாகவும் ஆசார்யனாகவும் இருந்து மிகுதிக் கண் மேற்சென்று இடித்துக் காட்டியிருக்கிறான்.

இவ்வளவும் நடந்த பின்னர்தான் சுக்ரீவன் விழித்தெழுந்து சீதையைத் தேட வானர வீரர்களை நான்கு திசைகளிலும் அனுப்பி வைத்தான். அதிலும் அவன் தென்திசை நோக்கி அனுப்பியவர்கள் மிகுந்த திறமையும் பலமும் உள்ள வானரர்கள். அவர்களுள் முக்கியமானவன் நமது ஸ்ரீராம பக்த ஹனுமான்.

(வளரும்)

சரத்குமார் டீ.வி.க்கு வருகிறார். சன் டீ.வியில் 'கோடீஸ்வரன்' என்ற நிகழ்ச்சியை நடத்தப் போகிறார். தயாரிப்பு: ராதிகாவின் ராடன் டீ.வி. அக்டோபர் முதல் ஒளிபரப்பு ஆரம்பிக்க திட்டமிடப் பட்டுள்ளது. ஏ.வி.எம். எட்டாம் தளத்தில் சண்டைக் காட்சிக்காக உதட்டோரம் செயற்கை ரத்தம் பூசி நம்மிடம் பேசினார் 'க்விஸ் மாஸ்டர் சரத்':

சரத்குமார் பேட்டி



கேள்வி: டெலிவிஷன் பிரவேசம் என்பது திடீரென்று எடுத்த முடிவா? சினிமாவில் முன்னணி நட்சத்திரமாய் இருக்கும் சமயம், டீ.வி. எதற்கு என்று தயக்கம் ஏற்படவில்லையா?

சரத்குமார்: நீங்கள் கேட்கிற கேள்வி சரிதான். ஆனால் இது திடீரென்று என்னைத் தேடிவந்த வாய்ப்பு. அமிதாப் பச்சனின் க்விஸ் புரோகிராம் ஸ்டார் டீ.வியில் மிகப் பிரபலமாக இருக்கிறது. அதுபோல சன் டீ.வியில் ஒன்று பண்ணப் போகிறோம். அதை நடத்தித்தரும் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று என்னைக் கேட்டார்கள். யோசித்துப் பார்த்தேன். இந்த வித்தியாசமான முயற்சியில் இறங்கிப் பார்த்தால் என்ன என்று தோன்றியது. ஒப்புக் கொண்டேன்.

கே: தயக்கம் ஏதும் ஏற்படவில்லையா?

சரத்: என் ஒரே கவலை இருக்கிற பிஸி ஷெட்யூலில், இதை எந்த அளவுக்குச் சிறப்பாக நடத்த முடியும் என்பதுதான். மற்றபடி டீ.வியை நான் இரண்டாம் தரமானதாக நினைக்கவில்லை. ஒருவிதத்தில், இது எனக்குக் கிடைத்திருக்கும் சவாலான வேலை என்று சொல்லுவேன். காரணம், மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிறைய இருக்கும் என்பதுதான்.

கே: நீங்கள் டீ.வியில் அமிதாபின் கௌன் பனேகா குரோர்பதி நிகழ்ச்சியைப் பார்க்கிறீர்களா?

சரத்: ஓ! எஸ்! எல்லா நாட்களிலும் பார்க்காவிட்டாலும், வீட்டில் இருந்தால் பார்ப்பேன். எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. அதில், நமக்கு இதுவரை தெரியாத பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. என் நண்பர்கள் பலரிடமும், நான் உங்கள் குழந்தைகளைத் தவறாமல் அந்த நிகழ்ச்சியைப் பார்க்கச் சொல்லுங்கள், பொது அறிவு நன்கு வளரும் என்பேன்.

கே: நீங்கள் பள்ளி, கல்லூரி நாட்களில் க்விஸ் நிகழ்ச்சிகளில் பங்கேற்றது உண்டா?

சரத்: இல்லை, ஆனால் பள்ளிக்கூட நாட்களிலிருந்தே நான் நிறைய புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் உடையவன். வாழ்க்கை வரலாறுகள் என்றால் மிகுந்த விருப்பமுடன் படிப்பேன். தாமஸ் ஆல்வா எடிசனின் பள்ளிக்கூட ஆசிரியர், 'நீ எதற்கும் லாயக்கு இல்லாதவன்' என்று திட்டி, பள்ளிக்கூடத்தைவிட்டு அவரை அனுப்பி விட்டார்! ஆனால் அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு, உலகின் மிக முக்கியமான விஞ்ஞானியாக விளங்கினார்!

நஷ்டத்தின் மேல் நஷ்டம் அடைந்த ஹென்றி ஃபோர்டு, பின்னாளில் உலகப்



காடி ரூபாய் க்விஸ் சூதாட்டம் இல்லையா?

புகழ்பெற்ற மோட்டார் கார் உற்பத்தியாளராகவில்லையா? வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்து விட்டால் கீழே வைக்கமாட்டேன்.

கே: என்ன இருந்தாலும், ஒரு க்விஸ் நிகழ்ச்சியில் பங்கேற்று, சரியாய் பதில் சொன்னால் ஒரு கோடி ரூபாய் பரிசு என்பது எப்படி சரியாகும்? இத்தனை பெரிய தொகையைக் காட்டி ஆசையூட்டுவது சூதாட்டம் போன்றதுதானே?

சரத்: நிச்சயம், இது லாட்டரி, ரேஸ் போல கிடையாது. பொது அறிவுத் திறமை இதற்கு மிகவும் அவசியம். பொது அறிவு இல்லாவிட்டால், கேட்கிற கேள்விக்கு எப்படி பதில் சொல்ல முடியும்? பரிசு கோடி ரூபாய் என்றால் என்ன அர்த்தம்? ஆபீசுக்குப் போய் பத்துமணி முதல் ஐந்து மணி வரை வேலை பார்க்கிற அனைவருக்கும் ஒரே அளவுக்கா சம்பளம் கிடைக்கிறது? சிலருக்குச் சில ஆயிரம் தான் சம்பளமாகக் கிடைக்கிறது. இன்னும் சிலருக்கு லட்சக் கணக்கில் வருமானம். ஆக அவரவர் உழைப்பு, திறமை, அறிவு, அதிர்ஷ்டம் அனைத்துக்குமாகத்தான் சம்பளம் தரப்படுகிறது. க்விஸ் நிகழ்ச்சியும் அப்படித் தான். ஆக, சூதாட்டம் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்.

கே: உங்களுக்குப் பல வருடங்களாகவே உடல் ஆரோக்கியம், பாடி பில்டிங் ஆகியவற்றில் பெரும் ஆர்வம் உள்ளதே! இதற்கு என்ன பின்னணி?

சரத்: ஸ்கூல் நாட்களிலிருந்து எனக்கு விளையாட்டில் ரொம்ப ஆர்வம் உண்டு. ரொம்பப் பிடித்த விளையாட்டு கால்பந்து தான். ஃபுட்பால் டீம் கேப்டனாக இருந்திருக்கிறேன். அத்லெடிக்ஸிலும் ஆர்வம் உண்டு. நான் படித்த செயின்ட் பாட்ரிக்ஸ் பள்ளி முப்பது வருட இடைவெளிக்குப் பின், நான் கேப்டனான பின்னர்தான், ஃபுட்பால் கோப்பையை வென்றது. கல்லூரி நாட்கள் வரை போட்டிகளில் வெற்றிபெற்று பரிசுகள் வாங்கியிருக்கிறேன். ஃபுட்பால் ஆட நிறைய ஸ்டாமினா தேவை. அதற்கு நிறைய உடற்பயிற்சி, ஓட்டப்பயிற்சி

அவசியம். அப்படித்தான் ஓட ஆரம்பித்தேன். அதில் வேகப் பயிற்சி செய்து, தடகளப் போட்டிகளிலும் பங்கேற்க ஆரம்பித்தேன். அப்படியே பாடிபில்டிங்கில் ஆர்வம் ஏற்பட்டது.

கே: விளையாட்டு வீரராக வரமுடியாமல் போன வருத்தம் இருக்கிறதா?

சரத்: அந்தக் காலத்தில் படிப்புதான் முக்கியம். படித்து நல்ல வேலைக்குப் போக வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமாக இருந்தது. கிரிக்கெட் கூட



''படத்துக்குப் பாதிக்குப் பாதின்னு பேரு வெச்சது தப்பாப் போச்சு.''

''ஏன்?''

''14,000 அடியில, சென்சார் 7000அடிய வெட்டி அனுப்பியிருக்காங்க!''

– வாசன்

மக்களிடையே அத்தனை பாபுலர் கிடையாது அந்தக் கால கட்டத்தில். என் உடல் ஆரோக்கியத்தின் மீது கொண்ட ஆர்வம் காரணமாகத்தான் நான் பாடி பில்டிங்கில் கவனம் செலுத்தினேன். மிஸ்டர் மெட்ராஸ் ஆகத் தேர்ந்தெடுக்கப்படும் அளவுக்கு வந்தேன். மற்றபடி, அந்தக் கால கட்டத்தில், பாடிபில்டிங் பண்ணுகிறவர்களை ரௌடி போலத்தான் மற்றவர்கள் பார்ப்பார்கள்.

கே: சினிமாத்துறையில் ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

சரத்: கல்லூரிப்படிப்பை முடிக்கிற தருணத்தில் நமக்கு இருக்கும் பர்சனாலிடிக்கு சினிமாவில் நடிக்கலாமே என்று தோன்றியது. ஆனால் கலபத்தில் சினிமாவில் நுழைந்துவிட முடியவில்லை. சொந்தமாய்ப் படம் எடுத்தேன். நடிக்க வாய்ப்பு வந்தபோது கூட, முதலில் வில்லனாகத்தான் நடிக்கக் கூப்பிட்டார்கள். அதைக்கூட நடிப்புக்கு முதல்படி என்று நினைத்துக் கொண்டேன். அதில் என் திறமையைக் காட்டினேன். சுமார் முப்பது படங்களில் வில்லனாக நடித்தபின்தான் ஹீரோவாக பிரமோஷன் கிடைத்தது. எதைச் செய்தாலும் மனப்பூர்வமாகச் செய்யவேண்டும் என்பதே என் கொள்கை.

கே: இதே சித்தாந்தம் உங்களது அரசியல் வாழ்க்கைக்கும் பொருந்துமா?

சரத்: எஸ். நமக்கு இந்தச் சமுதாயத்தில் ஒரு செல்வாக்கு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு சினிமா மூலம் ஒரு மெசேஜ் சொல்லலாம். இல்லை நேரடியாகச் சமுதாயப் பணியில் ஈடுபடலாம். ஒரு தனிநபர், எவ்வளவு சேவை செய்துவிட முடியும்? ஒரு தெருவுக்குத் தண்ணீர்க் குழாய் தேவை என்றால், நம் சொந்தச் செலவில் போட்டுத் தரலாம். ஆனால் பல விஷயங்களை நிறைவேற்ற வேண்டுமென்றால், தனிநபரால் எப்படி சாத்தியம்? நமக்கு ஒரு அரசியல் கட்சிப் பின்னணி தேவைப்படுகிறது. அதன்மூலம் சிறப்பாகச் சேவை புரியலாம் என்பது என் கருத்து.

கே: சென்ற தேர்தலில் சந்தித்த தோல்வி உங்களைப் பாதித்ததன் விளைவாக அரசியலிலிருந்து ஒதுங்கி விட்டீர்களா?

சரத்: தோல்வி என்னைப் பாதிக்கவில்லை. நான் சினிமாவில் பிஸி. தி.மு.கவின் செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களில் கலந்து கொள்கிறேன். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை முதல்வர் கலைஞரைச் சந்தித்துப் பேசுகிறேன். அப்போது, என் கவனத்துக்கு வரும் கட்சி, ஆட்சி சம்பந்தப்பட்ட விஷயங்களை அவர் காதில் போடுகிறேன். இதோ தேர்தல் வரப் போகிறது. தீவிரமாய்ப் பிரசாரம் செய்வேன். ஏனோதானோ என்று மேடையில் பேச நான் விரும்பவில்லை. அர்த்தமுடன் பேசுவதற்காக, என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுகிறேன். அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளுகிறேன். வரும் தேர்தலில் என்பணி பிரசாரம் மட்டுமே!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
வண்ணப்படம்: **யோகா**

NEW RELEASE

An Ocean of Melodies! An experience of Excellence!
A wholesome Carnatic Concert including Ragam Tanam Pallavi



Cass. 1 / CD 1: • Era Naapai (Varnam) • Ninnuvina Naamadendu • Biraana Brova • Nagumomu • Brochevarevarura • Janani Ninnuvina • Sirai Aarum

Cass. 2 / CD 2: • Raghuvamsa Sudha • Kaligiyunte • Aadum Chidambaramo • Hechcharika • Vaanattin Meedu • Jagadodharana • Bhajorey Bhayya (Bhajan) • Tillana • Manju Nihar (Kaavadi Chindu)

Cass. 3 / CD 3: • Jagadanandakaraka • Enneramum Unthan • Amba Madura Meenakshi (RTP) • Kallaarkum Katravarkkum

Visit us at: www.hamaracd.com

Visit us at: www.saregama.com



ஆங்கிலமே,

ஏதோ புதுசா ஒரு மிக்ஸி வாங்கியிருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன். பார்க்கறதுக்கே ரொம்ப நல்லா இருக்குன்னு பக்கத்து வீட்டு பாக்கியம் சொன்னா, நான் அதைக் கொஞ்சம் பார்க்கலாமா? என்று ஒரு பொருளைப் பார்வையிடுவதற்காக அனுமதி கேட்க Can I have a look at it? என்று சொல்லுங்கள்.

'காலையிலிருந்து ஒரே தலைவலி மண்டையைப் பிளக்கிறது' என்பதை I have a headache என்று சொல்லலாம். வலியின் தீவிரத்தைக் குறிப்பிட Severe (சிவியர்) என்ற வார்த்தையைச் சேர்த்து I have a severe headache என்று சொல்லலாம்.

காலையிலிருந்து தலை வலிக்கிறது என்று சொன்னாயே! இப்பொழுது எப்படியிருக்கிறது என்று ஒருவரிடம் விசாரிக்க How are you now? என்று கேட்பதை விட How do you feel now? என்று கேளுங்கள்.

"இப்போ கொஞ்சம் பரவாயில்லை" என்பதை I feel better என்று சொல்லுங்கள்.

❑ "நம்ம நீலா மூணு மாசமா முழுகாம இருக்கா. அவளுக்குக் குழந்தை பிறக்கப் போகிறது' என்பதை "She is going to have a baby" என்று சொல்லலாம்.

❑ ஆபரேஷன் ஆனதிலிருந்து அது என்னமோ தெரியலை. சுத்தமா பசியே இல்லை என்பதை 'I have no appetite' என்று சொல்லலாம்.

❑ 'நேத்து ஆபீஸ்ல செம வேலை' ராத்திரி வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுத் தூங்கிவிட்டேன். நல்ல தூக்கம். காலையில் 7 மணிக்குத்தான் எழுந்தேன். நன்றாகத் தூங்கினேன் என்பதை I had a good sleep என்று சொல்லலாம். இதையே I had a sound sleep என்றும் சொல்வது வழக்கம்.

❑ எனக்கென்று ஒரு குறிக்கோள் இருக்கிறது என்பதை


I have an aim
I have an ambition
I have a goal என்றெல்லாம் சொல்லலாம்.

❑ I have a desire என்றால் எனக்கென்று ஓர் ஆசை உண்டு என்று அர்த்தம்.



அருகில் வா!

வி. ராஜகோபாலன்



❒ 'கருத்து வேறுபாடு' என்பதை 'difference of opinion' என்கிறோம்.

We have a difference of opinion என்றால் எங்களுக்கிடையே கருத்து வேறுபாடு உண்டு என்று அர்த்தம்.

❒ ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற அவசியத்தைத் தெரிவிக்க 'have to' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தலாம்.

'I have to attend the meeting' நான் கூட்டத்தில் கலந்து கொண்டாக வேண்டியிருக்கிறது.

❒ ஊரிலிருந்து மாமா வருகிறார். (அவருடன் அவரது மகளும் வருகிறாள்) அவரை அழைத்து வர நான் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். இக்கருத்தை 'I have to go to the station to receive them' என்று சொல்லலாம்.



❒ டாக்டர் (ஆபரேஷன்) தியேட்டர்ல இருக்கார். நீங்க கொஞ்சம் wait பண்ணணும் என்பதை you have to wait for some time' என்று சொல்லுங்கள்.

❒ சனிக்கிழமை காலைக்குள் வேலையை முடித்து விடுகிறேன் என்று அவர்களிடம் சொல்லி விட்டேன். So I have to finish the work by Saturday. சனிக்கிழமைக்குள் நான் வேலையை முடித்து விட வேண்டும்.

❒ இப்பத்தான் jaundice (மஞ்சள் காமாலை) வந்து ஆளு பொழச்சிருக்கே. இந்த நேரத்துல travel பண்றது சரியில்ல. எதுக்கும் நீ டாக்டரை consult பண்ணிட்டுத்தான் போகணும்.

yes, I have to consult a doctor.


❒ புதுசா வந்திருக்கிற மானேஜருக்கு சுத்தமா தமிழே தெரியலை. எதைச் சொன்னாலும் மனுஷன் what what -ன்னு கத்தறாரு. எனக்கோ இங்கிலீஷ் தெரியலை. அதனால

I have to learn to speak English.

என்ன! இதன் அர்த்தம் புரிகிறதா?


சரி, அடுத்த வாரம் சந்திக்கலாம்.

நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

நீங்க ரொம்ப நாளாக திட்டமிட்டிருந்த காரியம் இப்போது நிறைவேறப் போகுது. குழந்தை பாக்கியமோ அல்லது குழந்தைகளால் மகிழ்ச்சியோ ஏற்படப் போகுது. பிற மதம், மொழிக்காரர்களால் அனுகூலம் ஏற்படவும் வாய்ப்புண்டு. சின்னச் சின்ன குழப்பங்கள் ஏற்படும். ஆனால் சமாளிச்சிடுவீங்க. கூட்டாகத் தொழில் செய்யறவங்க பங்குதாரர்கள்கிட்ட கொஞ்சம் எச்சரிக்கையாவே நடந்துக்கங்க!




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

சின்னச் சின்ன இடர்பாடுகள், குறுக்கீடுகள் இருந்துகிட்டே இருக்கும். மனசில் நிம்மதி குறையும். சஞ்சலப்பட்டுக்கிட்டே இருப்பீங்க. அலைச்சல் நிறையவே இருக்கும். உடம்பை கவனமாகப் பார்த்துக்கங்க. எதிலேயும் அவசரப்படாதீங்க. நிதானமும் விவேகமும் இப்போ உங்களுக்கு ரொம்பவே முக்கியம். பயணங்களைத் தவிர்த்திடுங்க. புது முயற்சிகள் வேண்டவே வேண்டாம்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

மனசில் துணிவும் தன்னம்பிக்கையும் இருப்பதால் எடுத்த காரியங்களில் வெற்றிதான். உல்லாசங்களில் நாட்டம் ஜாஸ்தியாக இருக்கும். சின்னச் சின்ன இடையூறுகள் ஏற்படலாம். அதனால் புது முயற்சிகள் எதுவும் வேண்டாம். புதியவர்களோட பழகும்போது ஜாக்கிரதை! அலைச்சல் வேண்டாம். எதிலும் அக்கறை, சிரத்தை, பொறுப்புணர்ச்சி தேவை.




கடகம் : *(புனர் பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்கள் புத்திசாலித்தனமும் திறமையும் வெளிப்படப் போகுது; இனிமையான சம்பவங்கள் குடும்பத்தில் நடக்கப் போகுது. பல வழிகளில் வரும்படி வரும். எதிரிகள் அடங்கிப் போயிடுவாங்க. வழக்கு கோர்ட் விவகாரங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். ஆனால் பேச்சில் மட்டும் பதற்றம் கூடாது. வீண் செலவுகளைத் தவிர்த்திடுங்க. எல்லாத்திலேயும் நிதானம் தேவை.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்கள் மதிப்பு, செல்வாக்கு ஜாஸ்தியாகப் போகுது. புதுப் பொறுப்புகளை ஏத்துக்கப் போறீங்க. குடும்பத்தில் ஒரே மகிழ்ச்சி. குதூகலம் தான், போங்க. விருந்து, கேளிக்கை அப்படீன்னு உல்லாசமாக இருக்கப் போறீங்க. ஆனால் போட்டி பொறாமைக்காரர்களால் சில தொல்லைகள் ஏற்படும். அதனால் எதிலும் பொறுப்போடு செயல்படுங்க.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்கள் எண்ணங்கள் நிறைவேறப் போகுது. வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படப் போகுது. சில பேருக்கு வெளிநாடு போகக்கூட சந்தர்ப்பம் அமையும். உடல் ஆரோக்கியம் ஜோராகவே இருக்கும். ஆனால் வீண் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாதீங்க. பிரச்னைகள் தம்பி, தங்கைகள் மூலமாக வரலாம். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் வரலாம். பதற்றப்படாமல் நிதானமாகச் சமாளியுங்க. பெரியவங்க ஆலோசனைக் கேட்டு நடங்க!



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம்,*


3-ம் பாதம் வரை)

மனசில் தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். எடுத்த காரியங்களை எப்படியாவது முடிச்சிடுவீங்க. தெய்வத்தோட அநுக்கிரஹம் நிறையவே கிடைக்கும். சொத்துக்கள் வாங்கவும் வாய்ப்பு இருக்கு. தந்தை மூலம் அனுகூலம் உண்டு. வரவு செலவு சமமாக இருந்து வரும். கொடுக்கல் வாங்கல்களிலும் குழந்தைகள் ஆரோக்கியத்திலும் கொஞ்சம் கவனமாக இருங்க. சின்ன சின்னச் சங்கடங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்கள் திட்டங்கள், ஆசைகள் எல்லாம் நிறைவேறப் போகுது. நல்லவங்க நிறைய பேர் உங்களுக்குப் பக்க பலமாக இருக்கப் போறாங்க! திடீர் அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது. வாகனம் வாங்குவீங்க, இல்லேன்னா அதன் மூலம் ஆதாயம் பெறுவீங்க. ஆனால் சின்ன சின்ன தடங்கல்கள் ஏற்படாமல் இருக்காது. சமாளிச்சிடுவீங்க, கவலைப்படாதீங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

நீங்க எடுத்த காரியங்கள் வெற்றிதான், போங்க! பண நடமாட்டம் அளவாக இருக்கும், ஆனால் சீராக இருக்கும். செலவுகள் வரும். ஆனால் சுப காரியங்களுக்காக, வேலை இல்லாதவர்களுக்கு வேலையும் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வும் நிச்சயம் உண்டு. ஆனால் எதிலும் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருந்திடுங்க. கொடுக்கல் வாங்கலாக இருக்கட்டும், பயணமாக இருக்கட்டும். பெரியவர்களோட அதிருப்திக்கு ஆளாகாமல் இருந்திடுங்க.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்களோட பண நடமாட்டம் தாராளமாக இருக்கப் போகுதுங்க. சுப காரியங்கள் நிகழப் போகுது. விருந்து, உபசாரம், கேளிக்கை, உல்லாசம் இவற்றில் நிறையவே ஈடுபடப் போறீங்க! கணவன் மனைவி உறவு ரொம்பவே அனுகூலமாக இருக்கும். ஆனால் உஷ்ணம் சம்பந்தமான தொந்தரவுகள் உடம்பில் ஏற்படலாம். ஜாக்கிரதை. நிதானத்தைக் கடைபிடிங்க. சண்டை சச்சரவே வேண்டாம்!




கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

உங்க வசீகரம், அறிவாற்றல், பேச்சு சாமர்த்தியம் எல்லாம் வெளிப்படப் போகுது. பண நடமாட்டம் ஓரளவு நல்லாவே இருக்கும், கவலையை விடுங்க. நண்பர்கள், உறவினர்கள் உதவி செய்ய வருவாங்க. ஆன்மீகத்தில் ஜாஸ்தியாக ஈடுபடுவீங்க. மனசும் தெளிவாயிடும். எல்லாரிடமும் சுமுகமாகவும் இனிமையாகவும் பழகுங்க. பயணம் வேண்டாம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

கஷ்டமான காரியங்களில் எல்லாம் தைரியமாக இறங்கி வெற்றியும் பெற்றிடுவீங்க! அரசாங்கத்தால் நிறைய ஆதாயம் கிடைக்கப் போகுது. எதிரிகள் கப்சிப் என்று அடங்கிப் போயிடுவாங்க. கோர்ட், வழக்கு விவகாரங்களில் உங்களுக்கு ஜெயம் தான். ஆனால் உடம்பை நல்லா கவனிச்சுக்கங்க. வீண் செலவுகளையும் தவிர்த்திடுங்க.



மகர ராசிக்காரரான சிவகுமாருக்குப் பணப் புழக்கம் தாராளமாக இருக்குமாம்!





விட்டலாச்சார்யா படங்களில் எலும்புக் கூடுகளை ஆடவிட்டு ரசிகர்களை வியப்பில் ஆழ்த்திய காலம் போய் இன்று உலகத் தரத்தில் கிராஃபிக்ஸ் காட்சிகளை உருவாக்கத் தயாராகிவிட்டது தமிழ் சினிமா உலகம்.

'புகழ்'– படத்தின் பட்ஜெட் தொகையில் மூன்றில் ஒரு பங்கு 'கிராஃபிக்ஸ்'காக செல விடப்பட்டிருப்பது இதற்கு சாட்சி.

பவித்ரன் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் இந்தப் படத்தின் கிராஃபிக்ஸ் காட்சிகளை செய்து தந்திருக்கிறது எடிட் பாயிண்ட் மீடியா நிறுவனம். அதன் கிராஃபிக்ஸ் பிரிவு ஆலோசகர் ஹரிஷ் நமது கேள்விகளுக்குப் பதில் அளித்தார்:

கறுப்பு வெள்ளை பட காலத்தில் பயன்படுத்தப்பட்ட சூப்பர் இம்போஸ் டிஸ்சால்வ் காட்சிகள் இன்றும் உபயோகப் படுத்தப்படுகின்றனவா?

'புகழுக்குப் புகழ் சேர்க்கும் கிராஃபிக்ஸ்!

இரண்டு காட்சிகளை ஒன்றன் மீது மற்றொன்றாக இணைத்து உருவாக்குவது சூப்பர் இம்போஸ். ஒரு காட்சி மெள்ள மெள்ள மறைந்து அடுத்த காட்சி தொடங்குவது டிஸ்சால்வ். இது போன்ற காட்சிகள் இன்னும் இடம்பெறுகின்றன என்றாலும் இதற்கு

உபயோகப்படுத்தப்படும் உத்தி மாறியிருக்கிறது.

முன்பெல்லாம் ஆப்டிகல் முறையில் தான் இந்தமாதிரி காட்சிகளை உருவாக்கி வந்தார்கள். ஆனால் இப்போது இந்த முறையை யாரும் கையாள்வதில்லை. காரணம் அப்படி உருவாக்கப்பட்டக் காட்சிகளில் தென்படும் செயற்கைத்தனம், இன்றைய சினிமா ரசிகனுக்குச் சிரிப்பை உண்டு பண்ணிவிடும்.

ஆப்டிகல் முறைக்கு பதிலாக கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸின் புதுப் புது சாஃப்ட்வேர்களைக் கொண்டு முற்றிலும் யதார்த்தமான காட்சிகளை இன்று பிரமாதமாக உருவாக்கி விடுகிறோம்.

அப்படியென்றால் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸை இப்போதுதான் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறோமா?

கடந்த பத்து வருடங்களாகவே அங்கொன்றும் இங்கொன்றுமாக தரமான கிராஃபிக்ஸ் காட்சிகள் தமிழ்ப் படங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் பெரும்பாலும் டைட்டில்கள் போடுவதற்கும் பாடல்காட்சிகளில் வினோத விலங்குகளையும் பறவைகளையும் காட்டுவதற்கும் தான் 'கிராஃபிக்'ஸை உபயோகப்படுத்த முடியும் என்கிற தவறான எண்ணம் இருந்து வந்திருக்கிறது.

இப்போதுதான் ஷங்கர் போன்ற இளைய தலைமுறை இயக்குனர்கள் கிராஃபிக்ஸின் உண்மையான பலம் அறிந்து அதைப் பொருத்தமான இடத்தில் திறமையாக பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். இருப்பினும் இன்று இருக்கும் கிராஃபிக்ஸ் வசதியில் ஐந்து சதவீதத்தைக் கூட நாம் பயன்படுத்தவில்லை என்று அடித்துச் சொல்லுவேன்.

கிராஃபிக்ஸில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் டெக்னிக் எது?

'கிராஃபிக்ஸ்'ஐப் பொறுத்தவரை பல நுட்பங்கள் இருந்தாலும் 'கம்பாசிட்டிங்' தான் மிகவும் அதிக அளவில் பயன்படுத்தப்படும் ஒன்று.

தொடக்கத்தில் இருந்தே இரட்டை வேடத்தில் எடுக்கப்பட்ட படங்கள் தமிழ் சினிமாவில் அதிகம். இந்த மாதிரி படங்களுக்கு கம்பாசிட்டிங் ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம்! பழைய படங்களில், இரட்டைப் பாத்திரங்கள் தோன்றும் எல்லா காட்சிகளிலும், திரையின் நடுவில் ஒரு கோடு தெரியும். தனித்தனியே எடுத்து ஒட்டியிருக்கிறார்கள் என ரசிகர்கள் எளிதில் கண்டுபிடித்து விடுவார்கள். இப்போது உபயோகப்படுத்தும் கம்பாசிட்டிங் முறையில் நூறு சதவீதம் துல்லியம் கிடைக்கும். காரணம், இந்த முறையில், முதலில் ஒரு பாத்திரத்தை(அப்பா) இயல்பான பின்புலத்தில் (backdrop) நடிக்க வைத்து படம் பிடித்துவிடுவார்கள். பிறகு மற்றொரு பாத்திரத்தை (மகன்) நீலநிற பின்புலத்தில் (Blue mat) முன்பு எடுக்கப்பட்ட காட்சியின் ஒளிஅமைப்பு, மற்றும் அதே கேமரா எக்ஸ்போஷரில் படம் பிடித்து, இரண்டு காட்சிகளையும் கம்ப்யூட்டர் மூலம் ஸ்கேன் செய்து கொள்வார்கள். பின்பு, நீலநிற பின்புலத்தில் எடுக்கப்பட்ட காட்சியில் இருந்து, நீல நிறத்தை மட்டும் நீக்கிவிட்டு, அதை அப்படியே இயல்பான பின்புலக்காட்சியோடு டிஜிட்டல் முறையில் இணைத்து விடுவார்கள். இதைத்தான் கம்பாசிட்டிங் என்று சொல்கிறோம்.



ஜீன்ஸ் படத்தில் இந்த கிராஃபிக்ஸ் நுட்பத்தைப் பயன்படுத்தி, இரண்டு பிரசாந்த்களை ஒரே காட்சியில் ரியலாக நடமாட விட்டவர் இயக்குனர் ஷங்



கர்.

'டிஜிட்டல் குளோனிங்' என்கிறார்களே- அதுஎன்ன?

இருபத்தைந்து பேர் கொண்ட ஒரு சிறிய கூட்டத்தைப் படம் பிடித்து அதை இருபத்தையாயிரம் பேர் கொண்ட ஒரு நெருக்கடியான கூட்டமாக மாற்றிக் காட்டுவதுதான் டிஜிட்டல் குளோனிங். 'முதல்வன்' படத்தில் அண்ணா மேம்பாலத்தில் மிகப்பெரிய டிராஃபிக்ஜாம் ஏற்பட்டிருப்பதுபோல எடுக்கப்பட்ட காட்சி இந்த முறையில் உருவாக்கப்பட்டதுதான்!

'அனிமேஷன்', 'கிராஃபிக்ஸ்' இரண்டுக்குமான தொடர்பு என்ன?

கம்ப்யூட்டர் மூலம் உருவாக்கப்படும் உருவங்களைத்தான் கிராஃபிக்ஸ் என்று சொல்கிறோம். அது எதுவாகவும் இருக்கலாம். ஆனால் உயிருள்ள ஒன்றை இயக்கிக் காட்டுவது அனிமேஷன்.

அனிமேஷன் செய்யும்போது அனிமேட்டர்தான் மிகப் பெரிய படைப்பாளி. உதாரணத்திற்கு, ஒரு சிலந்தியை, பேசும் பாத்திரமாக உருவாக்குகிறோம் என்றால் சிலந்தியின் குணாதிசயங்கள், அதன் அசைவுகள் என்று அதன் ஒட்டுமொத்த வாழ்க்கையையும் ஒரு அனிமேட்டர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்போது தான் கேரக்டர் அனிமேஷன் சாத்தியப்படும்.

'மௌஸ் ஹண்ட்' என்றொரு ஆங்கில அனிமேஷன் படம். அதில் புத்திசாலித்தனமாக பல வித்தைகள் புரியும் சுண்டெலியை அந்த வீட்டிலிருக்கும் இருவர் வேட்டையாட முயன்று கடைசியில் தோற்றுப்போவார்கள். ஹாலிவுட்டையே ஒரு கலக்கு கலக்கியது இந்தப் படம்.

'புகழ்' படம் பற்றி....

இரண்டரை மணி நேர படத்தில் முப்பத்தைந்து நிமிடம் 'கிராஃபிக்ஸ்'க்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய மாற்றம்.

இந்தப் படத்தில் சரத்குமார் இரு வேடங்களில் நடிக்கிறார். அப்பா சரத்குமாரிடம் மகன் சரத்குமார் ஆசீர்வாதம் வாங்கும் காட்சி போன்று இருவரும் ஒன்றாகத் தோன்றும் காட்சிகளில் கம்பாசிட்டிங் உத்தியை மிக துல்லியமாகக் கையாண்டு இருக்கிறோம். வியக்க வைக்கும் டிஜிட்டல் குளோனிங் காட்சிகளும் உண்டு.

'டைட்டானிக்' மாதிரியான தரத்துடன் படமெடுக்கும் காலம் நமக்குக் கனவாகவே போய் விடுமா?

நிச்சயமாக இல்லை! ஹாலிவுட்டில் எடுக்கப்படும் பிரமாண்ட சினிமாக்கள் இந்தியாவில் நேரடியாக ரிலீஸ் செய்யப்படுகின்றன. இந்தப் படங்களைப் பார்க்கிற இன்றைய இயக்குனர்கள் கம்ப்யூட்டர் நுட்பங்களைப் பற்றி நிறைய தெரிந்து கொள்ள முனைகிறார்கள். அதைப் பார்க்கும்போது அடுத்த பத்தாண்டுகளில் தமிழ் சினிமாவைப் பொறுத்த வரை கிராஃபிக்ஸ் தவிர்க்க முடியாததாகிவிடும் என்று தோன்றுகிறது. அதற்கான அடிப்படை வசதிகளும் மனிதவளமும் இப்போதே ரெடி. இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால் கிராஃபிக்ஸ் காட்சிகளுக்கு இடம் தரக்கூடிய புதிய திரைக்கதைகள் தேவை. அதற்கு, சென்டிமெண்ட், பாடல்கள், அடிதடி என்ற ஒரு குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வர இயக்குனர்கள் முன் வரவேண்டும்!

சந்திப்பு: **ஜெயந்தன்**
படங்கள்: **ராஜன்**

இரண்டாம் பாகம்

பி.ஜேசிங் என்றொரு சர்தார் எங்கள் அலுவலகத்தில் உண்டு. அவர் அடிக்கடி சொல்லுவார் "தானே தானே மே லிக்கா ஹை, கானே வாலேகா நாம்" என்று. ஒவ்வொரு தானியத்திலும் எழுதியிருக்குமாம் அதை உண்ணப் போகிறவன் யார் என்று. என்னதான் எண்ணெயைத் தடவிக் கொண்டு உருண்டாலும் ஒட்டுவதுதான் ஒட்டும் என்று நம்மவர்கள் சொல்வதன் வேறு வடிவம்தான் அது. மொழி மாறினாலும் கலாசாரம் மாறினாலும் மானுடதர்மம் மாறுவதில்லை என்பதற்கான சாட்சி இது. என்னுடையது உன்னுடையது என்பதுகூட நம் தீர்மானங்களில் இல்லை என்பது உலகளாவிய தர்ம நம்பிக்கையாக உள்ளதே. எவ்வளவு நிஜம்!

அந்தப் பத்தாயிரம் ரூபாய் என்னுடையது என்று நான் நினைத்துக் கொண்டிருந்தது எவ்வளவு அசட்டுத்தனம். இதோ அது என்னுடையதல்ல என்றாகிவிட்டதே.

என்னால் வேலையில் ஒன்றவே முடியவில்லை.

நாற்பத்தைந்து நாள் விடுப்பு என்பது அப்படி ஒன்றும் மிக நீண்டதாக அதை அனுபவித்து விட்டு வந்த எனக்குத் தெரியவில்லை. ஏதோ முந்தா நாளோ அதற்கு முந்தைய நாளோதான் போன மாதிரி இருந்தது; இதோ வந்தாகி விட்டது. இலவச இணைப்பாகப் பயண அலுப்பும் இருந்தது.

ஆனால் இந்த இடைப்பட்ட பொழுதில் இங்கே நிகழ்ந்தவையாக விவரிக்கப்பட்டவை நிறைய இருந்தன. குறிப்பாக பன்னீர்செல்வத்தின் பணி இடைநீக்க ஆணை நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட செய்தியும், அவனுக்கு வேறு ஊருக்குப் பணி மாற்றம் ஆனதும், அவனுடைய தங்கை திருமணம் நடைபெற்றதும், நிர்வாகம் அவனை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப் பணித்த நீதிமன்ற ஆணையை எதிர்த்து அப்பீலில் போனதும், அவன் மீண்டும் இடைநீக்கம் செய்யப்பட்டதும் இந்த நாட்களில் நடந்திருந்தன.

எல்லாம் கேட்டு முடிந்ததும் நான் கேட்ட முதல் கேள்வி:



"பன்னீர்செல்வம் இப்போது எங்கே இருக்கிறான்?"

"டேய், சாரும் பன்னீரைத் தேடறார்.



"என்னாச்சு சார் நீங்களும் அவனுக்குக் கடன் ஏதும் கொடுத்திருக்கீங்களா?"

எனக்குள் பகீரென்றது. அடிவயிற்றில் ஒரு பயம் தூக்கம் விழித்த மலைப் பாம்பாக விரிய யத்தனித்தது. உள்ளுணர்வை வெளிக் காட்டக் கூடாது என்கிற என் முயற்சியையும் மீறி முகத்தில் ஏமாற்றம் கடை விரித்திருக்க வேண்டும்.

"ஆமாம் போலிருக்குடா. சாரும் ஏமாந்திருக்கிறார். எவ்ளோ சார் ரெண்டா மூணா?"

"சேச்சே, அதெல்லாம் ஒண்ணும் இல்லை. பாவம் குடும்பஸ்தன். ஏதோ தொந்தரவு நீங்கி வேலைல சேரப் போறான்னு நினைக்கும்போதே திரும்பவும் சஸ்பென்ஷன் என்றால் பாவமேன்னு நினைச்சேன் வேறொண்ணுமில்லை" என்று சமாளித்தேன்.

"நிஜமாவே அப்போ நீங்க ஏதும் ஏமாறலை?"

"இல்லைங்க. ஏன் இப்படிச் சொல்றீங்க? யாருக்கும் அவன் வாங்கின கடனைத் திருப்பித் தராமல் போயிட்டானா?"

"யாருக்குமா? யாருக்காவது திருப்பித் தந்திருக்கானான்னு கேளுங்க சார்."

மேற்கொண்டு அவர்கள் பேசிய பேச்சுகள், பன்னீரைத் திட்டிய வார்த்தைகள், விவரங்கள் ஏதும் என் காதுக்குள்ளோ கருத்துக்குள்ளோ ஏறவில்லை. அவர்கள் எப்போது பிரிந்து போய் என்னைத் தனித்து விடுவார்கள் என்கிற தவிப்புடன் தத்தளித்தேன்.

பத்தாயிரம் ரூபாய்!

நான் விடுப்பில் போவதற்கு ஒரு மாதம் முன்புதான் கேட்டு வாங்கினான். அப்போது தன் தங்கை திருமண விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தான் என்று ஞாபகம். பணி இடை நீக்கத்தில் இருந்தாலும் அடிக்கடி அலுவலகம் வந்து போவது அவன் வழக்கம். எல்லோருமே அவனிடம் நன்றாகத்தான் பேசுவார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் இன்று என்னிடம் அவன் ஏமாற்றுப் பேர்வழி என்று பேசிய மூவரும் கூட அவனிடம் குழையக் குழையப் பேசும் காட்சிகளைப் பலமுறை கண்டிருக்கிறேன்.

பணியில் இருந்த காலத்தில் நல்ல முறையில் வேலை செய்பவன், யாருக்கும் பிரச்னை வரும்படி நடந்து கொள்ளாதவன், கொஞ்சம் ஏழ்மையான குடும்பத்தில் இருந்து வந்தவன் என்கிற காரணங்களால் எனக்குப் பன்னீர்செல்வத்தின் மீது பரிவும் பிடித்தமும் உண்டு. அந்தப் பரிவு பலரறிய இருந்தும் அதைச் சொந்தக் காரணங்களுக்குத் துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்காதவன் என்பதும் அவனுடைய கூடுதல் நற்பண்புகளாக நான் உணர்ந்தவை.

அப்படிப்பட்டவனா இப்படி சர்வ சாதாரணமாக பத்தாயிரம் ரூபாயை அடித்துக்கொண்டு போய்விட்டான்?

எந்த நம்பிக்கையில் கொடுத்தேன் என்று யோசித்துப் பார்த்தால் அந்தக் கணத்தில்

பெ. நாயகி

நான் ஏதோ புத்தி கெட்ட மயக்கத்தில் இருந்ததாகத்தான் தோன்றுகிறது. ஏனென்றால் வேலையில்லாமல் அரைச் சம்பளம் வாங்கிக்கொண்டு அதிலும் வாழ்க்கைக்குப் பாதி வழக்குக்குப் பாதி என்று அலைந்து கொண்டிருந்தவனை நம்பி அவன் கேட்ட மாத்திரத்தில் ஒரு கேள்வியும் கேட்காமல் கொடுத்திருக்கிறேனே! தங்கையின் திருமண ஏற்பாடுகளை முன்னிறுத்திக் கேட்டது என் மனத்தைத் தொட்டிருக்க வேண்டும். என் வீட்டுத் திருமணங்களின்போது நான் பட்ட சிரமங்கள் ஞாபகம் வந்து என் இரக்க உணர்வுகளைக் கிளறி இருக்க வேண்டும்.

அந்த இரக்கத்துக்குத் தண்டனையா இது?

ஒருவேளை பி.ஜே.சிங் சொல்வது போல் இந்தப் பணத்தில் என் பெயர் எழுதப்பட்டிருக்கவில்லையோ? என்னையும் அறியாமல் நான் பாவ வழியில் சேர்த்த பணமோ இது?

அலுவல் விஷயமாக வெளியூர்ப் பயணம் சென்று வந்தால் டி.ஏ.பில் க்ளெய்ம் செய்கையில் நான் வழக்கமாக எழுதும் பொய்க் கணக்குகளெல்லாம் தேவையில்லாமல் நினைவில் வந்து போயின. நான் எழுதித் தருவதை நம்பிப் பணம் தரும் கம்பெனிக்கு நான் செய்ததை துரோகம் எனலாமா?

அம்மா போன வருஷம் கண் ஆபரேஷனுக்குப் பணம் கேட்டபோது நான் பிரைவேட்டாக லேசர் சிகிச்சை எல்லாம் வேண்டாம் அரவிந்தில் இலவசமாகவே பார்த்துக் கொள்ளலாம் என்று மறுத்தது தான் இந்த இழப்புக்குக் காரணமோ ? அது இரக்கமில்லாமல் செய்த செயலல்ல. நிஜமாகவே என்னிடம் அப்போது பணமில்லை. அதோடு அம்மாவுக்கு நான் எவ்வளவு செய்தாலும், அவளுக்கு, தம்பியும் அவன் குடும்பமும் தான் பெரிது. அவர்கள் மீது தான் இரக்கம் பொழிவாள். அவனுடன்தான் இருப்பாள். என் மனைவியின் பிரசவம் சிக்கலாகலாம் என்று மருத்துவர்கள் பயமுறுத்தியிருந்த சமயத்தில்கூட துணைக்கு அழைத்தபோது தம்பி மனைவிக்குக் காய்ச்சல் என்று காரணம் சொல்லிவிட்டு வராமல் தவிர்த்தவள். பணத்துக்கு மட்டும் தான் நான் என்றால் எனக்கு எப்படி மனம் கசியும்?

எது எப்படியோ என் செயல்களுக்கான என் நியாயங்கள் இயற்கையின் நியாயங்களோடு ஒத்துப் போகவில்லை என்பதைத் தானே இந்தப் பன்னீர்செல்வம் எபிஸோட் காட்டுகிறது!

நானும் ஏமாந்த விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லி இருக்கலாம் என்று தோன்றியது. எல்லோரையும் போல் அவனைத் திட்டித் தீர்த்து விட்டால் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கலாம். ஆயிரம் இரண்டாயிரம் இழந்தவர்களுக்கே அவ்வளவு கோபம் என்றால் பத்தாயிரம் என்பது எவ்வளவு பெரிய தொகை!

விஷயம் என் மனைவிக்குத் தெரியாது. தெரியவரும்போது அவளுடைய ஆட்டத்தையும் எதிர்கொள்ள வேண்டி வருமே. அது ஒரு பொழுதான ஆட்டமாக இருக்காதே. வாழ்நாள் முழுதும் எப்போது நான் அவளுக்குப் பணம் தர மறுத்தாலும் சொல்லிக் காட்டுவதற்கான அருமையான ஆயுதமாகி விடுமே இவ்விஷயம்! அதுவும் அவளுக்கு நாக்கு நெருப்பிலே செய்து விஷத்திலே தோய்த்தெடுத்த ஒன்று. அவளுடைய புத்திக்கும் பேச்சுக்கும்தான் அம்மா இங்கே வரவே பயப்படுகிறாள்.

அவளிடம் சொல்லவே கூடாது.

நடக்கிற காரியமா? இதுவரை எவ்வளவு விஷயங்களை அவளிடம் சொல்லக் கூடாது என்று உறுதி எடுத்துச் சொல்லாமல் விட முடிந்தது? ஏதோ ஒரு புத்தி கெட்ட மயக்கக் கணத்தில் அவள் ஆறுதலாகத் தலைகோதி

பெங்களூரில் ஓர் இளைஞர், சாலையின் நடுவில் உள்ள மஞ்சள் கோட்டைத் தாண்டிய போது ஒரு போலீஸ் அதிகாரி அருகிலிருந்த அறிவிப்புப் பலகையைக் காட்டினார். அதில் 'மஞ்சள் கோடு லக்ஷ்மண ரேகை. அதைத் தாண்டாதீர்கள்' என்றிருந்தது. இளைஞர், "ஆனானப்பட்ட சீதையே லக்ஷ்மண ரேகையைத் தாண்டினாள். நான் அதை மீறக் கூடாதா?" என்றார். அதிகாரி சிரித்தபடியே, "உண்மைதான். அதற்காகத் தான் நான் இராவணன் காத்திருக்கிறேன். வாருங்கள் புஷ்பக விமானத்தில் (ஜீப்) இலங்காபுரிக்குப் (போலீஸ் ஸ்டேஷன்) போவோம்" என்றார்.

— பெங்களூர் அ. ஷண்முகசுந்தரம்



விடுகிற சமயத்தில், இன்னும் கொஞ்சம் ஆறுதல் வேண்டி, அவளே தாயாய், தோழியாய், தெய்வமாய்த் தோன்றுகிற கிறுக்குக் கற்பனையில் ஊறிக் கொட்டிய விஷயங்கள் எத்தனை எத்தனை! அப்புறம் அவற்றையே எனக்கு எதிரான படைக் கலன்களாக அவள் உபயோகித்து என்னைத் திகைக்க வைக்கிற காட்சிகள் தினசரி அரங்கேறிய வண்ணம் இருந்தும் எங்கே திருந்த முடிகிறது? மனைவிகளுக்குத் தெரியும் எங்கே கொக்கி போட்டால் கணவர்கள் உளறுவார்கள் என்று...

சே! எவ்வளவு பெரிய இக்கட்டில் மாட்டி விட்டுப் போய்விட்டான் இந்தப் பன்னீர் செல்வம்.

வேலையும் ஓடாமல் வேலை பார்ப்பதான பாவனையோடு அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தேன்.

"சார்! ஜாயினிங் ரிப்போர்ட் கொடுத்திட்டீங்களா?" என்று ப்யூன் ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது.

அவசரமாக எழுதி அவன் மூலமே பர்ஸனல் மேனேஜரிடம் கொடுத்தனுப்பினேன்.

போனவன் ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தான். ''சார்! அவர் உங்களை வரச் சொன்னார்'' என்றான்.

எழுந்து போனேன்.

"என்ன சார், வந்தாச்சா? லாங் லீவு அடிச்சிட்டீங்க போல" என்று புன்னகை செய்தபடி வரவேற்று உட்கார வைத்தார். தன் மேசை டிராயரைத் திறந்து நூறு ரூபாய்க் கட்டு ஒன்றை எடுத்து வைத்தார். "பன்னீர் செல்வம் உங்ககிட்ட கொடுக்கச் சொன்னான். ஊரைக் காலி செய்து விட்டுக் கிளம்பும்வரை நீங்க எப்போ வருவீங்கன்னு கேட்டுட்டே இருந்தான். உங்களுக்கு ரொம்ப நன்றி சொல்லச் சொன்னான்" என்றார்.


நான், என் ஆனந்தம் உற்சாகம் இன்ப அதிர்ச்சி சகலத்தையும் மறைக்க முயன்றவனாகி "என்ன சார் ஆச்சு அவன் கேஸ்?" என்று கேட்டேன்.

"மேனேஜ்மெண்ட் பழி வாங்கறாங்க சார். வேறென்ன சொல்ல?" என்றார். ''ஆனா மீண்டு வந்திடுவான் பாருங்க'' என்றார் தொடர்ந்து.

"பணக் கஷ்டத்தோட இதை எப்படித் திருப்பிக் கொடுத்தான்?" என்றபடியே அதை எடுத்துக் கொண்டேன்.

"யார் யாருக்குத் தரணுமோ எல்லாருக்கும் தந்திட்டுத்தான் சார் போயிருக்கான்."

''நிறையப் பேருக்குத் தரலைன்னு



"துபாயிலிருந்து உன் கணவர் ஐம்பது சவரன் நகை கொண்டு வந்ததை ஏன்டி அவ்வளவு சோகமாச் சொல்ற?"

''கூடவே ஒட்டிக்கிட்டு வந்தவ கழுத்துல இல்ல அது இருக்கு!''

— வாசன்

பேசிக்கிட்டாங்களே."

''நானும் கேள்விப்பட்டேன் சார். பேசுகின்ற யாரும் அவனுக்குக் கடன் தந்தவர்கள் இல்லை. குரைக்கத் தெரியாமல் ஓடுகின்ற நாயைக் கல்லெறிந்து சுகப்படும் ரகத்தைச் சேர்ந்தவங்க ஏதேதோ பேசறாங்க சார். எல்லாம் மேலே ஒருத்தன் கணக்கு வச்சிட்டிருக்கான்'' என்றார் கூரையைக் காட்டி.

''ஆமாம் சார்'' என்று தயக்கத்துடன் சொன்னபடி எழுந்தேன்.

என்ன கேவலமான மனிதர்கள் என்று எண்ண முடியாதபடி பன்னீர்செல்வத்தைப் பற்றி என்னுள் ஓடிய எண்ணங்களும் குறுக்கே வந்து குத்தின.

பத்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் பன்னீர்செல்வத்தின் போன் வந்தது. உற்சாகமாகப் பேசினேன். அவன் குரல் கொஞ்சம் ஒடுங்கியிருந்தது. என் பக்க நலன்களை விசாரித்து விட்டு கடைசியாக, ''சார்! பழைய சொத்து கேஸ் ஒண்ணு எனக்குச் சாதகமா தீர்ப்பாயிருக்கு சார். கொஞ்சம் பணம் கிடைக்கும்னு தைரியம் வந்திருக்கு. கோர்ட் ஃபார்மாலிட்டிஸ்தான் பாக்கி. ஒரு ரிக்வெஸ்ட் சார். இப்போ அவசரமா ஒரு அஞ்சாயிரம் ரூபா தேவைப்படுது. நீங்க தந்து உதவ முடியுமா சார். நான் வெறும் பயலா இருக்கும்போதே நம்பித்தந்தவர் நீங்க. உங்களை வாழ்நாளில் மறக்க மாட்டேன் சார். இந்த முறையும் கொஞ்சம் ஏற்பாடு பண்ண முடியுமா சார்?" என்றான்.

'அதற்கென்னப்பா பண்ணிட்டா போச்சு' என்று சொல்ல நினைத்து திடீரென்று உஷாரானது போல் "யோசிச்சு சொல்றேன்" என்றேன்.

பொன்னியின் செல்வன்



முப்பதாம் அத்தியாயம்

தெய்வம் ஆயினாள்!

அமரர் கல்கி

பூங்குழலி எவ்வளவு விரைவாக ஓடக் கூடியவளானாலும், மேலிருந்து எறியப்பட்ட வேலுடன் போட்டியிட முடியாதல்லவா? அவள் மந்தாகினி அத்தையின் அருகில் பாய்ந்து செல்வதற்குள் வேல் அத்தையின் விலாவில் பாய்ந்து விட்டது.

'வீல்' என்று மற்றொரு முறை பயங்கரமாக ஓலமிட்டு விட்டு மந்தாகினி கீழே விழுந்தாள்.

அதே சமயத்தில் அந்த அறையிலிருந்த அத்தனை பேருடைய குரல்களிலிருந்தும் பரிதாப ஒலிகள் கிளம்பின.

பூங்குழலியைப் போலவே மற்றவர்களும் தரையில் விழுந்த மாதரசியை நோக்கி ஓடி வர ஆயத்தமானார்கள்.

அச்சமயம் மேல் மாடத்திலிருந்து தடதடவென்று சத்தம் கேட்டது. சில மண்பாண்டங்கள் கீழ் நோக்கிப் பல திசைகளிலும் எறியப்பட்டன.

அவற்றில் ஒன்று சக்கரவர்த்தியின் அருகில் சுடர் விட்டுப் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த தீபத்தின் பேரில் விழுந்தது. தீபம் அணைந்தது. அறையில் உடனே இருள் சூழ்ந்தது.

பிறகு சிறிது நேரம் அந்த அந்தப்புர அறையிலும் அதைச் சுற்றியுள்ள நீண்ட தாழ்வாரங்களிலும் ஒரே குழப்பமாயிருந்தது.

திடுதிடுவென்று மனிதர்கள் அங்குமிங்கும் வேகமாக ஓடும் காலடிச்

சத்தங்கள் கேட்டன.

''விளக்கு! விளக்கு!'' என்று சின்னப் பழுவேட்டரையரின் கர்ஜனைக் குரல் அலறியது.

''ஆகா! ஐயோ!'' என்று ஒரு பெண் குரல் அலறும் சத்தம் கேட்டது. அது மகாராணியின் குரல் போலிருக்கவே எல்லாருடைய நெஞ்சங்களும் திடுக்கிட்டு, உடல்கள் பதறின.

இத்தனை குழப்பத்துக்கிடையே பூங்குழலி அவளுடைய அத்தை மந்தாகினி விழுந்த இடத்தைக் குறிவைத்து ஓடி அடைந்தாள். அத்தையை அவளுக்கு முன் யாரோ தூக்கி மடியின் மேல் போட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

இதயத்தைப் பிளக்கும் படியான சோகத் தொனியில் விம்மும் குரலும் அழுகைக் குரலும் சேர்ந்து அவள் காதில் விழுந்தன.



வாசற்படிக்கருகில் ''யாரடா அவன்? ஓடாதே! நில்!'' என்று சின்னப் பழுவேட்டரையர் கூச்சலிட்டார்.

ஓடியவன் யாராயிருக்குமென்று பூங்குழலி ஊகித்துக்கொண்டாள்.

அச்சமயம் இரண்டு தாதிப் பெண்கள் தீபங்களுடன் வந்து அந்த அறையில் பிரவேசித்தார்கள்.


தீப வெளிச்சத்தில் தோன்றிய காட்சி யாருமே எதிர்பார்க்க முடியாத அதிசயக் காட்சியாயிருந்தது.

மூன்று வருஷங்களாகக் காலை ஊன்றி நடந்தறியாமலிருந்த சக்கரவர்த்தி, - கால்களின் சக்தியை அடியோடு இழந்து விட்டிருந்த சுந்தர சோழ மன்னர், தாம் படுத்திருந்த கட்டிலிலிருந்து இறங்கி நடந்து வந்து, மந்தாகினியின் அருகில் உட்கார்ந்திருந்தார். அவர் அருகில் இளவரசரும் இருந்தார்.

மந்தாகினியின் விலாவில் ஒரு பக்கத்தில் பாய்ந்து இன்னொரு பக்கம் வெளி வந்திருந்த வேலின் முனையிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

சக்கரவர்த்தி படுத்திருந்த கட்டிலின் அருகில் மலையமான் மகள் வானமாதேவி காணப்பட்டாள்.

அவளுக்கு அருகில் சக்கரவர்த்தி தலை வைத்துச் சாய்ந்திருந்த தலையணையில் ஒரு கூரிய கத்தி செருகப்பட்டிருந்தது.



விளக்கு வந்ததும் மகாராணி கட்டிலை வெறிக்கப் பார்த்து விட்டு, கரை காணாத அதிசயம் ததும்பிய கண்களினால் சக்கரவர்த்தி கீழே உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள். அப்போது பொன்னியின் செல்வர் மந்தாகினியின் தலையை மெள்ளத் தூக்கிச் சக்கரவர்த்தியின் மடியில் வைத்தார்.

இளவரசர் அருள்மொழிவர்மரின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது.

சக்கரவர்த்தியோ விம்மி விம்மி அழுது கொண்டிருந்தார்.

இவ்வளவையும் பூங்குழலி ஒரு கண நேரப் பார்வையில் பார்த்தாள். மறு கணத்திலேயே அங்கு நடந்த சம்பவங்களையெல்லாம் ஒருவாறு ஊகித்துத் தெரிந்துகொண்டாள்.

மேலேயிருந்து வேலை எறிந்தவன் அதை ஊமை ராணி தடை செய்து விட்டதைக் கவனித்திருக்கிறான்.

உடனே மேலேயிருந்த தட்டு முட்டுச் சாமான்களை எடுத்தெறிந்து விளக்கை அணைத்து விட்டிருக்கிறான்.

அப்போது ஏற்பட்ட இருட்டில் கீழே குதித்து இறங்கிக் கட்டிலில் சக்கரவர்த்தி படுத்திருப்பதாக எண்ணிக் கத்தியினால் குத்தி விட்டு ஓடியிருக்கிறான்.

சக்கரவர்த்திக்கு ஆபத்து என்று அறிந்து கட்டிலின் அருகில் ஓடிய மகாராணியைத் தள்ளி விட்டுப் போயிருக்கிறான். அப்போது தான் மகாராணி "ஐயோ!" என்று கதறியிருக்கிறான்.

பின்னர் அச்சதிகாரன் வாசற்படியின் பக்கம் ஓடி அங்கே அச்சமயம் பிரவேசித்துக் கொண்டிருந்த சின்னப் பழுவேட்டரையரையும் தள்ளி விட்டு ஓடிப் போயிருக்க வேண்டும்.

இவ்வளவையும் பூங்குழலி ஊகித்துத் தெரிந்து கொண்டாள். இந்தப் பாதகச் செயலைச் செய்து தப்பி ஓடியவனைத் தொடர்ந்து போய்ப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவள் மனத்தில் ஒரு பக்கத்தில் உதயமாயிற்று. அதைக் காட்டிலும் தன் அத்தையின் இறுதி நெருங்கி விட்டது என்ற நினைவு அவள் உள்ளத்தில் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கியது. ஆகையால் மந்தாகினி சக்கரவர்த்தியின் மடியில் தலை வைத்துப் படுத்திருப்பதையும் பொருட்படுத்தாமல் அவள் அருகில் சென்று மண்டியிட்டு உட்கார்ந்து, "அத்தை! அத்தை!" என்று கதறினாள்.

"ஐயோ! நீ சொன்னது உண்மையாகி விட்டதே! பாவி நான் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போனேனே?" என்று அழுது புலம்பினாள்.

ஆனால் மந்தாகினியோ அவள் இருந்த பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவளுடைய கண்கள் சக்கரவர்த்தியின் திருமுகத்தை ஆவலுடன் அண்ணாந்து பார்த்த வண்ணமிருந்தன.

ஏன்? அவளுடைய ஒரு கரத்தைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் உகுத்த இளவரசர் மீது கூட அவளுடைய கவனம் செல்லவில்லை. பூங்குழலியைக் கவனிப்பது எப்படி?

பூங்குழலி மேலும் புலம்பத் தொடங்கியபோது இளவரசர் தமது விம்மலை அடக்கிக்கொண்டு, "சமுத்திரகுமாரி! இது என்ன? உன்னை நீ மறந்து விட்டாயா? நீ இருக்குமிடத்தை மறந்துவிட்டாயா?" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்.

பூங்குழலியும் சிறிது வெட்கமடைந்தவளாய்த் துயரத்தை அடக்கிக் கொண்டு எழுந்து நின்றாள்.

"அரசே! எனக்கு என் அத்தையைத் தவிர இவ்வுலகில் யாரும் கதி இல்லை!" என்று விம்மினாள்.

இளவரசர் தமது கண்களில் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "பூங்குழலி! அவள் உனக்கு அத்தை! ஆனால் எனக்கு, என் பெற்ற தாயைக் காட்டிலும் பதின்மடங்கு மேலான தாய்! என்னை அழைத்து வரச் சொல்லி உன்னை அனுப்பி வைத்தாள்! ஆயினும் என் முகத்தை அவள் ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை. இதன் காரணத்தை அறிந்தாயா? முப்பது வருஷங்களுக்கு முன்னால் பிரிந்த என் தந்தையும் தாயும் இன்று சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மத்தியில் தடையாக நிற்பதற்கு நாம் யார்...?" என்று கூறிவிட்டு, மகாராணி உள்பட எல்லாரையும் ஒரு தடவை இளவரசர் கூர்ந்து பார்த்தார்.

மீண்டும் பூங்குழலியை நோக்கி, "பெண்ணே! முன்னேயும் சிலமுறை எனக்கு நீ உதவி செய்திருக்கிறாய்! அந்த உதவியெல்லாம் அவ்வளவு முக்கியமானவையல்ல. இன்றைக்கு, என் தாயும் தந்தையும் ஒன்று சேரும் காட்சியைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கும்படி செய்தாய்! இதை நான் என்றும் மறக்க மாட்டேன்! சமுத்திர குமாரி! உன் அத்தை இன்று எவ்வளவு மகத்தான புண்ணியத்தைக் கட்டிக் கொண்டாள் என்பதை எண்ணிப்பார்! சதிகாரனுடைய கொலை வேல் என் தந்தையின் மேல் படாமல் காப்பாற்றினாள்!" அந்த வேலைத் தன் உடம்பில் பாயும்படி செய்துகொண்டாள்! தன் உயிரைக் கொடுத்துச் சக்கரவர்த்தியின் உயிரைக் காப்பாற்றினாள்! ஒருமுறை யல்ல; இருமுறை அவரைக் காப்பாற்றினாள்! உன் அத்தையின் மீது வேல் பாய்ந்ததைக் கண்டதும் மூன்று வருஷமாகச் சக்தி இழந்திருந்த என் தந்தையின் கால்களில் மீண்டும் சக்தி வந்தது. அவர் கட்டிலிலிருந்து எழுந்து ஓடி வந்தார். அதனால் மறுபடியும் அவர் உயிர் தப்பியது! சதிகாரன் அவனுடைய குறி தப்பி விட்டதாக எண்ணி விளக்கை அணைத்து விட்டுக் கீழே குதித்து வந்து மீண்டும் அவனுடைய பாதகத் தொழிலைச் செய்யப் பார்த்தான். ஆனால் சக்கரவர்த்தி எழுந்து வந்து விட்டதால் அவனுடைய நோக்கம் நிறைவேறவில்லை. அதோ, என்னைப் பெற்ற தாய், மலையமான் குமாரி, கரை காணா வியப்புடன் நிற்பதைப் பார்! உன் அத்தையின் மீது வேல் பாய்ந்ததை என்னைப் பெற்ற தாய் பார்த்தாள். மறுபடியும் அந்தக் கொலைகாரன் தன் சதித் தொழிலைச் செய்யலாம் என்று எண்ணி ஓடி வந்தாள். அத்தை செய்த உயிர்த் தியாகத்தைத் தானும் செய்ய வேண்டுமென்று எண்ணினாள். என் தந்தையைத் தன் உடலினால் மறைத்து, அவர் மீது விழும் அடுத்த ஆயுதத்தைத் தான் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள். கட்டிலில் என் தந்தையைக் காணாதிருக்கவே தான் 'ஐயோ!' என்று அலறினாள். சக்கரவர்த்தி அங்கேயே இருந்திருந்தால், என் தந்தை, தாய் இருவரில் ஒருவர் இன்று இறந்திருப்பார்கள். சமுத்திரகுமாரி! உன் அத்தை இந்தச் சோழ குலத்துக்கும் சோழ நாட்டுக்கும் எவ்வளவு பெரிய சேவை செய்திருக்கிறாள் என்பதை இப்போது உணர்ந்தாயா? சதிகாரனுடைய ஆயுதத்தினால் சக்கரவர்த்தி மாண்டிருந்தால், சோழ ராஜ்யம் சின்னாபின்னப்பட்டுப் போய் விடும். பழுவேட்டரையர் குலத்துக்கு என்றென்றும் மாறாத பழிச் சொல் ஏற்படும். என் தந்தையின் உயிரையும் தாயின் உயிரையும் மட்டும் உன் அத்தை காப்பாற்றவில்லை. பழுவேட்டரையரின் குலப் பெயரையும் காப்பாற்றினாள். சோழ நாட்டுக்கே பெரும் விபத்து நேராமல் காப்பாற்றினாள். சோழ வம்சத்துக்கே குல தெய்வம் ஆனாள். பூங்குழலி! உன் அத்தைக்காக இனி நான் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட விடப் போவதில்லை. அவளுக்காக நீயும் அழ வேண்டியதில்லை. வேறு யாரும் துக்கப்பட வேண்டியதில்லை! இத்தகைய தெய்வ மரணம் யாருக்குக் கிடைக்கும்? முப்பது

வருஷங்களாகப் பிரிந்திருந்த பதிக்காக உயிரைக் கொடுக்கும் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்? அவருடைய மடியிலே தலையை வைத்துக்கொண்டு நிம்மதியாக உயிரை விடும் பேறு யாருக்குக் கிடைக்கும்?'' என்று கூறி விட்டு, இளவரசர் மீண்டும் ஒருமுறை சுற்று முற்றும் பார்த்தார்.

அந்த அறையிலும் வாசற்படி அருகிலும் நின்றவர்கள் அனைவரும் தம்முடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டார். மேலும் கூறினார்:

"பூங்குழலி! உன் அத்தை இறந்து விட்டால் நீ அனாதை ஆகி விடுவாய் என்று அஞ்ச வேண்டாம். நீ இன்று செய்த உதவியை நான் என்றும் மறக்க மாட்டேன். உன்னிடம் என்றென்றும் நன்றியுள்ளவனாயிருப்பேன். நான் ஒருவேளை மறந்து விட்டாலும், சின்னப் பழுவேட்டரையர் மறக்க மாட்டார். உன் அத்தையும் நீயும் இன்று அவருக்கு எத்தகைய உதவி செய்தீர்கள்? சக்கரவர்த்தியின் மீது வேலோ, கத்தியோ பாய்ந்திருந்தால் உலகம் என்ன சொல்லியிருக்கும்? தஞ்சைக் கோட்டைத் தளபதியான பழுவேட்டரையரையும் அந்தப் பாதகச் செயலுக்கு உடந்தை என்றுதான் ஊரார், உலகத்தார் சொல்லுவார்கள். கோட்டை வாசலில் கொடும்பாளூர் வேளார் வேறு காத்திருக்கிறார். பழுவூர்க் குலத்தை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு அவருக்கு வேண்டிய காரணம் கிடைத்திருக்கும். அவ்வளவு ஏன்? இன்றைக்கு நான் உன் உதவியினால் கோட்டைக்குள் வராதிருந்தால், கோட்டைத் தளபதியின் மேல் எனக்குக் கூடத்தான் சந்தேகம் உதித்திருக்கும். ஆகையால் சின்னப் பழுவேட்டரையர் மற்ற எல்லோரையும் விட உன்னிடம் அதிக நன்றி செலுத்த வேண்டும். அவரிடம் நீ என்ன பரிசு கேட்டாலும் கொடுப்பார். அவருடைய சொத்திலே பாதியைக் கேட்டாலும் கொடுத்து விடுவார்!''

இவ்வாறு இளவரசர் கூறிய போதுசின்னப் பழுவேட்டரையரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய கடமையை அவர் சரியாக நிறைவேற்றவில்லையென்பதை அவருக்கு ஒருவாறு உணர்த்த விரும்பியே மேற்கண்டவாறு பேசினார். அதைச் சின்னப் பழுவேட்டரையர் அறிந்துகொண்டார் என்பதை அவருடைய முகத்தில் தோன்றிய வேதனை நன்கு எடுத்துக் காட்டியது. அவருடைய முகத்தில் சாதாரணமாகக் குடிகொண்டிருந்த கம்பீரத் தோற்றம் போய்விட்டது. யாரையும் இலட்சியம் செய்யாத, எதற்கும் அஞ்சாத, வீரப் பெருமிதத்தின் அறிகுறி இப்போது அந்த முகத்தில் இல்லவே இல்லை.

போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடி வந்த வீரன் ஒருவன், பலர் ஏகம் படியாக இந்த உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்ததில் என்ன பயன் என்று வெட்கி மாழ்கும்பாவனை அவருடைய முகத்தில் இப்போது காணப்பட்டது.

இளவரசர் முதலில் கூறியதையெல்லாம் கேட்டு உள்ளமும் உடலும் உருகி நெகிழ்ந்து கொண்டிருந்த பூங்குழலி அவர் பரிசைப் பற்றிச் சொன்னதும் பழைய ஆக்ரோஷங் கொண்ட சமுத்திர குமாரியாகி விட்டாள்.

"இளவரசே! எனக்கு யாருடைய நன்றியும் தேவையில்லை; பரிசும் வேண்டியதில்லை. எனக்குத் தஞ்சம் அளிக்கச் சமுத்திர ராஜா இருக்கிறார். என் படகும் கால்வாய் முனையில் பத்திரமாயிருக்கிறது. இதோ நான் புறப்படுகிறேன். ஒருவேளை என் அத்தை உயிர் பிழைத்தால்...? இல்லை, அது வீண் ஆசை! காலையிலேயே என் அத்தை சொல்லி விட்டாள். வரப் போவதை உணர்ந்து தான் சொன்னாள். இனி அவள் பிழைக்கப் போவதில்லை. எனக்கு இங்கே வேலையும் இல்லை. என்றாவது ஒருநாள் தாங்களும்

"கொடும்பாளூர் இளவரசியும் கோடிக் கரைக்கு வந்தால்..." என்று கூறிப் பூங்குழலி வானதி இருந்த இடத்தை நோக்கினாள். அந்தப் பெண் அகல விரிந்த கண்களினால் தன்னையும் இளவரசரையும் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தாள். "சீச்சி! இது என்ன ஆசை? நான் போகிறேன்" என்று கூறி விட்டு வாசற்படியை நோக்கி விரைந்து நடந்தாள்.

இதுவரையில் திக்பிரமை கொண்டவளைப் போல் நின்றிருந்த வானதிக்கு அப்போது தான் சிறிது தன்னுணர்வு வந்தது. அவள் பூங்குழலியின் அருகில் வந்து, "என் அருமைத் தோழி! நீ எங்கே போகிறாய்? நானும் உன்னைப் போல் அநாதைதான்...!" என்று மேலும் பேசுவதற்குள், பூங்குழலி குறுக்கிட்டாள். "தேவி! நான் தங்கள் அருமைத் தோழியும் அல்ல; தாங்கள் என்னைப் போல் அநாதையும் அல்ல. சீக்கிரத்தில் பழையாறை இளையபிராட்டி வந்து விடுவார்!" என்றாள்.

வானதிக்கு அப்போதுதான் உண்மையில் இளையபிராட்டியின் நினைவு வந்தது. "ஐயோ! அக்காவுக்கு இங்கு நடந்ததெல்லாம் ஒன்றும் தெரியாதே! செய்தி சொல்லி அனுப்ப வேண்டுமே?" என்றாள்.

"அதற்கும் ஒரு கவலையா? கோட்டை வாசலில் தங்கள் பெரிய தகப்பனார் இருக்கிறாரே! அவரிடம் சொன்னால் செய்தி அனுப்புகிறார்!" என்று கூறிவிட்டுப் பூங்குழலி வழி மறிப்பவள் போல் நின்ற வானதியைக் கையினால் சிறிது நகர்த்திவிட்டு மேலே சென்றாள்.

வாசற்படிக்கு அருகில் சின்னப் பழுவேட்டரையர் மறுபடியும் அவளை வழிமறித்து நிறுத்தினார்.

"பெண்ணே! பொன்னியின் செல்வர் கூறியதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் கூறியது முற்றும் உண்மை. பழுவூர்க் குலத்துக்கு அழியாத அபகீர்த்தி உண்டாகாமல் நீ காப்பாற்றினாய். உனக்கு நான் அளவில்லாத நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். நீ என்ன பரிசு வேண்டுமென்று கேட்டாலும் தருகிறேன்" என்றார்.

"பூங்குழலி துயரப் புன்னகையுடன், தளபதி! இங்குள்ளவர்களில் சிலருக்குச் சக்கரவர்த்தி உயிர் பிழைத்ததில் சந்தோஷம். சிலருக்கு அவர் நடமாடும் சக்தி பெற்றதில் சந்தோஷம். இன்னும் சிலருக்குப் பழுவேட்டரையர் குலம் அபகீர்த்திக்கு உள்ளாகாததில் மகிழ்ச்சி. என் அத்தைக்கு நேர்ந்த துர் மரணத்தைப் பற்றி யாருக்கும் கவலையிருப்பதாகத் தெரியவில்லை. நானாவது அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா? என் அத்தையைக் கொன்றவன் எங்கே போனான் என்று தேடிக் கண்டுபிடிக்கப் பார்க்கிறேன். தயவு செய்து எனக்கு வழியை விடுங்கள்!' என்றாள்.

பூங்குழலியின் இந்த வார்த்தைகள் கோட்டைத் தளபதி காலாந்தக கண்டரைத் தூக்கி வாரிப் போட்டன.

"பெண்ணே! உனக்கு நான் தோற்றேன். கொலைகாரனை விட்டு விட்டுச் சும்மா நின்று கொண்டிருக்கிறேன். அவனைக் கண்டுபிடிக்காவிட்டால், சக்கரவர்த்தி பிழைத்ததினால் மட்டும் என் பழி தீர்ந்து விடாது. உன் வார்த்தைகளில் நான் அவ நம்பிக்கை கொண்டதே தவறு! கொலைகாரன் எங்கே போயிருப்பான்! என்னைத் தள்ளிவிட்டு ஓடினான். ஆம்! ஆம்! சுரங்க வழிக்குத்தான் போயிருப்பான். வா! எனக்கு உதவியாக வா! வேறு யாரையும் அழைத்துப் போக விருப்பம் இல்லை! அவன் மட்டும் என்னிடம் அகப்படட்டும்! என்ன செய்கிறேன், பார்!"

இவ்விதம் சொல்லிக்கொண்டே சின்னப் பழுவேட்டரையர் தம் இரும்புக் கையினால் பூங்குழலியையும் பிடித்து இழுத்துக்கொண்டு சிற்ப மண்டபத்தை நோக்கி விரைந்து சென்றார்.

அந்த அறையில் இருந்த மற்ற எல்லாரும் அப்படி அப்படியே நின்றார்கள். இளவரசர் விருப்பத்தை அறிந்து



கொண்டு சக்கரவர்த்தியின் அருகில் போகாமல் தூரத்தில் ஒதுங்கி நின்றார்கள். எல்லாருடைய கண்கள் மட்டும் சக்கரவர்த்தியின் பேரிலும், அவர் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த மாதரசியின் பேரிலும் இருந்தன.

ஆனால் சுந்தர சோழரும் மந்தாகினியுமோ ஒருவரோடொருவர் பரிபூரணமாய்க் கலந்து போயிருந்தார்கள். மற்றவர்களைப் பற்றிய எண்ணமே அவர்களுடைய நெஞ்சில் புகுவதற்கு இடமிருக்கவில்லை. முப்பது வருஷத்து வாழ்க்கையைச் சில நிமிஷ நேரத்தில் நடத்த முடியுமா என்பது பற்றி மனோதத்துவ விற்பன்னர்கள் பொது முறையில் என்ன சொல்லுவார்களோ, தெரியாது. ஆனால் சுந்தர சோழரும் மந்தாகினியும் அந்தச் சில நிமிஷ நேரத்தில் பன்னெடுங்கால வாழ்க்கையை நடத்தினார்கள் என்பதில் சந்தேகம் சிறிதுமில்லை. முப்பது வருஷத்தில் ஒருவரோடொருவர் பேசக்கூடியதையெல்லாம் அவர்கள் பேசிக் கொண்டார்கள். மந்தாகினி தனக்குரிய நயன பாஷை மூலமாகவே பேசினாள்.

சுந்தர சோழர் பெரும்பாலும் அந்த பாஷையை அறிந்துகொண்டார். இளம் பிராயத்தில் பூதத் தீவிலே அவர் சில மாத காலம் மந்தாகினியுடன் சொர்க்க வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்தில் அவளுடைய சமிக்ஞை பாஷையையும் நன்கு தெரிந்து கொண்டிருந்தார். அவற்றை அவர் இன்றளவும் மறந்து விடவில்லை. ஆகையால் மந்தாகினி இப்போது கண்களால் மட்டுமே பேசியபோதிலும் அவருடைய உள்ளம் அவள் மனத்தில் உதித்த எண்ணங்களை அக்கணமே



தெரிந்துகொண்டது. அப்படி அதிகமாக மந்தாகினி விஷயம் எதுவும் சொல்லி விடவும் இல்லை.

"தங்கள் பேரில் எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. உலகையாளும் சக்கரவர்த்தியாகிய தாங்கள் எங்கே? கரையர் மகளும் ஊமையும் செவிடுமான நான் எங்கே? தங்கள் முன் வராமல் நான் தான் இத்தனை காலமும் மறைந்து திரிந்துகொண்டிருந்தேன். அவ்வப்போது தூரத்தில் நின்று தரிசித்து மனத்தைத் திருப்தி செய்துகொண்டிருந்தேன். உயிரை விடும் தருணத்தில் தங்கள் மடியில் படுத்து உயிரை விடும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே? இதைக் காட்டிலும் எனக்கு வேறு என்ன வேண்டும்?" – இவ்வளவுதான் மந்தாகினி கூறியது. இதையே திருப்பித் திருப்பி அவளுடைய உள்ளமும் கண்களும் சொல்லிக் கொண்டிருந்தன. அவளுடைய முகத்திலோ எல்லையற்ற ஆனந்தம் ததும்பிக்கொண்டிருந்தது. விலாப்புறத்தில் வேல் குத்தி வெளியிலும் வந்திருந்ததினால் அவள் சிறிதும் வேதனைப் பட்டதாக அவள் முகக் குறியிலிருந்து



தெரியவில்லை. அவள் அடியோடு தன் தேகத்தைப் பற்றிய நினைவை இழந்து விட்டிருந்தாகக் காணப்பட்டது. பறவை கூண்டிலிருந்து கிளம்பும் தருணம் நெருங்கிவிட்டது. இனி, கூண்டைப் பற்றி அந்தப் பறவைக்கு என்ன கவலை இருக்கப் போகிறது?

சுந்தர சோழரும் தமது உடம்பைப் பற்றிய நினைவை மறந்து விட்டிருந்தார். அதனால்தானே அவர் தமது கால்கள் பலவீனமடைந்திருந்ததைக் கூட மறந்து கட்டிலிலிருந்து இறங்கி மந்தாகினியிடம் ஓடி வர முடிந்தது.

ஆனால் சுந்தர சோழர் மந்தாகினியைப்போல் சில வார்த்தைகள் சொல்வதோடு திருப்தி அடையவில்லை. எத்தனை எத்தனையோ விஷயங்களை அவர் சொல்லிக்கொண்டேயிருந்தார். அவருடைய கண்கள் சொல்லிய விஷயங்களை அவருடைய உதடுகள் வார்த்தைகளாக முணுமுணுத்துக் கொண்டேயிருந்தன. அந்த அறையிலிருந்த மற்றவர்களுக்கு அவர் பேசிய வார்த்தைகள் ஒன்றுகூடப் புரியவில்லை. ஆனால் மந்தாகினிக்கு எல்லாம் விளங்கிக் கொண்டு வந்தது. ஆமோதிக்க வேண்டிய இடத்தில் ஆமோதித்தாள்; மறுக்க வேண்டிய இடத்தில் தலையை ஆட்டி மறுத்தாள்; ஆனந்தமடைய வேண்டிய இடத்தில் ஆனந்தப்பட்டாள்; ஆறுதல் கூற வேண்டிய இடத்தில் ஆறுதலும் தெரிவித்தாள்.

"என் உயிருக்கு உயிரானவளே! நீ இன்று எனக்காக உன் உயிரை விடுகிறாய்! என் உயிர் மட்டும் எத்தனை நாள் இருக்கும் என்று எண்ணுகிறாய்? நான் கல் நெஞ்சமுள்ள பாவிதான்; ஒத்துக் கொள்கிறேன். இராஜ்யம் ஆளும் விதிக்குப் பிறந்தவர்கள் இவ்விதம் நெஞ்சைக் கல்லாகச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லாவிடில் இராஜ்ய நிர்வாகம் எப்படி நடக்கும்? பூதத் தீவில் நான் உன்னை விட்டு விட்டு வந்தது முதலில் நான் செய்த பெருங்குற்றம். அதன் விளைவாக இன்னும் பல குற்றங்களைச் செய்ய வேண்டியதாயிற்று. அந்தச் சொர்க்கத்துக்கு இணையான தீவில் நாம் எவ்வளவு ஆனந்தமாக வாழ்ந்தோம்? அது நீடித்திருக்கக் கொடுத்து வைக்கவில்லையே? கடவுளே சதி செய்து விட்டாரே! என்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் சதி செய்து விட்டார்களே? யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆனதும் உன்னைத் தேடி வர வேண்டுமென்றிருந்தேன். உன்னைத் தேடிக் கோடிக்கரை வரையில் ஓடி வந்தேன். பாவிகள் நீ கடலில் குதித்துச் செத்து விட்டாய் என்று சொன்னார்கள். என் பிராண சிநேகிதன் என்று எண்ணியிருந்த அநிருத்தனே ஏமாற்றி விட்டான்... ஆமாம், ஆமாம்! நீ சொல்வது தெரிகிறது. நீ கடலில் குதித்தது உண்மைதான் என்றும் பிறகு யாரோ உன்னைக் காப்பாற்றியதாகவும் சொல்லுகிறாய். ஆனால் இது அநிருத்தனுக்குத் தெரிந்திருந்தும் அவன் சொல்லவில்லை. அதனால் வந்த விபரீதத்தைப் பார்! உன்னைப் பார்க்க நேர்ந்தபோதெல்லாம் உன் ஆவியைப் பார்ப்பதாக எண்ணிக்கொண்டேன். என்னைப் பழி வாங்குவதற்காக வந்து சுற்றுகிறாய் என்று நினைத்துக்கொண்டேன். என் அருமைக் குமாரனை நீ காவேரி வெள்ளத்திலிருந்து எடுத்துக் காப்பாற்றியிருக்க, நீதான் அவனைக் காவேரியில் தள்ளி விட்டாய் என்று எண்ணிக்கொண்டேன். ஆகா! நீ மட்டும் உயிரோடிருக்கிறாய் என்று அறிந்திருந்தால், என் வாழ்க்கை எப்படியெல்லாம் இருந்திருக்கும்? இந்தப் பெரிய சாம்ராஜ்யத்துக்காக உன்னை நான் கைவிட்டிருப்பேன் என்று நினைக்கிறாயா! ஒரு நாளும் இல்லை...!"

இவ்விதம் சுந்தர சோழர் தம் உள்ளத்தில் பொங்கித் ததும்பிய எண்ணங்களையெல்லாம் வாய் வார்த்தைகளினால்

முணுமுணுத்துக் கொண்டே வந்தார். கடைசியாக அவர் கூறினார்:-

"இரண்டு நாளைக்கு முன் நீ என் முன் வந்தபோது உன் மேல் விளக்கை விட்டெறிந்தேன். உன்னை மறுபடி பார்த்தபோதெல்லாம் அருவருப்புக் காட்டினேன். அதற்காக வெல்லாம் நீ என்னை மன்னிக்க வேண்டும். பல வருஷ காலமாக நீ ஆவியாக வந்து என்னைத் துன்புறுத்துகிறாய் என்ற எண்ணத்தில் இருந்தேன். நள்ளிரவில் நீ இதே அறையில் என் முன் தோன்றி ஏதேதோ கூறினாய். என் மக்களை நீ சபிக்கிறாய் என்று எண்ணிக்கொண்டேன். அப்போது ஏற்பட்ட வெறுப்பு உன்னை நேரில் பார்த்தபோதும் தீரவில்லை. உன்மையில், நீ எங்கள் குலதெய்வமாக வந்தாய்! எனக்கும் என் மக்களுக்கும் தீங்கு நேராமல் தடுப்பதற்காக வந்தாய்! அதையெல்



லாம் நான் தெரிந்து கொள்ளவில்லை. என் மகள் குந்தவை எடுத்துக் கூறிய பிறகுதான் தெரிந்தது. ஐயோ! எப்பேர்ப்பட்ட தவறு செய்தேன்! அதற்காகவெல்லாம் என்னை மன்னித்துவிடு! உன்னிடம் எனக்குள்ள அன்பை இனி எப்படிக் காட்டுவேன்? அதற்கு வழியில்லாமல் செய்து விட்டாயே! என் குமாரர்களுக்குப் பட்டம் கட்ட வேண்டாமென்று சொன்னாயே, அதன் நியாயம் எனக்கே தெரிந்திருக்கிறது. ஏன் தலையை அசைக்கிறாய்? என் நன்மைக்காகவும் என் குலத்தின் நன்மைக்காகவுமே சொன்னாய்! அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் இங்குள்ளவர்கள் ஏதேதோ சொல்லி என்னைப் பைத்தியமாக அடிக்கப் பார்க்கிறார்கள். உனக்குக் குழந்தை பிறந்ததாகச் சொல்கிறார்கள். அது உண்மையானால் சொல்லிவிடு! உன் மகன் இருந்தால், சொல்லி விடு! அவனுக்கு என்னாலியன்றதைச் செய்து உனக்குச் . செய்த துரோகத்துக்குப் பரிகாரம் தேடுகிறேன்..."

இவ்விதம் சுந்தர சோழர் கூறிய போது மந்தாகினி பரக்கப் பரக்க அவரைப் பார்த்துவிட்டுப் பிறகு சுற்று முற்றும் பார்த்தாள். வாசற்படியின் அருகில் நின்ற பொன்னியின் செல்வர் மீது அவளுடைய பார்வை தங்கி விட்டது.

உடனே இளவரசர் தந்தையும் தாயும் இருந்த இடத்தை நெருங்கி வந்தார். தாயின் அருகில் உட்கார்ந்தார்.

மந்தாகினி இளவரசரைத் தன் கையினால் தொட்டுக்கொண்டு சக்கரவர்த்தியின் திருமுகத்தைப் பார்த்தாள். "இவன்தான் என் புதல்வன்!" என்னும் பொருள் அந்தப் பார்வையிலிருந்து மிகத் தெளிவாக வெளியாயிற்று.

இவ்வாறு இரண்டு மூன்று தடவை மந்தாகினி சக்கரவர்த்தியையும் பொன்னியின் செல்வரையும் மாறி மாறிப் பார்த்தாள். பின்னர் கண்களை மூடிக் கொண்டாள். சிறிது நிமிர்ந்திருந்த அவளுடைய தலை, – சக்கரவர்த்தியின் மடியில், – நன்றாகச் சாய்ந்தது.

மந்தாகினியின் உயிர் அவளுடைய உடலை விட்டுப் பிரிந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தி விம்மி அழுததை இன்று வரை யாரும் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை.

இன்றைக்கு அவர் 'ஓ'வென்று கதறி அழுததைப் பார்த்தும் கேட்டும் எல்லாரும் திகைத்துப் போனார்கள்.

இளவரசர் அருள்மொழிவர்மர் மட்டுமே மனத் தெளிவுடன் இருந்தார்.

அவர் சக்கரவர்த்தியைப் பார்த்துக் கூறினார்:- "தந்தையே! என் அன்னையின் மரணத்துக்காகத் தாங்கள் வருந்த வேண்டியதில்லை. அவர் மரணமடையவேயில்லை. தெய்வமாக அல்லவோ மாறியிருக்கிறார்? என்றென்றைக்கும் நம் சோழ வம்சத்துக்கு அவர் குல தெய்வமாக விளங்கி வருவார்!" என்றார்.

ஆயினும், சுந்தர சோழர் விம்மி அழுவது நின்றபாடில்லை. மந்தாகினியின் மரணத்துக்காகத்தான் அவர் அழுதாரா? அல்லது அதே சமயத்தில் வெகு தூரத்தில் நடந்த இன்னொரு துயர சம்பவத்தின் அதிர்ச்சி அவர் உள்ளத்தில் தோன்றியதனால் அழுதாரா என்று யார் சொல்ல முடியும்?

இளவரசர் அருள்மொழிவர்மர் கூறிய தேறுதல் மொழி மட்டும் உண்மையாயிற்று. பொன்னியின் செல்வர் பிற்காலத்தில் இராஜராஜ சோழர் என்ற பெயருடன் சிங்காதனம் ஏறியபோது 'ஈழத்து ராணி' என்று அவர் அழைத்த மந்தாகினி தேவியின் ஆலயத்துக்காகத் தஞ்சையில் ஒரு கோயில் எடுப்பித்தார். அது சில காலம் 'சிங்கள நாச்சியார் கோவில்' என்ற பெயருடன் பிரபலமாக விளங்கி வந்தது. நாளடைவில் அதன் பெயர் திரிந்து 'சிங்காச்சியார் கோவில்' என்று ஆயிற்று. இன்றைக்கும் தஞ்சை நகரின் ஒரு பகுதியில் 'சிங்காச்சியார் கோவில்' என்ற பெயருடன் ஒரு சிறிய சிதிலமான கோவில் இருந்து வருவதைத் தஞ்சை செல்லுகிறவர்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)


HAPPY,
SAFE
DIWALI!

தேர்தல் வந்தாச்!



''நம்ம தலைவருக்கு துணிச்சல் ரொம்ப ஜாஸ்தி யாக்கும்!''
''எப்படிச் சொல்றே?''
''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தனி நீதி மன்றங் களைத் தனியார் மய மாக்குவோம்னு அறிக்கை விட்டிருக்கார்!''

— புளியரை கணேசன்

''தலைவர் உஷார் பேர்வழின்னு எப்படிச் சொல்றீங்க?''
''இப்பவே முன்ஜாமீன் நிதி வசூல் பண்ண ஆரம்பிச்சுட்டாரே!''

- தஞ்சை ராகவ், மகேஷ்

''அந்த எம்.எல்.ஏ. மாறு வேஷத்துல தொகுதிக்குள் நுழைகிறாரே, மக்களோட குறைகளைத் தெரிஞ்சுக்கவா...?''
''ஊஹூம், தர்மஅடி வாங்காமலிருக்க...!''

— சீர்காழி வி. ரேவதி



''நான் தனிக் கட்சி ஆரம் பிக்கப் போறேன்!''
''இப்பவே நீங்க இருக்கிற கட்சியிலே தனியாத்தானே இருக்கீங்க. அப்புறம் தனிக் கட்சி வேறே எதுக்கு?''

- ஐயன்

''தலைவரே! கூட்டணியைப் பலப்படுத்துங்கன்னு நீங்க பேசிருக்கக் கூடாது!''
''ஏன்யா?''
''நம்ம கட்சிக் கணக்குல ஹார்லிக்ஸ், போர்ன்விட்டானு எடப்பட்ட பாட்டில்கள் தொழை மைக் கட்சியினர் வாங்கிட்டுப் போயிட்டாங்க!''

— அம்பை தேவா

அன்பான வேண்டுகோள்



சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 350 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இவ் வருடம் தீபாவளி திருநாளை மனமகிழ்ச்சியுடன் கொண்டாட பொது மக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறது.

பொது மக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொது மக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது புத்தாடைகள், பட்டாசு, இனிப்பு, எண்ணெய், சீயக்காய், அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளை நன்கொடை கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ/டிராப்டாகவோ "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்" என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாகி,
"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"
நெ. 20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
தொலைபேசி எண்கள் :
2369 078, 2369 444.

சென்னையில் நன்கொடை கொடுக்க வேண்டிய முகவரி :
திரு. ரத்தன் பிரகாஷ் மல்ஹோத்ரா,
பிரகாஷ் டிரேடிங் கம்பெனி,
நெ. 156, தம்பு செட்டி தெரு,
சென்னை - 600 001.
தொலைபேசி எண்கள் :
5342 428, 5342 803, 534 2587

குருகுலம் : காட்டாங்கொளத்தூர் : 04114-52345 (STD)
Local call : 915 52345

பின்குறிப்பு : காசோலையாகவோ/டிராப்டாகவோ "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்" என்ற பெயரில்தான் அனுப்ப வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறோம்.

E-mail : sivanand@md2.vsnl.net.in


FOR MORE DETAILS ABOUT OUR ASHRAM VISIT OUR WEBSITE:

http: www.indiadirect.com/sivananda-ashram

சுப்ரமணிய சுவாமி விடுத்த ஓர் அறிக்கையில் 'நான் முதல்வரானால் இரண்டு நாளில் வீரப்பனைப் பிடித்து விடுவேன்' எனக் கூறினார். அதன்படி அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி சு. சுவாமியை 'முதல்வன்' ஸ்டைலில் ஒருநாள் முதல்வராக்கினால் என்ன நடக்கும் என்று ஒரு சின்ன (விபரீத) கற்பனை...

காட்சி - I

(பக்கத்தில் பணிவாய்



அமர்ந்திருக்கும் ஆற்காட்டாரிடம் திரும்பி கலைஞர் 'எல்லோரும் வந்துட்டாங்களா?' எனக் கேட்க, ஆற்காட்டார் பவ்யமாய்த் தலையாட்டுகிறார். பின் எல்லோரையும் நோக்கித் திரும்பி.)

கலைஞர்:- கொள்கையிலே எவ்வளவு வேற்றுமை இருந்தாலும் கொள்ளையனைப் பிடிக்க ஒற்றுமையாய் வந்திருக்கும் எல்லோருக்கும் என் நன்றி. சமத்துவபுரமும், உழவர் சந்தையும் கண்ட கழக ஆட்சியிலே தமிழ் மக்களுக்கு வந்திருக்கும் இந்தச் சோதனையைப் போக்க 'நமக்கு நாமே' திட்டத்தின்படி மக்களே சேர்ந்து வீரப்பனைப் பிடிக்கும் புதிய திட்டத்தை நாம் கொண்டு வர இருக்கிறோம்.

இதை இடைமறித்து ஜெயலலிதா:- இது தமிழக மக்களை ஏமாத்துற வேலை. கருணாநிதி திட்டமிட்டு சதி செய்யறார். எனக்கு வந்திருக்கிற தகவல்படி கடந்த ஆறு மாதமா வீரப்பன் ரகசியமாய் கோபாலபுரம் வந்து போயிருக்கான். அத்வானியும், கருணாநிதியும் கலந்து பேசி வீராசாமியையும், கோபா லையும் வீரப்பன்கிட்ட தூது அனுப்புனதாவும், தகவல் வந்திருக்கு. இது எல்லாமே என்னையும், சசிகலாவையும் ஜெயிலுக்கு அனுப்பிட்டு ஸ்டாலினை முதல்வராக்க நடக்கற சதி. சீக்கிரமே இதக் கண்டிச்சி

முருகன்

காளிமுத்து ஒரு அறிக்கை விடுவார் என்ற படி காளிமுத்துவைப் பார்க்க,

காளிமுத்து:

வடகறி வடைபாயாசம் ஆகாது
மட்டன் கறி மாங்கா ஊறுகாய் ஆகாது
கருவாடு மீனாகாது
கலைஞர் வீரப்பன பிடிக்க முடியாது, புரட்சித் தலைவி நாமம் வாழ்க!



ஒரு நாள் முதல்வர்!

இதைக் கேட்டுக் கடுப்புடன் ஆற்காட்டார்:- ஆமா இதவுட்டா இவருக்கு எதுவும் தெரியாது. அண்ணாவோட தம்பிக்கே அடுக்கு மொழியா? நாங்களுந்தான் சொல்லுவோம்,

சொத்து வழக்குல சொகமா இருக்க முடியாது
டான்சி வழக்குல 'டைவ்' அடிக்க முடியாது
'பிளசன்ட்ஸ்டே' வழக்குல பிச்சிக்க முடியாது
எதுலயும் 'எஸ்கேப்' ஆக முடியாது.

சொல்லிவிட்டு கலைஞரைப் பார்க்க கலைஞர் 'உடன் பிறப்பே'யென அணைத்துக் கொள்கிறார்.

அமைதியாய் உட்கார்ந்திருக்கும் மூப்பனாரிடம் ஆற்காட்டார்:- நீங்க என்ன சொல்றீங்க...?

மூப்பனார்:- ராஜ்குமாரை வீரப்பன் கடத்திட்டான். சில நிபந்தனைகள் வச்சிருக்கான். கோபால் மூணு தடவ காட்டுக்குப் போயிட்டு வந்திருக்கார். இதுல கலைஞர் சொன்னது அவர் கருத்து. அந்த அம்மையார் சொன்னது அவங்க கருத்து. இனி சொல்லப் போறவங்களும் அவங்கவங்க கருத்து சொல்வாங்க.

கடுப்புடன் ஆற்காட்டார்:- சரி உங்க கருத்து என்னா...?

மூப்பனார்:- அத செயற்குழு கூடித்தான் முடிவு பண்ணனும், ஆனா ஒண்ணு சொல்றேன்! கூட்டணி ஆட்சி இல்லன்னா இப்படித்தான் நடக்கும். 2001-ல் காமராஜர் ஆட்சி அமைச்சி...

ஆற்காட்டார் (குறுக்கிட்டு):- சரி விடுங்க... விடுங்க... (கலைஞரிடம் திரும்பி) இவரக் கூப்பிடாதீங்கன்னு அப்பவே சொன்னேன், கேட்டீங்களா இப்பப் பாருங்க ஆரம்பிச்சிட்டாரு. பேசாம இந்தத் தடவ கோபாலோட இவரையும் அனுப்பினா வீரப்பன் துண்டக் காணோம் துணியக் காணோம்ன்னு நாட்டுக்குள்ள ஓடியாந்துருவான்.

வைகோ:- வன்னிக்காட்டைப் போல சத்தியமங்கலத்துக்கும் ஒரு நீண்ட, நெடிய வரலாறு இருக்கிறது. வீரப்பன் கொண்டுள்ள தமிழுணர்வு நேற்று, இன்று வந்ததாய்த் தோன்றவில்லை. இருந்தாலும் ராஜ்குமார் அவர்களைக் கடத்தியது தவறு. இதில் வாஜ்பாய் அரசு சொல்வதைக் கேட்போம். அண்ணன் கலைஞர் ஆணையிட்டால் கள்ளப் பேருந்தேறி சத்தியமங்கலம் செல்லத் தயாராயிருக்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆ:- அய்யய்யோ...

ராமதாஸ்:- இந்தப் பிரச்னைத் தொடங்குனதுலேருந்து நான் சொல்றத ம.அரசும், த.அரசும் கண்டுக்கல. என்னோட தொண்டர்களை விட்டா வீரப்பன் காட்டுல இருக்கற எல்லா மரத்தையும் வெட்டி ரோட்டுல போட்டுருவாங்க அப்புறம் அவன் ஒளிய

இடமிருக்காது. ஈஸியா புடிச்சி பொது மன்னிப்பு கொடுத்துடலாம். இனியும் இந்த யோசனை பரிசீலிக்கப்படலைன்னா ஆதரவ வாபஸ் வாங்க வேண்டி வரும்....

வாழப்பாடி: ராமதாஸ் வன்முறையைத் தூண்டுகிறார். அவர் மேல நடவடிக்கை எடுக்கணும். இல்லன்னா அடுத்து 'அய்யாவுக்கு ஒரு மூடிய மடல்' வெளியிட வேண்டி வரும்...

(இந்த நேரத்தில் கனைத்தபடி சு.சுவாமி பேச ஆரம்பிக்கிறார்)

சு.சு:- என்னைக் கண்டுக்காம நீங்களா பேசிண்டு இருக்கிங்கோ... இதுக்காக உங்க மேலல்லாம் கேஸ் போடப் போறேன். *(எல்லோரும் பயமாய்ப் பார்க்க)* பயப்படாதிங்கோ வர்ற எலக்ஷன்ல என்னோட கூட்டணி வச்சிக்கறவா மேல உள்ள கேஸ்களை வாபஸ் வாங்கிடுவேன்.

ஆ:- சரி... சரி... இந்த வெவகாரத்துக்கு வாங்க...

சு.சு:- வீரப்பன் இப்பப் பெரிய கோஷ்டியா மாறிட்டார். அவானுக்கும் ஒசாமாபின்லேடனுக்கும் தொடர்பிருக்கு. இனின்ட்டனக் கடத்தப் போறா. அப்புறம் சந்திரிகா...

ஆற்காட்டார் (குறுக்கிட்டு):- அப்புறம் முஷாரபையும், ஜார்ஜ் ஸ்பைட்டையுமா..? முதல்ல இவர நாடு கடத்தணும்ப்பா!

சு.சு:- நடவடிக்கை எதுவும் சரியில்ல. நான் சி.எம். ஆனா ரெண்டே நாள்ல வீரப்பன புடிச்சிடுவேன்.

ஆ:- அது எப்படி....?

சு.சு:- சத்தியமங்கலம் ஹோட்டல்ல வீரப்பனுக்கு ஒரு டீ பார்ட்டி அரேன்ஜ் பண்ணிட்டாப் போச்சி...

கலைஞர்:- தேநீர் விருந்து கொடுப்பது எளிது. தே.ஜ. கூட்டணியில் இருப்பது கடினம். நீ திறந்து கொண்டு போக வீரப்பன் காடொன்றும் இட்லிக்கடையில்லை நண்பா... இட்லிக் கடையில்லை...

சு.சு:- நீங்க மழுப்பறேள்... என்னை ஒரு நாள் சி.எம். ஆக்கிப் பாருங்கோ அப்புறம் தெரியும்.

ஜெ:- இதுவும் கருணாநிதியோட சதி. ஏற்கெனவே சு.சுவாமியோட பேசி வச்சிக்கிட்டு பிரச்னையைத் திசை திருப்பறார்.

மூப்பனார்: கலைஞர் மீட்டிங் கூட்னாரு. நாமெல்லாம் வந்து அவங்கவங்க கருத்த சொல்லியிருக்கோம். இதுல சு.சுவாமி சொன்னது அவர் கருத்து. அது சரின்னு சொல்ல முடியாது. சரியில்லன்னும் சொல்லல. இது ஒரு கருத்து.

வை.கோ:- பாராளுமன்றத்திலேயே சு.சுவாமி எனக்கு நல்ல நண்பர். இருந்தாலும் இதில் மத்திய அரசு சொல்வதைக் கேட்போம்.

ராமதாஸ்: இத வாழப்பாடி ஆதரிச்சா எதிர்ப்போம்; அவர் எதிர்த்தா ஆதரிப்போம்.

வாழப்பாடி:- ராமதாஸ் ஆதரிச்சா எதிர்ப்பேன், எதிர்த்தா ஆதரிப்பேன்.

ஆ: நீங்க எதிர்க்கவும் வேணாம், ஆதரிக்கவும் வேணாம். பேசாம இருந்தா போதும்.

(கடைசியாய் எல்லோரும் பேசி சு.சுவாமியை ஒருநாள் முதல்வராக்க முடிவு செய்கிறார்கள். சு.சுவாமி போட்ட நிபந்தனையின்படி திரும்பவும் தேவாரத்தை ஒரு நாள் ஐ.ஜி.ஆக்குகிறார்கள். எல்லோரும் வழியனுப்ப மறுநாள் 'ஒன்டே' முதல்வரும் 'ஒன்டே' ஐ.ஜி.யும் ராஜ்குமாரை மீட்க புறப்படுகிறார்கள்.)

காட்சி - II

சத்தியமங்கலம் வனப்பகுதி

தேவாரம்: யோவ் நான் பாட்டுக்கு ஜாங்கிரி திங்கறது, ஜாகிங் போறதுன்னு ஜாலியா இருந்தேன். இப்படி மாட்டிவுட்டுட்டியே...

சு.சு:- நான் மட்டும் என்ன டீ பார்ட்டி வைக்கறது, டீலிங்ல வுட்றதுன்னு சுத்திக்கிட்டிருந்தேன். வழக்கம் போல யாரும் கண்டுக்க மாட்டான்னு சொன்னேன். இப்படி ஆகும்ன்னு யார் கண்டா....

(இப்போது தூரத்தில் கூட்டமாய் வீரப்

"தாயைக் கொன்ற இந்த வழக்கில் உன் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றி ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

"நான் தாயில்லாத அனாதைங்க. கருணை காட்டி என்னை விடுதலை செய்யுங்க!"

— எஸ். முத்துச் செல்வன்



குறையிலாப் பிறை நிலா

ஒளிமிகு சிறுவிழி ஓவிய அழகும்
எழிலூறு மழலை மொழிபொழி வாயும்

கன்னல் துணுக்கெனும் கையும் காலும்
இன்னல் விரட்டும் இன்பத் துள்ளலும்

அமுதமாய் விளங்கும் அழுகைச் சத்தமும்
குமுத வாயினில் குழலிச் சிரிப்பும்

இறையின் அருளோ? இயற்கை எழிலோ?
குறையிலாப் பிறைநிலா, குழந்தை
தானோ?

— சேலம் வலங்கொண்டான்



பன் வருவது தெரிய தேவாரம் திரும்பி ஓடப் பார்க்கிறார்)

சு.சு:– ஓய்... என்ன இது என்னை வுட்டுட்டு ஓடற... என்னமோ திரும்ப வந்தா வீரப்பன சுட்ருவேன் அது, இதுன்னீரு...

தே:– நீங்க மட்டும் முந்தா நாள் முஷாரஃப் பேசுனாரு, காத்தால கிளின்டன் பேசுனாரு, கோயம்பேடு பக்கத்துல கோஃபிஅன்னானைப் பார்த்தேன்னு பிலா வுடலியா அது மாதிரிதான்...

(இதற்குள் வீரப்பன் கோஷ்டி வந்து சுற்றி வளைத்துவிட இருவரும் நடுங்குகிறார்கள்.)

வீரப்பன்: அதாவது யாருய்யா நீங்க...?

(தேவாரத்தைக் காட்டி) **சு.சுவாமி:–** இவரத் தெரியாதா உங்களுக்கு. இவர்தான் முன்னாடி இங்க 'டென்ட்' போட்டிருந்த தேவாரம்.

வீரப்பன்: அதாவது நீதான் தேவாரமா... முன்னாடி பேப்பர்ல பார்த்தது. நம்ம சேத்துக்குளி சொன்னான் ரிட்டையர் கொடுத்துட்டாங்கன்னு. பார்க்க முடியாதுன்னு நெனச்சேன். நீயே வந்து மாட்டிக்கிட்ட... *(சு.சுவாமியைப் பார்த்து)* ஆமா... நீ யாரு...?

சு.சு: நான் ஜனதா கட்சித் தலைவர்...

வீ: இது என்னாப்பா கேள்விப்படாத பேரா இருக்கு. *(என்றபடி மாறனைப் பார்க்க மாறன் வீரப்பன் காதில் ஏதோ கிசு, கிசுக்கிறார்)*

வீ: ஓ... நாட்டுக்குள்ள கவுக்கறேன்... கவுக்கறேன்னு அலையறது நீ தானா. நமக்கு கலைஞர் அய்யாப் பேரத் தவிர யாரு பேரும் சட்டுன்னு வர மாட்டேங்குது. அதாவது இப்ப என்னைப் புடிக்க வந்திருக்கிங்க *(திரும்பி)* கோவிந்தா அந்தத் துப்பாக்கிய எடு.

சு.சு *(நடுங்கியபடி)*: அதெல்லாம் இல்ல வீரப்பா! ஆளுங்கட்சியில் யாரோ காட்டுக்குள்ள நெலத்த வளைச்சிப் போட்ருக்கறதா நியூஸ் வந்தது. அதான் கேஸ் போடலாம்னு பாக்க வந்தேன். *(தேவாரத்தைக் காட்டி)* இதோ இவருதான் உங்களைப் புடிக்க வந்தாரு.

தே: அய்யய்யோ... நான் சும்மா பழைய ஞாபகத்துல பிக்னிக் வந்தேன். இவரு பொய் சொல்றாரு.

வீ: ஏய் சும்மா சத்தம் போடாதிங்க. உங்கள சுட்டு நான் என்ன பண்ணப் போறேன். கொஞ்ச நாள் காட்டுல இருங்க. நாடு கொஞ்சம் நிம்மதியா இருக்கட்டும் *(திரும்பி)* எலேய் இவங்கள கொண்டு வாங்கடா.

(வீரப்பன் முன்னால் செல்ல, பின்னால் சு.சுவாமியும், தேவாரமும் புலம்பலுடன் இழுத்துப் போகப்படுகிறார்கள். மறுநாள் இருவரையும் விடுவிக்க கேசட்டில் நான்கு நிபந்தனைகளை வீரப்பன் அனுப்ப, அரசு பதிலுடன் இன்று கோபால் காட்டுக்கு விரைகிறார்) ○

க.சீ. சிவகுமார்

14



ஓடிக் கொண்டிருக்கிறது அமராவதி. அண்டமெனும் மாநதியும் ஓடுகிறது. அதில் வாழ்க்கைப் படகுகள் மிதக்கின்றன. கரை சேர்வது என்பதுதான் என்ன? மயானக் கரை சேர்தல்தானா? இந்தப் பூமியின் கால வெளியெங்கும் ஓடிய வாழ்க்கைப் படகுகள் யாருக்குச் சொந்தம்? நிரந்தர வாழ்க்கை யாருடையது? யாருடையதுமில்லை.

காலமே! சுவு இரக்கமற்ற நீ எப்படி இளம் படகுகளைக் கவிழ்க்கிறாய்? ஏன் கவிழ்க் கிறாய்? படகு மூழ்கிய செய்திகளைக் காதுக் கும் மூளைக்கும் தூரத்திலேயே நிறுத்திவிடும் வல்லமையும் சித்திக்கவில்லை யாருக்கும்.

ஓர் இரவு பதினொரு மணிக்கு விபத்தில் செத்துப் போனான் ரவி.

மறுநாளோ பள்ளியின் இறுதித் தேர்வு ஆரம்பித்த நாளாயிருந்தது. எழுதவும் செய் தார்கள் மாணவர்கள். எதற்காகவும் உலகம் நிற்குமா என்ன? தேர்வுக்கும் புறக்கணிப்புக் கும் ஆனது உலகம்.

பரீட்சை எழுதி முடித்த கையோடு பார்த்திபனும் பிரகாஷ""ம் ரவி வீட்டுக்கு ஓடி வந்தனர். முன்னமே பல மாணவர் களும் ஆசிரியர்களும் குழுமியிருந்தனர். செவ்வகமாய் நீண்ட ஒரு துணிப் பொதிவி னுள் இப்போது ரவி.

"அய்யோ... சார்" என சடலத்தின் மேல் பாய்ந்த பார்த்திபனையும் பிரகாஷையும் கலைச்செல்வனும் அன்வர் அலியும் பிடித்து இழுத்துக் கொண்டனர். அகாலத்தில் இறங்கியது ரவியின் வாழ்க்கைக் கொடி. கொடியிறங்கும் அஸ்தமனத்தின் காக்கைகள் கரைய வெப்பிலி மேடெங்கும் லசிம்கள் ஒலிக்கின்றன. லசிமின் ஒலி நீல வைரக் கற் களில் பட்டு எதிரொளியாய்த் திரிய அந்த வெளிச்சத்தில் இறங்கி வருகிறான் மரணத் தின் அதி தூதன். எப்போதும் உனனொரு வனாய் சர்வ ஆயுதங்களின் துணையோடும் அவனே மரணத்தைச் சம்பவிப்பான். ஐம் பொறிகளாலும், ஐம் பூதங்களாலும் - தற் செயலாயும் விபத்துகளையும் அவனால் மரணத்தைத் தர இயலுமெனக் காற்றின் கெக்கலி.


கலந்து விட்ட இசையோசைகளோ காற்றில் தன் உருவமில்லாதுகளைச் சேர்த்து விட்டிருக்கும். அதில் படிப்பினைகள் உண்டு. பாடங்களும் பாட பேதங்களும்



உண்டு. 'வீட்டுக்கு... வீட்டுக்கு மரணத்தின் படி உண்டு.'

கண்கொண்டு பார்க்க முடியவில்லை ரவி சாரின் மனைவியின் துக்கத்தை. எண்ணிப் பங்க முடியாமல் எடை போட்டுப் பங்கும் அன்பு ரவியுடையது. நேசிப்போ பற்றோ கொண்டிருக்கிற காரியத்தில் ரவியின் ஈடுபாடு மிக ஆத்மார்த்தமானது. உள்ளுக்குள் ஏதோ ஒரு குழந்தைத்தனமும். இதோ இந்தச் சந்தடிமிக்க வீட்டில் தன் போக்கில் விளையாடுகிற கோதாவரி

மாதிரி. கோலிக்குண்டை விட சற்றுப் பெரிதான ஒரு பிளாஸ்டிக் பந்தை வைத்துக் கொண்டு... தன் பிஞ்சுக் கைகளால் நிலத்தில் போடுவதும் அதை எடுத்து மீண்டும் நிலத்தில் போடுவதுமாக விளையாடுகிறாள். பந்துக்கும் தரைக்கும் இடையே அதன் பயணம் ஏழோ எட்டோ சென்ட்டிமீட்டர்கள். 'வாழ்க்கை இவ்வளவுதான். வாழ்க்கை இவ்வளவுதான்'– அரும்பொருள் உரைக்கிறதோ சிறிய பந்துபூமியே கோள வடிவம் இப்பந்து போல. பத்தோடு பதினொன்றாய் வந்து போனால் இத்தனை துக்கமில்லை ரவி! வெளியுள்ள வேப்ப மரத்தடி அமர்ந்துள்ளான் தங்கராஜ். உள்ளே நுழையவும் எதிர்கொள்ளவும் திராணி இல்லை. பருவம் முடிவதே வேதனை என்றவனுக்கு வாழ்க்கையே முடிவது எத்தனை வேதனை. வெயில் மணக்கும் வேப்பம் பூக் காலத்தில் மூங்கிலிலே முத்துப் பல்லக்கு. அமராவதி நதிக் கரையில் ரவியின் தகனம். எல்லா நதி தீரத்து நீரோட்டமும் பிணத்தை எரித்த வெளிச்சத்தைப் பிரதிபலித்தே இருந்திருக்கின்றன – வால்கா முதல் கங்கை வரை.



"குடி வந்து ஒரு மாசம்தான் ஆகுது. அதுக்குள்ள வீட்டைக் காலி பண்ணப் போறீங்களா... அநியாயம் சார் இது! உங்களை நம்பி சொந்தக்காரங்க, ஃபிரெண்ட்ஸ்.. எல்லார்கிட்டேயும் உங்க ஃபோன் நம்பரைக் கொடுத்திருக்கேன். இப்படி ஏமாத்திட்டீங்களே!"

– சீர்காழி வி. ரேவதி

எட்டுப் பரீட்சைகள்தான் என்றாலும் இடைவெளி விட்டுவிட்டுப் பதினெட்டு நாட்கள் நடந்தன. பார்த்திபனுக்குப் புத்தகத்தைத் தொடுவதே பெரும்பாடாக இருந்தது. ரவி சாரின் நினைவு அடிக்கடி வந்து போயிற்று.

நாள் செல்லச் செல்ல துக்கங்கள் வடிகின்றன. பரீட்சைத் தாள் இடையேயும் வருகிற வாழ்வின் ஞாபகங்களை எங்கு புதைக்க?

எடுத்து எறிவதற்கு பையில் உள்ள பொருட்கள் அல்ல ஞாபகங்கள். பிரகாஷும் பார்த்திபன் அளவு துயரப்பட்டான். பார்த்திபனை விட பிரகாஷ் மீது ரவிசாருக்கு ஈர்ப்பு அதிகம். பார்வைக்குத் தெரியாத சூட்சுமங்களினால் உணரப் படுவது இது. பார்த்தியும் பிரகாஷும் ஒருவருக்கொருவர் ஆறுதல், தேறுதல். விரும்புகிறவர்களுக்கு அதிக நாள் வாழ்கிறவர்கள் பாக்யவான்கள் அவ்வளவுதான். ஒருவிதமாகப் பரீட்சை முடிந்து விட்டது.

கடைசிப் பரீட்சை முடிந்து வெளிவரும் நாளில் கால்கள் பின்னிப் பின்னியிழுத்தது பார்த்திபனுக்கு. இனி பள்ளியோடு என்றென்றுமாய் உறவற்றுப் போகிறது. ஒருநாள் – ஒரே நாள் மார்க் ஷீட் வாங்க வரலாம் இனி.

அத்தியாயங்கள் முடிவடையத்தான் வேண்டும். ரவி சாரின் அறையில் கதவு சாத்திய இருளில் சுவர் சார்த்திய லசிம்களில் நூலாம் படை நெய்து கிடக்கும் இந்தக் கோடை விடுமுறை.

விடுமுறைகளில் அடிக்கடி பார்த்திபனைப் பிரகாஷும் பிரகாஷைப் பார்த்திபனும் சந்தித்தார்கள். இந்தத் துணையற்ற நேரத்தில் நேரம் கடத்துவது சிரமமாய் இருந்தது பார்த்திக்கு. அவனும் பிரகாஷும் அரவக்குறிச்சிக்கு ஒரு தடவை கரூருக்கு ஒரு தடவை சினிமா பார்க்கப் போய் வந்தார்கள்.

மாலைகளின் நேரங்களைப் பார்த்திபன் பள்ளப்பட்டி பிரிவு, ஒத்தமாந்துறை, சின்னதாராபுரம் இப்படி எங்காவது கழித்து வந்தான்.

வீட்டின் பகல் தனிமையில் காட்டில் தண்ணீர் பாய்ச்சுகையில் பள்ளி சார்ந்த நினைவுகள் வந்தாடிக் கொண்டிருந்தன. அசைபோடும் லயிப்பில் புன்முறுவலூற அதுவே இனிமை. இந்தச் சூழலைப் பிரிந்ததோ ஏகாந்தத்தின் கொடுமை.


லோகு, மோகன், அன்வர் இவர்களில் எவரையேனும் பார்க்கிற நாள் குஷியாய் இருக்கும். இப்போது வந்த பிரகாஷ் மின்னலெனத் தோன்றிய யோசனையைப் பார்த்திபனிடம் வெளியிட்டான்.

"டேய்... வித்யாவைப் போய்ப் பார்த்தா என்ன?"

"எதுக்கு?"

"சும்மா பாப்பம்."

"நீ காதலிக்கிறியா?"



நெற்றியில் சுண்ணாம்பு

திருமுருக கிருபானந்தவாரியார் வெளியூரில் முகாமிட்டிருந்த சமயம். ஒரு நாள் காலை அவர் தம் நெற்றியில் திருநீறு அணிந்துகொண்டிருந்தார். அதைக் கவனித்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கைகொட்டி, 'சாமியார் நெற்றிக்குச் சுண்ணாம்பு அடிக்கிறார் டோய்!' என்றான் தன் சகாக்களிடம்.

வாரியார் அவனைக் கூப்பிட்டுத் தம் அருகே நிறுத்திக் கொண்டு, "எதற்கு சுண்ணாம்பு அடிப்பார்கள்? குடியிருக்கும் வீட்டுக்கா, குட்டிச் சுவருக்கா?" என்று கேட்டார்.

"குடியிருக்கும் வீட்டுக்குத் தான்!" என்றான் சிறுவன்.

"நான் என்னைக் கடவுள் குடியிருக்கும் வீடாக நினைக்கிறேன்; அதனால் சுண்ணாம்பு அடிக்கிறேன்? நீ உன்னைக் கடவுள் குடியிருக்கும் வீடாக நினைக்கிறாயா, இல்லை, கழுதை ஒதுங்கும் குட்டிச் சுவராக நினைக்கிறாயா?"



ஒரு கணம் யோசித்த சிறுவன், "எனக்கும் திருநீறு பூசுங்க சாமி!"என்றான்.

– 'வாரியார் சொல்லோவியங்கள்' என்ற நூலிலிருந்து அ. ராஜாரஹ்மான்

[illegible]

"காதலிக்கறதுன்னா முன்ன கூடிச் சொல்லிரு. அது நல்லது." பார்த்திபன் இப்படிச் சொல்லவும் பிரகாஷுக்குக் கண் ததும்பி விட்டது. தாளக்கரைப் பிரிவில் உச்சரித்த வார்த்தை நிக்குச்சிச் கடராய் பொசுக்குகிறது இன்னும். பதிலுக்குப் பிரகாஷ்,

"ஏன் நீ காதலிக்கிறியா?" என்றான்.

"இதுவரையிலும் இல்லை" என இழுத்தவாறு பதில் சொன்ன பார்த்திபனுக்கு காதலித்தால் என்ன என்று பட்டது. ஒருவகையில் முறைப் பெண். ஒரே ஜாதி. மணவாட்டுக்கு மணவாடு. செம்புலத்துக்கு அன்புள தண்ணீர். மண் நிறமாய் நீர் மாறும் அன்புடை நெஞ்சங்களின் கலத்தல். பேரார்வத்துடன்,

"இந்த வாரம் சனிக்கிழமை போவோமே" என்றான்.

திரும்ப மெயின்ரோட்டுக்கு தெற்குப் பார்த்து நடக்கிறபோது தோல்வியின் நிழல் கிழக்குப் பக்கமாய் விழுகிறது. மேற்கிருந்த சூரியன் வலதுபுறக் கன்னங்களில் சாய்பரப்பும் வெய்யிலோ இரக்கமற்ற வெம்மை எரிச்சலைத் தோற்றுகின்றது.

இந்த மே மாதமே இப்படித்தான். உள்ள மாணவக் காதலரைப் பிரிக்கின்றது. பாட்டி ஊர்கள், மாமா ஊர்கள், சித்தப்பா ஊர்கள் என ஒரம்பரைக்குப் போகிற இடங்களில் புதிய காதல்கள் பலருக்குத் துளிர்க்கின்றன.

இந்தப் பெருவெய்யிற் கோடையில் அரும்பும் காதல்கள் எப்படித்தான் வேர் பிடித்து விருட்சங்கள் ஆகின்றனவோ?

பார்த்திபன் மழை, வெய்யில், காற்று எந்தப் பருவத்திலும் காதல் தனக்கு சாத்தியமில்லை எனத் தோன்றி வெதும்பிக் கொண்டிருந்தான்.

"அனிதா சின்னதாராபுரத்துல இருக்காளா?"

"தெரியலை. அவளும் இப்படி எங்கியாச்சும் போயிருப்பா."

"ஆமாமா. நம்ம லக் அப்படி."

"டென்ஷன் ஆகாதடா. அடுத்த வாரம் கண்டக்காம்பாளையம் திருவிழாவல்ல. நெறையப் பொண்ணுக வருவாங்க."

"ஆமாமா. வருவாங்க" பார்த்திபன் இப்படிச் சொன்னபோது கோபம், கிண்டல், அற்றாமை, மகிழ்ச்சி எனப் பலவும் சேர்ந்து ஒலித்தது. பிறகு,

"அனிதாளைப் பார்த்தா கேக்கணும். அன்னிக்கு ஏன் அப்படி நடந்துக்கிட்டான்னு" என்றான்.

"கொஞ்ச நாள் பாக்கலைன்னா அப்படித்தான். பிரியம் விட்டுப் போயிடும்."

"அப்படிங்கறியா?"

"ஆமா."

"எனக்கு அப்படித் தெரியலை."

"அப்படின்னா இன்னும் அனிதாவைக் காதலிக்கிறியா?"

ரொம்ப யோசித்து விட்டு, "அப்படின்னுங் கிடையாது" என்றான். பஸ் வந்து விட்டது.

பரீட்சை முடிவுகளும் வந்தாயிற்று. பார்த்திபன் தேர்ச்சி, பிரகாஷ் தேர்ச்சி, அனிதா தேர்ச்சி எனக் கேள்வி.

சின்னதாராபுரத்தில் பார்க்க இயலாது போன அனிதாவை ஈரோட்டில் வைத்துப் பார்க்க வேண்டியிருக்கும் என பார்த்திபன் எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)

செல்லம்மாவுக்கு ஒரு கடிதம்

இளையவன்

சென்னை பாரதியார் சங்கம் நடத்திய மகாகவி பாரதியார் விழாவில் வாசிக்கப்பட்ட கவிதை

எனது பாசத்திற்குரிய தாயே...

பதினெட்டு முழம் சுற்றிய
பராசக்தியே...

புயலைத் தழுவிக் கொண்ட
புரட்சியே...

ஒரு சந்தேகம்.

ஒண்டுக் குடித்தனத்தில் - ஒரு
சண்ட மாருதத்தை
எப்படி சமாளித்தாய்?

எரிமலைக்கு
வாழ்க்கைப் பட்டவளே!
நீ-
அக்னி சாட்சியாய்
திருமணம் செய்து கொண்டதுதான்
ஆச்சரியமாக இருக்கிறது.

ஆக-

சாட்சியையே
திருமணம் செய்து கொண்டது
உன் சாமர்த்தியம்.



பாரதிக்கு-
பஞ்சபூதத்தைப் பற்றிச்
சரியாகத் தெரியும்.

உனக்கோ...
பஞ்சம் என்ற பூதத்தைப்பற்றி
விரிவாகவே தெரியும்.

பாரதியால்,

'இந்தியாவை' நடத்த முடிந்தது.
இல்லறத்தைத் தான் நடத்த முடியவில்லை.

ஏகாதிபத்தியம்
ஆகாதடித்தது.

இழுத்துச் சாத்திக் கொண்ட
இனம் -
சொல்லால் அடித்தது.
ஒற்றர்களோ
தூங்கா தடித்தனர்.
அன்று 'தலைதூக்காது'
செய்தனர்.
எனவே இன்று
தலையில் தூக்கிக் கொண்டாடுகிறோம்.

சிந்து நதியில்
படகு விட்டபோது
நீ சீறினாயா?
அல்லது-
கற்பனைதானே
என்று தேறினாயா?

காணி நிலம் கேட்ட
கவிராஜனுக்குக்
கேட்ட தெல்லாம்
கனவாகிப் போனாலும்
பாட்டுக் கலப்பதற்குப்
பக்கத்தில் நின்ற
நீ மட்டும் நிஜம்.

தாயே-

செல்லம்மாவைக் கண்ணம்மாவாக்கி
உன்னைத்
'தேனியாய்'ச் சுற்றியவனை
முப்பத்தொன்பது வயதுக்குள்
ஏன் ஞானியாக்கினாய்?

மகாகவியைப்பற்றி
எனக்கு ஒரு மந்திரம் தெரியும்.
அதை எழுதித் தருகிறேன்
பின்பு விடை பெறுகிறேன்.

அவன் ஒரு அதிசயம்
அவன் ஒரு அவசியம்
அவன் ஒரு புதிரின் அவதாரம்
அவன் ஒரு லட்சியம்
அவன் ஒரு ரகசியம்
அவன் ஒரு சுருதியின் ஆதாரம்.

அன்புடன் கொஞ்சம் அரசியல் வம்பு!

• திண்டிவனம் ராமமூர்த்தி





• தங்கபாலு



• ப. சிதம்பரம்

● கூட்டணிக் குழப்பங்கள் ஒரு பக்கம் இருக்க தமிழ்நாடு காங்கிரஸில் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் விஷயம் ஒரு டாடா சுமோ கார் சம்பந்தப்பட்டது. தங்க பாலு தலைவராக இருந்த காலத்தில் அந்த டாடா சுமோ கட்சிக்காக வாங்கப்பட்ட தாம். திண்டிவனம் தலைவரானதும் காரை ஒப்படைத்தாராம் தங்கபாலு. ஆனால் ஆர்.ஸி. புத்தகம் மற்றும் ரெகார்டுகளை ஒப் படைக்கவில்லையாம். இப்போது ரொம் பவே அழுத்தம் கொடுத்து திண்டிவனத் திடம் கட்சிப் பொருட்களைத் திரும்பப் பெற்ற தமிழ்நாடு காங்கிரஸ், டாடா சுமோ வராதது கண்டு அதிர்ச்சி யுற்றிருக்கிறது.

"என்ன ஆச்சு டாடா சுமோ?" என்று கேட்டால் அது "ஆக்ஸி டெண்டில் மாட்டி தேறாமல் போய்விட்டது" என்று திண்டி வனம் தரப்பிலிருந்து பதில் வருகிறதாம். இது தவிர, வங்கி கணக்குப் புத் தகத்தையும் திண்டி வனம் ஒப்படைக்கவில்லை யாம்!

● கடந்த சில மாதங்களாகவே ப. சிதம்பரம், த.மா.காவிலிருந்து விலகி பா.ஜ.கவில் இணைவார் என்ற வதந்தி இருந்து வருகிறது. இப்போது ரங்கராஜன் இறந்த வுடன் வதந்தி இன்னமும் பலமாகி அதற்கு முழு உருவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ப.சி. பா.ஜ.கவில் இணைந்து திருச்சி பாராளுமன்ற தொகுதி இடைத் தேர் தலில் போட்டியிடுவாராம். வெற்றி பெற்றவுடன் அவ ருக்கு நிதியமைச்சர் பொறுப்பு கொடுக்கப்படுமாம். அப் போது யஷ்வந்த் சின்ஹா என்ன ஆவார் என்கிறீர்களா? 'தமக்கு உடம்பு சரியில்லாததால் பொறுப்பிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும்' என்கிறாராம் அவர். ப.சி., த.மா.கா விவகாரங்களில் சீரியஸாகப் பங்கு கொண்டு செயல்படாதது தான் இந்த வதந்திகளுக்குக் காரணம் என்கிறார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

● தி.மு.கவில் இலக்கிய அணி, தொண்டர் அணி, மாணவர் அணி ஆகியன தங்கள் விழாக்களுக்குத் தமிழ்நாடு முழுக்க வசூல் வேட்டை நடத்துகின்றன. ஆனால் இந்தப் பிரிவுகள் தென் சென்னை பகுதியில் வசூல் செய்யக் கூடாது என்று 144 போட்டிருக்கிறாராம் தென்சென்னை செயலாளர் சைதை கா.கிட்டு!

"உங்களுக்கு என்ன வேணுமோ என்னிடம் கேளுங் கள், தருகிறேன்" என்று சொல்பவர், அதன்படி கொடுத் துக் கொண்டும் இருக்கிறாராம். இதற்கிடையில் இலக்கிய அணி பிரமுகர்கள் துக் கத்தில் இருக்கிறார்கள். காரணம், கடந்த வாரம் முப்பெரும் விழாவை ஒட்டி 'கலை இரவு' நடத்த திட்டமிட்டிருந்தார் களாம். முதல்வர் 'வேண் டாம்' என்று சொல்லிவிட் டாராம். நிகழ்ச்சியோடு வசூலும் ரத்தான வருத்தத் தில் இருக்கிறார்களாம் தொண்டர்கள்!

● சேலம் உருக்கு (உருட்டு!) ஆலையைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதை எதிர்த்து அ.தி. மு.க. தலைமையில் போராட்டம் நடத்த இருக் கிறார்கள். இது சம்பந்த மாக கூட்டப்பட்ட ஆலோசனை கூட்டத் துக்கு சேலம் பாராளு மன்ற அ.தி.மு.க. உறுப்பி னர் செல்வகணபதிக்கு அழைப்பு அனுப்பப்பட வில்லை.


— கௌசி

காளையை வென்றால் கலர் டி.வி. பரிசு!


காட்சி 1

புடைத்த தோள்களும், தடித்த மீசையும் துடிக்க, களத்தில் நிற்கும் இளங்காளைகளே! பாண்டிய நாட்டு பெரும் நிலக்கிழார், களத்தூர் கண்ணப்பராயர், சீரோடும் சிறப்போடும் வளர்த்து வரும், மச்சக் காளை இப்போது சீறி வரப் போகிறது. இந்தக் காளையை அடக்கும் ஆடவனுக்கு, ஏற்கெனவே அறிவித்தபடி, அன்னாரின் ஒரே மகள் அம்சவல்லியை மணம் முடித்துக் கொடுப்பதோடு பாண்டிய அரண்மனையில் பாதுகாப்பு அதிகாரி பதவியும் கொடுக்கப் படும்....''

டம்... டும்... டம்... டும்... – முரசு. இடியாய் இடிக்க... கட்டுத் தறியிலிருந்து விடுவிக்கப்பட்டக் காளை பாய்ந்து வருகிறது. வெற்றி பெற்றுத் திரும்பும் வீரத் திருமகனுக்குச் சூட, கையில் வாகைப் பூமாலை சகிதம் தன் தந்தையுடன் மேடையில் அமர்ந்து படபடப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார் அம்சவல்லி. காளையைப் போலவே களத்தில் பாய்கிறார்கள் பாண்டிய நாட்டு இளைஞர்கள்.




• செல்வராணி



• ரகுபதி

காட்சி 2

''இப்போ வரப் போறது, மாட்டுத்தாவணி மகாலிங்கம் காளை. காளை



• காளைகள் வெளியேறிப் பாய்ந்து வரும் வாடிவாசல்



யார்கோவில், கன்னிப்பட்டி, பொன்னாச்சி, புளியம்பட்டி இப்படி பல ஊரு ஜல்லிகட்டுல பலபேரை பதம் பார்த்த பொல்லாத காளை! இந்தக் காளைக்கு இரண்டாயிரம் ரொக்கம், ஒரு கலர் டீ.வி சன்மானமாக சாட்டியிருக்கு. புடிக்குறவுக புடிக்கலாம்! முடியாதவுக வேடிக்கை பார்க்கலாம்.... ரெடி.... வாடிவாசல் (மாடு கட்டுத்தறியிலிருந்து வெளியேறும் இடம்) தொறந்தாச்சி... மாடு வருது டோய்...!

ஆயிரமாயிரமாய்த் திரண்டு சூழ்ந்திருக்கும் இளைஞர்களுக்கு நடுவில், வெறித்துக்கொண்டு ஓடி வருகிறது காளை. எல்லோரும் பாய்ந்து ஓட, ஓர் இளைஞன் மட்டும் காளையின் திமிலைப் பற்றி நிறுத்துகிறான். கூரிய கொம்பால் அவனை அது குத்திக் கிழிக்க, மீண்டும் பிடிக்கிறான். காளை அவனை வீசி எறிகிறது! ஆக்ரோஷம் முகத்தில் வெடிக்க, காளையின் கழுத்தைப் பிடித்துத் தொங்கி, இழுத்து அதைக் கீழே தள்ளுகிறான்.

உய்... உய் என்று விசில் சத்தம் செவியைக் கிழிக்கிறது. கைதட்டலில் கிராமமே அதிர்கிறது. அந்த இருபத்தைந்து வயது இளைஞரைக் கூட்டம் தோளில் தூக்கிப் பிடிக்கிறது. மறுநாள் காயங்களுக்குப் போடப்பட்ட கட்டுகளோடு வீதியில் நடந்து வருகிறார் அந்த வீர இளைஞர். அவரைத் தடுத்து நிறுத்துகிறது ஒரு குரல்.

''என்ன மாப்ளே! இந்த வருஷமும் அதிக பரிசுகளை நீயே அள்ளிக் கிட்டு வந்துட்டே போல இருக்கு... அதுவும் நல்லதுக்குத்தான். வர்றம் பொஞ்சாதிகிட்டே, சீர், செனத்தின்னு கேட்க வேணாம் பாரு...''

இளைஞர் பதில் சொல்வதற்குள் – இன்னொரு குரல் ஒலிக்கிறது:

''அட போய்யா போக்கத்தவனே! என்ன இருந்து என்ன புண்ணியம்... இவனை நம்பி எவன்யா பொண்ணு குடுப்பான்? அப்படியே குடுத்தாலும் கல்யாணத்துக்கு அப்புறம், மாடு புடிக்கப் போக மாட்டான்னு என்ன நிச்சயம்...? மீறிக் கொடுத்தவன், பொண்ணுக்குக் கல்யாணப் புடவையோடு ஒரு வெள்ளைப் புடவையையும் கொடுத்து அனுப்பிட வேண்டியதுதான்.''

விரக்திப் புன்னகையை இழையோட விட்டபடி இளைஞர் நகர்கிறார்.



* ஜல்லிக்கட்டு வீதியில் கிராமத்துக் காளை



* ஸ்ரீதர்



முதல் காட்சி பண்டை தமிழ்நாட்

டில் – நடந்தது. இரண்டாவது காட்சி நிகழ்காலத்தில் நடந்துகொண்டிருப்பது.

இலக்கியத் தமிழில் 'ஏறு தழுவுதல்' என்று அழைக்கப்பட்ட, காளை அடக்கும் கலை, இன்று மஞ்சு விரட்டு, மாடு பிடித்தல், ஜல்லிக்கட்டு என வார்த்தை மாற்றிக் கொண்டது போல், இன்னும் என்னென்ன மாற்றங்களை உள்வாங்கி இருக்கிறது? ஜல்லிக்கட்டுக்கு உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் அடியெடுத்து வைத்தோம்.

மதுரையிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் பசுமை போர்த்திக் கிடக்கும் இந்த ஊரில், நெல்லும் கரும்பும் இரு கண்கள். செங்கல் உற்பத்தியும் அலங்காநல்லூரில் பிரபலம். பேருந்தை விட்டு இறங்கி ஊரின் பிரதான ஜல்லிக்கட்டு வீதியில் நடந்தபோது ஒரு ஆச்சர்யம். எதிரே பீதியூட்டும் ஒரு காளை மாட்டை இருவர் பிடித்தபடி வந்து கொண்டிருந்தனர். பேச்சியப்பன் என்று பெயர் கொண்ட அந்தக் காளை அலங்காநல்லூர் கிராமத்தினர் வளர்த்து வரும் ஜல்லிக்கட்டு காளையாம்... கடந்த ஆண்டு ஜல்லிக்கட்டில் ஒரு கலக்குக் கலக்கியிருக்கும் இந்தக் காளை, சுற்று வட்டாரத்தில், மாடு பிடித்தல் எங்கு நடந்தாலும் அலங்காநல்லூரின் பிரதிநிதியாக அங்கே அழைத்துப் போகப் படுகிறது என்கிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் மூன்றாம் நாள், (காணும் பொங்கல் அன்று) ஒரு லட்சம் பார்வையாளர்களைக் கவர்ந்து இழுக்கும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டின் இன்றைய குறுக்கு வெட்டுத் தோற்றத்தை நம்முடன் பகிர்ந்து கொண்டார். ஊரின் பஞ்சாயத்துத் தலைவர் ரகுபதி:

"ஆரம்ப காலத்தில் சுற்று வட்டார கிராமங்களில் இருந்துதான் மாடுகள் வரும். ஆட்களும் வருவார்கள். இன்று திருச்சி, பெரம்பலூர், தேனி, திண்டுக்கல் என்று பல வெளி மாவட்டங்களில் இருந்து மாடுகள் கொண்டு வருகிறார்கள். அதே போல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் உட்பட குறைந்தது ஐம்பதாயிரம் பேர் திரளாக வந்துவிடுவார்கள். வெளிநாட்டுப் பயணிகள் ஜல்லிக்கட்டை உட்கார்ந்து ரசிக்க, சுற்றுலாத்துறை பதினைந்து வருஷத்துக்கு முன்னாலேயே காலரி கட்டிக் கொடுத்திருக்கிறது. இது தவிர, தெரு நெடுகிலும் கிராமவாசிகள் பரணி கட்டி விடுவார்கள். கிராமச் சங்கம்தான் ஒவ்வொரு வருஷமும் ஜல்லிக்கட்டை ஏற்பாடு செய்கிறது. எமர்ஜென்ஸி காலத்தில் இந்த ஊர் ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்தார்கள். கடந்த ஜெயலலிதா ஆட்சியிலும் தடை போட்டார்கள். ஆனால் எந்தத் தடைக்கும் நிற்காத ஒரே ஜல்லிக்கட்டு இங்கேதான் நடக்கிறது. இப்போது ஒவ்வொரு வருஷமும், கோல்கேட், பெப்சி போன்ற பெரிய நிறுவனங்கள் ஜல்லிக்கட்டை ஸ்பான்ஸர் செய்கிறார்கள். அதேபோல வேட்டி, துண்டு என்றிருந்த பரிசு பொருட்கள் இப்போது தங்கக் காசு, கிரைண்டர், டி.வி, மிக்ஸி, மோட்டார் சைக்கிள் என காலத்திற்குத் தகுந்தாற்போல மாறிவிட்டது.

"ஜல்லிக்கட்டுக்கு என்றே வளர்த்த மாடுகள்தான் களத்திற்கு வரும். இப்போதெல்லாம் ஒவ்வொரு வருடமும் ஐந்நூறு மாடுகளுக்குக் குறைவில்லாமல் வருகின்றன. மாட்டின் மீது கட்டப்படும் பரிசுகளை ஸ்பான்ஸர் நிறுவனங்களும் கிராம மக்களும் சேர்ந்து கொடுக்கிறோம். மாட்டை அடக்கிவிட்டால், பரிசுகள்



"இந்த ஒலிநாடாவில் ஒலியே இல்லையே?

"மௌன குருவின் உபதேச மாச்சே!"

— சி. நாச்சிமுத்து

அதை அடக்கிவியவருக்குப் போய்விடும். இல்லையென்றால் மாட்டுச் சொந்தக் காரருக்குப் போய்விடும்.

''மதியம் இரண்டு மணிக்குத் தொடங் கும் ஜல்லிக்கட்டு, மாலை ஐந்தரை மணிக்கெல்லாம் முடிந்து விடும்'' என்ற ரகுபதிக்கும் மாடு பிடிக்கும் ஆசை இருக் கிறது என்றாலும் பொறுப்புகள் அதிக மாக இருப்பதால் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை என்கிறார்.

அலங்காநல்லூரில் மட்டுமல்ல, தென் மாவட்டங்களில் நடக்கும் எல்லா ஜல்லிக்கட்டுகளிலும், அடிக்கடி கலந்து கொண்டு வெற்றி பெறும் ஸ்ரீதருக்கு ஊரில் ஒரு ஹீரோ அந்தஸ்து இருக்கிறது.

''பதினைந்து வயதிலேர்ந்து மாடு பிடிக்கிறேன். ஒவ்வொரு முறையும் படு காயம்தான். இருந்தாலும் காயம் பத்து நாளில் ஆறிவிடுங்கிற தைரியத்தில், எந்த ஊரில் ஜல்லிக்கட்டு நடந்தாலும் போய் விடுவேன்!'' என்று சொல்லும் ஸ்ரீதருக்கு இருபத்தெட்டு வயது. இவர் சம்பாதித்து வாங்கிய பொருட்களைவிட மாடு பிடித்து வாங்கிய பரிசுப் பொருட்களே அதிகம்!

''மாடு பிடிக்கப் போவதை மனைவி தடுத்து விடுவாள் என்பதால் கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருக்கிறேன்'' என்று சொல்லும் ஸ்ரீதர், மூக்குக் கயிறு இல்லாமல், உடம்பு முழுக்க விளக் கெண்ணெய் பூசப்பட்டு, உள்ளுக்குள் கொஞ்சம் சாராயமும் ஊற்றி விடப்பட்ட மாட்டை இரண்டு நிமிடத்திற்குள் மடக்கிப் பிடித்து விடுவாராம்!

பிடிபட்டு விடும் (தோற்றுப் போகும்) மாடுகள் மாமிசத்திற்காக விற்கப்படு வதையும் ஸ்பெயின் நாட்டில், ஜல்லிக் கட்டு என்ற பெயரில் காளை மாடுகளின் முதுகில் அம்புகளால் குத்திக் கொல்வதை யும் கண்டு கொதிக்கும் இந்த ஜல்லிக் கட்டு வீரரை எந்தப் பெண்ணும் கண்டு கொண்டு கடைக்கண் பார்வை செலுத்தவில்லையாம். மாடு பிடிப்பதைப் பெண்கள், பரணியில் நின்று ரசிப்பதோடு சரி.

''மற்றப்படி, காவிய நாயகனாக எங் களை மனத்தில் வரித்துக்கொண்டு, அவர் கள் கனவு காணத் தயாராக இல்லை'' என்கிறார் வெளிப்படையாக.



''ஆச்சர்யமா இருக்கே... பொரை ஏறினதுக்கும் உங்க பல்லு நொறுங் கினதுக்கும் என்ன சம்பந்தம்...?''

''பொரை ஏறுறப்ப என் மருமகள் தலையில தட்டினாளே...!''

— மலர் சூர்யா

''அது உண்மைதான்'' என்கிறார் செல்வராணி.

''பாரம்பரியமாக மாடு பிடிக்கிறது எங்க ஊருக்குப் பெருமைதான். ஆனால் வீட்டிலிருக்கும் ஆண்கள் மாடு பிடிக்கப் போகும்போது, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்போம். உயிருக்கு உத்தரவாதம் இல்லாத வீர விளையாட்டு. இதனாலேயே, பையனுக்கு மாடு பிடிக்கிற பழக்கம் இருக்கிறது என்று தெரிந்தால் யாரும் பெண் கொடுக்க முன் வருவதில்லை'' என்றவரிடம் விடை பெற்றபோது, பதினைந்து வயது பையன் ஒருவன் தெருவில் கத்திக் கொண்டே ஓடி னான்.

''ஏய் வீரக்காளை! வர்ற ஞாயிற்றுக் கிழமை சின்ன ஜல்லிக்கட்டு, வர் றியா?''

''அடுத்த மந்தைக்கு வர்றேன், பரீட்சை இருக்கு!''

கன்றுக்குட்டிகளையும், பசு மாடு களையும், பள்ளித் திடலில் சிறுவர்கள் விரட்டிப் பிடிக்கும் சின்ன ஜல்லிக்கட்டு அடிக்கடி அங்கே நடக்கிறது. ஏறு தழுவுதல் காலம் கடந்தும் அலங்கா நல்லூரில் வாழ்ந்து கொண்டிருப்பது ஏன் என்று இப்போது புரிகிறதா?

— ஆர்.சி. ஜெய்ந்தன்

படங்கள்: **ராஜன்**



தெருக்கூத்தும் ராஜா நேசமும்

அகல்யா

தாரமங்கலம் பேருந்து நிலையம்...

திடீரென்று ராஜாவின் கண்களுக்கு அந்த குழுவினர் தட்டுப்பட... அவனுக்குள் இனம் புரியாத உற்சாகப் பீறிடல்... காணாத பொக்கிஷத்தைக் கண்ட சந்தோஷம்!

அவர்கள் தெருக்கூத்து கலைஞர்கள். நான்கு குழுக்களாக- குழுவுக்குப் பதினைந்து பேர்!

ஆண் வேஷக்காரர்கள் மீசை மழித்து, மொழுமொழுவென முகச் சவரம் செய்து... பிடரி வரை புரளும் தலைக்கேசத்தோடு இருந்தார்கள்... பெண் வேஷக்காரர்கள் நீண்டு வளர்ந்த தலைக்கேசத்தைக் கொண்டையாக்கி தலையில் கட்டும் துண்டால் மறைத்திருந்தார்கள்!

ஒரு சிலர் தங்க மோதிரம், செயின் போட்டிருக்க- 'நசிந்து வரும் இந்தக் கலையில் நல்ல வருமானம் இருக்கும் போல் தெரிகிறதே?'

அவன் அவர்களை மிக உன்னிப்பாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் என்பதைவிட, தரிசித்துக் கொண்டிருந்தான்....

அந்தளவுக்கு அவனுக்குத் தெருக்கூத்தின் மேல் அளவுக்கு மீறிய பித்து! பட்டணத்து மிட்டாய்க் கடையைப் பார்க்கும் பட்டிக்காட்டான் மனசு மாதிரி... தன் மானசிக நடிகனின் போஸ்டரையே வெகுநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் வெறிபிடித்த ரசிகனின் உள்ளமாய்....

அதே ரசிகன் தன் அருகாமையில் தன் அபிமான நடிகன் இருந்தால் எவ்வளவு ஆனந்தப்படுவானோ... அதைவிட பேரானந்தம் தெருக்கூத்துக் கலைஞர்களைப் பார்த்த போது...

அவனுக்குள் மலர்ந்து மகிழ்ச்சி கிளர்ந்தது. 'எனக்கு மட்டும்தானா இந்த சந்தோஷம்? உள்ள உற்சாகம்! என்னைப் போலவே இவர்களைப் பார்க்கும்... எல்லோருக்குமா? அப்படியிருப்பின் யாரும் ரசிக்கிற மாதிரி தெரியவில்லையே?'

ஆதங்கம் அவனது மனத்தில்... ஒரு கல்லூரிக் கும்பல் இவர்களைக் 'கூத்தாடிகள்' என்று எகத்தாளமாய் நகைத்து... பெண் வேஷக்காரர்களை 'ஒம்போதுகள்' என்று சொல்லி சிரித்தது...

அவர்களைக் கிண்டலடித்ததைக் கண்டு மனம் புழுங்கினான். இவ்வளவு நேரம் வரைக்கும் வராமல் வந்த ஒரு குழுவின் மிருதங்கக்காரரைக் கண்டதும்... அவன் மனசுக்குள் தாள லயம்...

'த்த்திங்கும் தா... தகி தத்திங்கும் தா...

தகா தத்திங்கும் தா... தகர் தத்திங்கும் தா..'

அவனையும் அறியாமல் வாய் முணுமுணுக்கிறது...

"அல்லிலேலோ அல்லிலேலோ
ஆயர் பாடிக் கண்ணனுக்கு
அல்லிலேலோ...



கொப்பிலேலோ கொப்பிலேலோ
கோபாலக் கண்ணனுக்கு
கொப்பிலேலோ..."

ஒரு கட்டத்தில் உற்சாகம் பீறிட்டு... அவர்களோடு பேசியே ஆக வேண்டுமென ஆவல் மேலிட...

தனியாக வந்த 'ராஜாபார்ட்' அர்ஜுன வேஷக்காரரைப் பிடித்துக் கொண்டான்.

"எந்த ஊர்லே கூத்து நடத்தப்போறீங்க?"

"ஒவ்வொரு குழுவும் தனித்தனி ஊர்லே... ஜலகண்டாபுரம். மேச்சேரி சோரகை, கோனேரிப்பட்டி, கொல்லாப்பட்டின்னு... நாங்க கொல்லாப்பட்டிக்குப் பக்கத்துலே செங்கானூர்லே...."

"நானும் உங்களோட கூத்துபார்க்க வரலாம்ங்களா? சிறுவயதிலிருந்து எனக்குத் தெருக்கூத்துன்னாக்க... ரொம்ப இஷ்டம்..."

அர்ஜுன வேஷக்காரர் அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தார். வியப்பாய்க் கேட்டார்.

"நீங்க கூத்துப்பார்க்கவா தம்பி!"

"ஏன் பார்க்கக் கூடாதா? பார்த்தால் ஏதாவது ஆகிவிடுமா?"

அவன் அப்பாவியாய்க் கேட்க... "உங்களைப் பார்த்தாக்க.... பேன்ட், சட்டை மாட்டிட்டு தொரை கணக்காயிருக்கீங்க... எளவட்டப் பையன் மாதிரி..."

"நான் எளவட்டப்பையனா? எனக்கு கல்யாணமாகி ரெண்டு பசங்க. எட்டு வயசுலே ஒண்ணு. ரெண்டு வயசிலே இன்னொண்ணு..."

"சொந்த ஊரே தம்பிக்குத் தாரமங்கலம்தானுங்களா?"

"எனக்குக் கோபிசெட்டிபாளையத்திற்குப் பக்கம்தான் சொந்த ஊர். பொழப்புக்காக திருப்பூர் பக்கம் போய் பத்து வருஷம் ஆச்சு. இங்கே என்னோடு பனியன் கம்பெனியிலே வேலை பார்க்கும் சிநேகிதனைப் பார்க்கலாம்னு வந்தேன்... ஊர்லேயில்லை; உடனே திரும்பறேன்."

"தெரியப்படுத்திட்டு தானே வந்திங்க?"

"இல்லைங்களே திடுப்புன்னு...சேலம் சொந்தக்காரங்க வீட்டு கிரஹப்பிரவேசத்துலே கலந்துட்டு... அப்படியே ஒரு எட்டு வந்து பார்த்துட்டுப் போகலாம்னு... அதனால என்னங்க நீங்க நட்பாயிட்டீங்களே."

"ரொம்ப சந்தோஷம் தம்பி! உங்களுக்கு எங்க கூத்தைப் பார்க்க வர்றதுக்குப் பிரியம்னாக்க... எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையுமில்லை. தம்பி பேரு சொல்லலையே?"

"ராஜா."

"ஆளுக்குத் தகுந்த பேரு."

"இன்னிக்கு நீங்க நடத்தறது என்ன கூத்து?"

"அர்ஜுன தவம்."

"அர்ஜுன தவம்னாக்க..."

"பகைவர்களை அழிக்கறதுக்காக பஸ் மாஸ்த்திரம் வேண்டி... தவசி கம்பத்துலே அர்ஜுனன் தவமிருந்து ஈசன்கிட்டே வரம் வாங்கறது.... கடுமையான விரதமிருந்து தவத் துக்குப் போறப்போ... மாயக்கிருஷ்ணன் அர்ஜுனனை பரிசோதிப்பார்... பொம் பளை விஷயத்துலே மோசமான அவன் தவத்தை கலைக்கறதுக்காக... மோகினி அவதாரம் எடுப்பார். அப்புறம் அசுரகுலப் பெண். ஏலகன்னி, அர்ஜுனன் மேல் ஆசை கொண்டு... ஆசையை நிறைவேத்திட்டுப்



"இது லவ் மேரேஜ்னு எப்படி கண்டுபிடிச் சிங்க?"

"கல்யாணப் பத்திரிகையில 'சிறியோர் களால் நிச்சயிக்கபட்டு...'னு போட்டு இருக்கே..."

– மலர் சூர்யா

போகணும்னு வழி விடாமே வாதாடுவாங்க... அவங்களை சமாளிச்சு, விரதத்தைக் கடைப் பிடிச்சு... தவசிக் கம்பம் ஏத்தறுதான் இன்னிக்குக் கூத்துலே... அர்ஜுன வேஷம் போடற நானும் பதினைஞ்சு நாளா விரத மிருக்கேன்... மாமிசம் சாப்பிடாமே, மது குடிக்காமே, மற்ற பெண்களை மனசாலும் நெனைக்காமே... தவம் முடிஞ்சு ராமசாமி பருந்து வந்து தவசி கம்பத்தை மூணு முறை சுத்தினால்தான் கீழே இறங்கணும். இல் லாட்டி எவ்வளவு நேரம் ஆனாலும் கம் பத்துலேயேதான் நிற்கணும். பருந்து வர லைன்னாக்க, நானிருந்த விரதத்துலே கொறையிருக்குதுன்னு அர்த்தம்."

அர்ஜுன வேஷக்காரர் சொல்ல.... பிரமிப்பாய்க் கேட்டான்- இன்னிக்கு இந்தக் கூத்தை பார்த்தே ஆக வேண்டுமென்ற உந்து தல் மேலிட...

கிராமத்தில் அப்பொழுது ராஜாவும், மாமன் மகன் மகேந்திரனும் ஒன்பதாவதோ பத்தாவதோ படித்துக் கொண்டிருக்கையில்... கார்த்திகை மாசம். நிலக்கடலைக்காய்ப் புடுங்குகிற சமயம்... இதே சேலத்துக்குப் பக்கத்திலிருந்து கூத்துக்காரர்கள் வந்து ஒரு மாதம் ஆடுவார்கள்... சந்தைக்கடை மைதா னத்தில் சுற்றிலும் டெண்ட் கட்டி டிக்கெட் வசூலித்து.

அன்று சாயந்திரம் தப்பட்டை அடித்துக் கொண்டு வீதி வீதியாக வந்து.. நீண்ட தகர போனில் சத்தமாக அன்றிரவு நடக்கும் கூத்துபற்றி விளம்பரப்படுத்துவார்கள்...

அவனும் மகேந்திரனும் விளக்குப் போடும் முன்பே ஆஜராகி விடுவார்கள். அரிதாரம் பூசுவதற்கு முன்பாக டீக்கடை களில்... பஞ்சாயத்து ஆபீஸ் திண்ணையில் அவர்கள் அமர்ந்திருக்க... அவர்களை இவர் கள் இருவரும் வாய்பிளந்து பார்த்திருக் கிறார்கள் அம்மாவிடம் கெஞ்சி... கூத்தாடி காசுவாங்கி... கூத்துப் பார்க்க போய் விடிய விடிய தூங்காது கண்கள் எரிய கண்டு களித்து கூத்தில் வரும் கதாபாத்திரங்களை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு வசனங் களையும் பாடல் வரிகளையும் உள்ளத்துக் குள் உள் வாங்கி, சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்... ஆடு ஓட்டிக்கொண்டு போய் மேய்க்கும் சாக்கில்...

ராஜா, மகேந்திரன், சாமிக்கண்ணு, தம்பி துரை, நடராசன், சுந்தரமூர்த்தி, எல்லோரு மாய்ச் சேர்ந்து... இட்டமலை மொட்டப் பாறையில்... ஓட்டக்கூத்து நடத்தியிருக் கிறார்கள்... வரும் போதே மகேந்திரன் அம்மாவின் புடைவை, சவுரி முடி, அக்காவின் பாவாடை தாவணி, ஜாக்கெட் எல்லாம் வீட்டுக்குத் தெரியாமல் எடுத்து வருவான்.

இரண்டு நாட்களுக்கு முன்பே.... அட் டைக்கத்தி, கிரீடம் செய்து, கிரீடத்தில் ஜிகினா ஜரிகைக்காகிதம் ஒட்டி, பாசி கோத்து தொங்கவிட்டு.. புறா இறகைப் பதிய வைத்து... தயார் செய்து... மறைத்து வைத் திருப்பார்கள்! பவுடரும், குங்குமமும் கலந்து அரிதாரம்; சாந்துப்பொட்டே உதட்டுச் சாயம்!

சுற்றுச் சூழல் மறந்து ஓட்டக்கூத்து நடக்க... ஓட்டி வந்த ஆடுகள் எந்த திக்கில் போனதென்று தெரியாமல் கூத்து முடிந்து ஆடுகளைத் தேடி... ஆலாய்ப்பறப்பார்கள்...

கடைசியில் கந்தப்ப கவுண்டர் வீட்டுக் கட்டுத்தறியில் ஆடுகள் கட்டப்பட்டு கதறிக்

கொண்டிருக்கும்- அவரது தோட்டத்து ராகிப்பயிரை நாசம் பண்ணியதால்!

பெற்றோர்களுக்கு சேதி சொல்லி வரவழைத்து... வாய்க்கு வந்தபடி ஆபாச வார்த்தைகளால் வசைபாடிய பின்பே ஆடுகளை அவிழ்த்துவிடுவார் கந்தப்ப கவுண்டர்.

விளக்கு வைத்த பின்பும் கூட வீட்டுப் பக்கம் எட்டிப் பார்க்க மாட்டார்கள். பயந்து மறைந்திருப்பார்கள். அப்புறம் பசி தாளமாட்டாது பூனை நடை நடந்து சமையலறைக்குள் நுழைய, அப்பா ஓடி வந்து புளிய மிளாரால் முதுகில் ரத்தம் கசிய விளாசியிருக்கிறார். மற்ற பையன்களுக்கும் அதே கதிதான்!

"கொல்லப்பட்டி வந்தாச்சு எறங்குங்க" கண்டக்டர் சொல்ல அர்ஜுன வேஷக்காரர் கூத்து பற்றி மலரும் நினைவுகளில் மூழ்கியிருந்தவனை உசுப்பிவிட்டார்.

அங்கிருந்து செங்கானூருக்கு இரண்டு கிலோ மீட்டர் தூரம். கப்பி ரோட்டை விட்டு மரவள்ளிக்கிழங்கு வயல்களின் வரப்புகளில் நடந்தார்கள்...

பள்ளிக்கூட மைதானத்தில் கூத்துக்கான ஏற்பாடு அதன் நடுநாயகமாய் தவசிக்கம்பம். நீண்டு வளர்ந்த பெரிய பனைமரத்தின் நுனியை ஓலைகளுடன் வெட்டியெறிந்து விட்டு செதுக்கி... கால் வைத்து ஏற வசதியாய்க் கடைந்து.... படிக்கட்டுகளாய்... நுனியில் கிராமத்து தோட்டத்து கிணறுகளில் ஏற்றம் இறைக்கின்ற கவலையின் உருளையை அதில் பொருத்தி... நின்று தவம் செய்ய வசதியாய்...

அரிதாரம் பூசிக் கொள்ள தென்னங்கீற்றால் மறைக்கப்பட்ட சின்னக் கூரை. கையில் வீணையுடன் கலைவாணியின் திரை. அதற்கு முன் நீண்ட பெரிய இரண்டு மரப்பெஞ்சுகளில்... மிருதங்கக்காரர், ஆர்மோனியம். சின்ன குழல் நாதஸ்வரம். ஜால்ரா வாசிப்பவர்கள் - கூடவே ராஜா.

வயது வித்தியாசமின்றி மைதானத்தில் நிரம்பி வழியும் பார்வையாளர்களைப் பார்க்கையில்... அவனது மனது சந்தோஷத்தில் நீந்தி மிதந்தது... சீக்கிரமே ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆவல் உந்தியது...

முதலில் கோமாளியின் அறிமுகத்திற்குப் பிறகு... ஒவ்வொரு வேஷக்காரரும் திரை மறைவில் சிறிது நேரம் தெய்வப்பாசுரங்களைப் பாடி வணங்கிவிட்டு... பார்வையாளர்கள் முன் வந்து பாடி ஆடினார்கள்... அடுத்ததாக ஏலகன்னி தர்பாருக்கு வருகிறாள்...

> ● உன் மனத்தை நீ அம்புபோல் நிமிர்த்த முடியவில்லை எனில், பிறர் மனத்தை வில்போல் வளைக்க உன்னால் முடியாது.
> — திபேத் நாட்டுப் பழமொழி
> தகவல்: வயலூர் மூ. இராமசாமி

திரைக்குப் பின்னிருந்து ஏலகன்னி பாடிய பாடல் தேன் பாகாய்... அதற்குத் தகுந்த மாதிரி இசைக்கருவிகள் திரைக்கு முன் வந்து...

"பின்னல் சடை புரள...
அன்ன நடை நடந்து
ஏலகன்னியெனும்...
மாது வந்தேனே....
வந்து நின்று சபைக்கு
வந்தனம் தந்தேனே..."

விடியல் வரைக்கும் கூட்டம் கலையாமல் மெய்மறந்து ரசித்தது... இடையிடையே கோமாளியின் நகைச்சுவையில் லயித்து... வயிறு வலிக்கச் சிரித்தது...

எல்லாக் கூத்தும் போலில்லை... அர்ஜுன தவத்தில்... அர்ஜுனன் தவசிமரம் ஏறி... கீழே இறங்கும் வரைக்கும் பார்வையாளர்கள் பாதியில் வீட்டுக்குப் போகக் கூடாது. இது வழி வழி வந்த வழக்கம்! அதன்படியே கடைபிடிக்கப்பட்டது.

கிழக்கு வெளுக்கையில்... அர்ஜுன தவசிக்கம்பம் ஏறி ஈசனை துதித்துப்பாட.... பொழுது புலருகையில்... ராமசாமி பருந்து வந்து தவசிக்கம்பத்தை மும்முறை சுற்ற... கூத்துபார்த்தவர்கள் கும்பிட்டார்கள். ராஜா சக்தி வாய்ந்த இந்த அற்புதக் கலையைக் கண்டு மெய்சிலிர்த்தான்.

கல்யாணமாகாத முதிர்கன்னிகளும், புத்திரபாக்கியமில்லாத பெண்களும் வீட்டுக்குப் போய்... குளித்து முடித்து கோடாலி கொண்டை போட்டு... முந்தானை ஏந்த... அர்ஜுன வேஷக்காரர் தவக்கம்பத்திலிருந்து மல்லிகைப்பூக்களை வீச... பெண்கள் பய பக்தியோடு ஏந்தி தலையில் சூடிக் கொண்டார்கள்!

கீழே இறங்கி வந்த போது... அர்ஜுன வேஷக்காரருக்கு அருள் வந்தது... அன்று பத்து மணிக்கெல்லாம் கிராமத்து பட்டக்காரர் வீட்டில் கூத்துக்கலைஞர்களுக்கு தடபுடல் விருந்து. ராஜாவும் அவர்

களோடு கூடி குலாவி சாப்பிட்டான்.

இவர்களுக்கு ஏதாவது அன்பளிப்பாய்க் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்... ராஜா இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து நீட்ட... கூத்துக்கூட்டம் வியப்பாய்ப் பார்த்தது... அர்ஜுன வேஷக்காரரும் ஒரு கணம் இமை சிமிட்டாது பார்த்தார்...

"நாங்க கட்டிய வேஷத்துக்கும் ஆடிய ஆட்டத்துக்கும் சன்மானம் தர்றே தம்பி! சந்தோஷம். தெருக்கூத்து மேலே நீ வெச்சிருக்கிற நேசத்துக்கு வெலையே இல்லைப்பா!"

அவர் கண்கள் பனிக்க... வாங்க மறுத்தார். ராஜாவின் பிடிவாதம் பலிக்க வில்லை. திருப்பூரிலிருந்து வந்த அவன் தெருக்கூத்து பார்த்த சந்தோஷமே பெரிய



''சே! இதுக்குத்தான் விஷயம் தெரியாதவங்ககிட்ட படிப்பைப் பற்றிப் பேசக் கூடாதுன்னு சொல்றது.''

''என்னாச்சு?''

''பையனை மெடிக்கல்ல சேர்த்துட்டேன்னு சொன்னா ஒரு மர மண்டை அவனுக்கு உடம்புக்கு என்னன்னு கேக்குதே!''

– சீர்காழி வி. ரேவதி

சன்மானம் என்று சொல்லி மல்லிகைச்சரம், எலுமிச்சை கனி, விபூதி கொடுத்து... "உங்க குடும்பம் சுபிட்சமாக இருக்கணும்னு மாயவனை வேண்டியிருக்கேன். வீட்டுக்குக் கொண்டு போங்க தம்பி"என்றார்கள்.

ராஜா பயபக்தியோடு வாங்கி பஸ் ஏறினான்... நேரம் போவதே தெரியாமல் மகேந்திரனிடம் இதைப்பற்றி பகிர்ந்து கொள்ள வேண்டும். பகிர்வு சுகம் அலாதியானது.

அன்றிரவே மகேந்திரனைப் பிடித்துக் கொண்டு... வரிக்கு வரி வர்ணித்து... அடுத்த தடவை நாம் இரண்டு பேரும் போவோமென குஷிப்படுத்தி...

ஆனால் மகேந்திரனிடம் எந்தவிதமான எதிர்பார்ப்புமில்லாமல் இருந்தது.

"ஏண்டா கூத்துப்பற்றி எதுவும் பேசமாட்டேங்கறே? உனக்கு என்னாச்சு?"

படபடப்பாய்... பதறியவனாய்.. ராஜா கேட்க "எனக்கென்ன உன்னைமாதிரி பைத்தியமா? எங்கே எவன் கூத்தாடுவானோன்னு பார்க்கறதுக்கும்... இறுக்குத்தனமாய் மணிக்கணக்காய்ப் பேசறதுக்கும்... இந்தக் காலத்துல இப்பேர்ப்பட்ட கண்றாவியெல்லாம் எவன் பார்ப்பான். பேசுவான். இவ்வளவு நாளா அப்பப்போ நானும் உன் கூட சேர்ந்து முட்டாள் தனமாய்... ராஜா தயவு செய்து சொல்லறேன். இதுபற்றியெல்லாம் இனிமேல் என்கிட்டே பேசி என் நேரத்தை வீணடிக்காதே..."

மனசுக்குள் முள் சாட்டை. சவுக்கடி. ரத்தம் கசியாத ரணம். ஊமைக்காயம். என்னைப்பற்றி எதுவேண்டுமானாலும் பேசட்டும். இந்த அற்புதமான கலையை அற்பமாய் நினைத்ததுதான். நெஞ்சம் தாங்கமுடியாத வலி. சொல்ல முடியாத வேதனை.

காய்ந்த மனமாய்... தொய்ந்த முகமாய்... பகிர்வின் பகமையற்ற வெறுமையாய் வீடு வந்து படுக்கையில் விழுந்தான். மனத்தின் பாரம் கண்களை ஈரப்படுத்தியது...

முந்தைய இரவு பார்த்த கூத்துக்காட்சி இன்னமும் கண்களில்.... பாடல் வரிகளும் மிருதங்க தாளமும் செவிகளில் ரீங்கரித்துக் கொண்டே...

மறுநாள் ஞாயிற்றுக் கிழமையாகையால் பத்து மணிக்கெல்லாம் மகேந்திரன் ராஜா வீடு தேடி வந்தான்.

"என்னடா ராஜா அப்செட்டாயிட்டியா? எதுவும் மாறலாம்! என் ரசனை மாறுமோ? தெருக்கூத்தாவது நான் வெறுக்கறதாவது? நான் உன்னை சோதித்தேன்... அலைய விட்டுப்பார்த்தேன்..."

மகேந்திரன் சொல்லி கண் சிமிட்டி சிரிக்க... சிறு பிராயத்தில்... கிராமத்தில்.. கர்ணன் கூத்து பார்த்து...

இட்டமலை மொட்டப்பாறையில்... ராஜா கர்ணனாக... மகேந்திரன் மாயக்கண்ணனாக... கூத்தாடியது நினைவுக்கு வர...

"மாயக்கார கண்ணனல்லவோ
உன் மாயத்தைத்தான் நானறியேன்."

ராஜா பாடி அபிநயிக்க... மகேந்திரன் முகத்தில் மலையளவு சந்தோஷம்!

இன்றே வாங்கிடுவீர் !
இந்திய பரிசு சீட்டு வரலாற்றில்!!
ஓர் உலக மகா அதிசயம்...

தமிழ்நாடு தீபாவளி

பம்பர் பரிசுச்சீட்டு

27-10-2000
திருச்சியில் குலுக்கல்

ரூ.50 க்கு

முதல் பரிசு

6 வரிசைகள்

ரூ. 5 கோடி

6 டிக்கட் வாங்கினால் 1 கோல்டு கூப்பன் இலவசம்

1 கிலோ தங்கம் பரிசு



தமிழ்நாடு அரசின் வைகை பரிசுச்சீட்டு

ரூ உக்கு வெள்ளிதோறும் முதல் பரிசு ரூ. 5 லட்சம்

ரூ.300 M.O. அனுப்பினால் ரூ.5 கோடி பம்பர் பரிசுச்சீட்டு எங்கள் செலவில் உங்கள் இல்லம் தேடிவரும்.

பல்க் ஏஜன்ட், திருச்சி **K.A.S. ராம்தாஸ்** சிங்காரத்தோப்பு, திருச்சி-8

இல்லத்தரசிகளே! தங்கத் தமிழக அரசின் ரூ.5 கோடி பம்பர் பரிசுச் சீட்டை வீட்டில் இருந்தபடியே இலவச பதிவுத் தபாலில் பெற ரூ.300/- மணியார்டர் அனுப்புங்கள்.



"கடனைத்தான் அறுவடை செய்கிறோம்!"

— விவசாய சங்கத் தலைவர் ஷரத்ஜோஷி

பூனா அருகில், நீர்ப் பாசன வசதி மிகக் குறை வான பகுதியில் இருபத்து மூன்று ஏக்கர் நிலத்தை எண்பதாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கி விவசாயம் செய்ய ஆரம்பித்தார் ஷரத் ஜோஷி. ஐ.ஏ.எஸ் பணி, ஐ.நா. துணை நிறுவன உயர் பொறுப்பு என்று பெரிய பதவிகளைத் துறந்து விவ சாயத்துக்கு வந்திருந்தார். ஒரு கட்டத்தில், இவரது நிலத் தில் விளைந்த தக்காளிக்கு மும்பை நகரத்து காய்கறி மார்க்கெட்டில் ஏக டிமாண்ட். இன்னொரு கட்டத்தில், ஒரு கிலோ வெங்காயத்தைப் பன் னிரண்டு பைசாவுக்கு வாங்க ஆள் இல்லை.



''அப்போது, யார் வேண்டுமானாலும் என் பண்ணைக்கு வந்து தேவையான, வெங் காயத்தை இலவச மாகவே எடுத்துக் கொண்டு போக லாம் என்று பேப்பரில் விளம்பரம் கொடுத்து விட் டேன்'' என்கிறார் ஜோஷி.

வண்டிக்கூலி வெங்காய விலையைவிட அதிகமாயிருந்ததாம்!

இன்று ஜோஷியின் பண்ணை வெறும் விளை நிலமாக மட்டும் இல்லாமல், சிறந்த பரிசோதனைக் கூடமாகவும் விளங்குகிறது.

''வருமானம் எப்படி இருக் கிறது?'' என்றால், ஜோஷியின் பதில்: ''பெரிய அளவில் இல்லை. பத்திரிகைகளில் விவசாயம், பொருளாதாரம் பற்றிக் கட்டுரைகள் எழுது கிறேன். அதனால் சமாளிக்க முடிகிறது'' என்கிறார். (ஒரு வார்த்தைக்குச் சராசரியாக 'மூன்று' ரூபாய் சன் மானம் பெறுகிறாராம்!)

ஷேத்காரி சங்கதானா என்ற அகில இந்திய விவசாய சங்கத் தலைவராயிருக்கிறார் ஜோஷி.

''இன்று, இந்திய விவசாயியின் நிலைமை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டோம் அவரிடம்.

''என்றைக்குமே ஒரே நிலை தான். இந்திய விவசாயி விதையை விதைக் கிறான். ஆனால் அறுவடை செய்வது கடனை மட்டுமே!''

''இந்த நிலைமைக்கு என்ன கார ணம்?''

''இந்திய பொருளாதாரம், கிராமங்களை மையமாக வைத்துத் திட்டமிடப் பட வேண் டும் என்றார் காந்திஜி. ஆனால் நேரு காலம் தொட்டு, நகர்ப்புறங்களின் வளர்ச்சியில் தான் அரசு அதிக அக்கறை காட்டி வந் திருக்கிறது. நகரங்கள் பலவித வசதி

ரொம்ப 'ஸாஃப்ட்'!



பில் கேட்ஸ் டெல்லி வந்ததும் ஒரே பரபரப்பு. அவருடைய மைக்ரோ ஸாஃப்ட் நிறுவனம் இந்திய எம்.ஆர்.டி.பி விதிகளை மீறியதாகவும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அத்துறை (எம்.ஆர்.டி.பி) புலனாய்வு பிரிவு அதிகாரி ஒருவர் பலமாக சிபாரிசு செய்திருந்தார். அந்த சிபாரிசையும் அறிக்கையையும் வாபஸ் வாங்காவிட்டால் அவரைப் பணி நீக்கம் செய்து விடுவதாக பிரதமர் அலுவலகம் அச்சுறுத்த, வேறு வழியின்றி வாபஸூம் வாங்கி விட்டார் அதிகாரி. இதேபோல் சைனாவிலும் கேட்ஸ் கம்பெனிக்கு எதிரான சிபாரிசு தரப்பட்டு அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாம். நாம் மட்டும் ஸாஃப்ட்வேர் நிறுவனத்திடம் 'ஸாஃப்ட்'டாக இருக்கிறோமே என்று இந்திய அதிகாரிகள் புலம்புகிறார்கள்

பி.கு: அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் பிரதமர் முதலில் போய் கேட்ஸை ஹோட்டலில் பார்ப்பார் என்கிறார்கள் தர்பார் வட்டாரத்தில். இந்த இதழ் வெளியாகும் போது தர்பாரின் நம் பகுத்தன்மைக்கு மார்க் போட்டுக் கொள்ளுங்கள்.

உமா பாரதியின் தொண்டர்கள் அவரது அரசியல் துறவறத்தை எதிர்த்து பி.ஜே.பி தலைமை அலுவலகம் முன்பாக கூச்சலிட்டார்கள். அச்சமயம் அலுவலகத்திலிருந்தவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி. 'நாங்களா அவரை ராஜினாமா செய்யச் சொன்னோம்?' என்று கேட்டு கோஷதாரிகளை மடக்கிவிட்டார்! 'போகாதே போகாதே!' என்று கெஞ்சுவார்கள் என எதிர்பார்த்த உமாஜிக்கு ஒரே ஏமாற்றமாம்.

— இந்த்ரப்ரஸ்தன்

களுடனும் இருக்கின்றன. அவற்றிலிருந்து இருபது, முப்பது கி.மீ சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால் முன்னேற்றம் என்பதே தடைப்பட்டு நூறு ஆண்டுகள் ஆகிவிட்டது போல எண்ணத் தோன்றும். சுருக்கமாகச் சொன்னால், காந்திஜியை கோட்ஸே கொன்றார்; காந்தியக் கொள்கைகளை நேருஜி கொன்று விட்டார்!"

"இந்தியா ஒரு விவசாய நாடு. இங்கே விளையும் உருளைக்கிழங்கிலிருந்து சிப்ஸ் தயாரிக்க ஒரு பன்னாட்டு நிறுவனம் வர வேண்டுமா?"

"அதில் தவறு இல்லை. நம் மக்களின் நாக்கு ருசிக்கேற்ப, ஒரு பன்னாட்டு நிறுவனத்தால் நம் ஊர் உருளைக்கிழங்கிலிருந்து சிப்ஸ் தயாரிக்க முடியுமென்றால், அதையே ஏன் நம்மால் செய்ய முடியவில்லை? அதற்கேற்ற மனோபாவம் நமக்கு இல்லை. அவர்களுடன் நாமும் போட்டியில் இறங்க வேண்டும். அதுதான் சரியான அணுகுமுறை!"

"விவசாயிகளின் தலைவர் என்ற முறையில் பல போராட்டங்கள் நடத்தியிருப்பீர்கள். மறக்க முடியாத ஒரு அனுபவம்?"

"வடக்கு கர்நாடகப் பகுதியில் புகையிலை பயிரிடுவோர்க்கு மத்திய அரசு கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி போராட்டம் நடத்தினேன். ஏராளமான விவசாயிகள், தங்கள் குடும்பத்துடன் போராட்டத்தில் பங்கேற்றனர். உள்ளூர் போலீசிடம், பக்குவமாகப் பேசி, அடக்குமுறையில் ஈடுபடாதீர்கள். நீங்கள் எங்களைக் கைது செய்ய விரும்பினால் எனக்கு மூன்று மணி நேர அவகாசம் கொடுங்கள், அனைவரிடமும் பேசி, ஏற்பாடு செய்கிறேன் என்று ஒரு எழுதாத ஒப்பந்தம் செய்துகொண்டேன். போராட்டம் இருபது நாட்களுக்குப் பின்னும் தொடர்ந்தது. திடீரென்று ஓர்நாள் என்னைக் கைது செய்து அழைத்துக்கொண்டு போனார்கள்.

"சிறிது நேரத்திலேயே கூட்டத்தைக் கலைக்க துப்பாக்கிச் சூடு நடந்தது. பன்னிரண்டு பேர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

"சிறையிலிருந்து வெளிவந்த பின், துப்பாக்கிச் சூட்டில் உயிர் இழந்தவர்களின் குடும்பங்களைச் சந்தித்தேன். மிக ஏழையான ஒரு விதவைப் பெண். அவரது இரண்டு மகன்களும் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள். அவருக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லாமல் நின்று கொண்டிருந்தேன். அந்தப் பெண்மணியோ, 'எனக்கு இன்னும் ஒரு மகன் இருந்தால், அவனையும் தயங்காமல் போராட்டத்துக்கு அனுப்பி வைத்திருப்பேன். எங்களுக்காக நீங்கள் போராடுகிறபோது, உங்கள் பின்னால் நிற்பதுதானே எங்கள் கடமை' என்றார் கண் கலங்கியபடி. ஆயுள் காலத்துக்கு மறக்க முடியாது அந்த நிகழ்ச்சியை..."

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **யோகா**



எல்.ஐ.சி எப்படி எரிந்தது?

தடய அறிவியல் நிபுணர்
டாக்டர் பி. சந்திரசேகரன்



"கணவனுக்கும் 'ஏ' பிரிவு ரத்தம்; மனைவிக்கும் 'ஏ' பிரிவு ரத்தம். கணவன் சந்தேகப்படும் பக்கத்து வீட்டுக்காரனின் ரத்தமும் ஏ பிரிவு. இந்த நிலையில் உங்கள் ஹெச்.எல்.ஏ முறையில், பிறந்த குழந்தை யாருக்குப் பிறந்தது என்று கண்டுபிடிக்க முடியுமா?"– முதலமைச்சர் ஜெயலலிதா இந்தக் கேள்வியைக் கேட்டதும், நிதித் துறைச் செயலர் மற்றும் அதிகாரிகள் என்னை 'மாட்டிக்கொண்டாய்' என்பது போல் பார்த்தார்கள். இந்த ஹெச்.எல்.ஏ முறையைப் பற்றி நான் முதலமைச்சரிடம் ஆழமாகச் சொல்லாமல் மேலோட்டமாக, எல்லோருக்கும் தெரிந்த 'ஏ', 'பி', 'ஓ' குருப் ரத்த வகைகளைச் சொல்லி விளக்கவேதான் அவருக்கு இந்தச் சந்தேகம் வந்தது. அப்புறம் இந்த ஆண்டிஜென்களைக் கோடிக்கணக்கில் பிரித்துப் பார்த்து ஒப்பிட்டுக் கண்டுபிடிக்க முடியும் என்று விளக்கியவுடன் அவருக்குச் சந்தேகம் தீர்ந்தது. ஹெச்.எல்.ஏ முறையில் ஆராய்ச்சி செய்து Disputed Parentage வழக்குகளில் கருத்துச் சொல்ல, புதிய பொறுப்புகளை உருவாக்க ஜெயலலிதா உடனே ஒப்புக்கொண்டார். குறிப்பாக பெண்களை ஏமாற்றி, குழந்தையைக் கொடுத்துவிட்டு ஓடிப் போகும் எத்தர்களை அடையாளம் காண இந்த முறை உதவும் என்ற அம்சம் அவருக்குப் பிடித்துப் போனது.

ஒரு குற்றம் நடந்த இடத்தில் நிச்சயம் ஏதாவது ஒரு தடயம் இருந்தே தீரும். ஆனால் தடய இயல் அடிப்படையில் வழக்குகளுக்கு உதவும் சாட்சியங்கள் மௌன சாட்சியங்களே. தீ விபத்துக்களில் இந்த மௌன சாட்சியங்கள் கூட அழிந்து போகும். நான்கூட நகைச்சுவையாக, தீ பிடித்ததற்கான காரணத்தைக் கண்டறியத் துணை புரியும் சாட்சியங்கள் 90 சதவீதம் தீயினால் அழிக்கப்படும்; மீதி 10 சதவீதம் தீ அணைப்பின்போது அழிக்கப்படும் என்று சொல்வேன். தீ விபத்துகள் இரண்டு வகைப்படும். மின்கசிவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக ஏற்படும் தீ விபத்துகள். அடுத்தது வேண்டுமென்றே சதியின் காரணமாக ஏற்படும் தீ விபத்துகள்.

தீ விபத்துகளில் காரணங்களைக் கண்டு பிடிக்க தீ அணைப்பு வீரர்களின் சாட்சியம் மிகவும் உதவியாக இருக்கும். நெருப்பின் நிறம், புகையின் நிறம் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் சொல்வதை வைத்துக் கொண்டு எந்த ரசாயனப் பொருள் தீ பிடிக்கக் காரணமாக இருந்திருக்கும் என்று யூகித்துப் பார்க்க முடியும். தீ ஒரு இடத்தில் பிடித்து பிறகு தான் பரவும். முதலில் பிடிக்கும் இடத்தை Centre of fire என்போம். அந்த இடத்தை நன்கு ஆராய்ந்தால் காரணங்களைக் கண்டுபிடிக்க சாட்சியங்கள் இருக்கும். மரக்கட்டையில் முதலில் தீப் பிடித்தால் அது எப்படிப் பரவும் என்று

சொல்ல முடியும். தீ விபத்து பற்றி இவ்வளவு விரிவாகச் சொல்லக் காரணம், பல பரபரப்பான தீ விபத்துகளை ஆராய்ந்து, காரணங்களைக் கண்டுபிடித்து அறிக்கைகள் கொடுத்திருக்கிறேன்.

இப்போது சென்னையில் பல உயரமான கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தாலும், சில வருடங்களுக்கு முன்பு வரை உயரமான கட்டடம் என்றால் அது எல்.ஐ.சி கட்டடம் தான். சுற்றுலாப் பயணிகள், எல்.ஐ.சியை அண்ணாந்து பார்த்து ஆச்சர்யப்பட்டுச் செல்வதுண்டு. அப்படிப்பட்ட எல்.ஐ.சி கட்டடத்தில் தீ விபத்து. ஒரு தளத்தில் பிடித்த தீ எல்லா தளங்களுக்கும் பரவி, ரெகார்டுகள், மேற்கூரைகள் (false ceiling) மேசை, நாற்காலி, அலமாரிகள் என்று சகலமும் தீக்கிரையாகின. இந்த விபத்து நடந்தபோது, கன்னிமரா ஹோட்டலில் ஒரு விருந்தில் கலந்து கொண்டிருந்தேன் நான். யாரோ, 'எல்.ஐ.சி.யில் தீ' என்று கேஷுவலாகச் சொல்லிவிட்டுப் போனார்கள். நான் உடனே பதற்றத்துடன் வெளியே வந்து கட்டடம் திகு, திகுவென்று தீப்பற்றி எரிவதைப் பார்த்தேன்.

மறுநாள் முதல்வர் கலைஞர் எரிந்த கட்டடத்தை முழுமையாகச் சுற்றிப் பார்த்தார். பிற்காலத்தில் டி.ஜி.பி.யாக இருந்த ஸ்ரீபால் அப்போது குற்றப்பிரிவு கண்காணிப்பாளர். அவர் என்னிடம், "சந்திரசேகர்... எப்படியாவது இந்தத் தீ விபத்துக்கான காரணத்தைக் கண்டுபிடித்தே தீர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். ஏனென்றால், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சுமுக உறவு இல்லாத சூழல் அது. பலர் கற்பனையாகப் பல்வேறு வதந்திகளை உலவ விட்டுக் கொண்டிருந்தார்கள்.

தீ எரிந்துகொண்டிருந்தபோதே பார்த்துவிட்டதால், இரண்டாவது மாடியில்தான் முதலில் தீ பிடித்தது என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. அந்தத் தளத்தை அங்குலம் அங்குலமாகக் கண்களால் எக்ஸ்ரே எடுத்தேன். மொத்தத் தளங்களுக்கும் குளிர் சாதன வசதியைக் கொடுக்க ஒவ்வொரு தளத்திற்கும் குளிர்காற்றைக் கொண்டு செல்லக்கூடிய குழாய்கள் இருந்தன. அது ஒரு பழைய மாடல் ஏ.ஸி. சாதனம். இரண்டாவது தளத்திலிருந்து அந்த ஏ.ஸி. குழாயின் முகத்துவாரம் வழியே உட்புறம் பார்த்தேன்; பகீரென்றது. காரணம் அந்தக் குழாய்களுக்குள் எரிந்துபோன சிகரெட்டின் ஃபில்டர் பாகங்கள் நிறைய இருந்தன. அவை தவிர பாதி பிடித்து அணைத்துப் போட்ட சிகரெட் துண்டுகளும் இருந்தன. குளிர் சாதனக் குழாய் அருகில் மது பாட்டில்களும் இருந்தன. அப்போது கடுமையான மது விலக்கு அமுலில் இருந்ததால் யாரோ சிலர் திருட்டுத்தனமாக இரண்டாவது மாடிக்கு வந்து குடித்துவிட்டுப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பது புரிந்துவிட்டது.

நான் என்னுடைய அலுவலகத்தில் எல்.ஐ.சி போன்ற மாடலைச் செய்து, அதே போன்ற குளிர்சாதனக் குழாய் பொருத்தி அதற்குள் ஃபில்டர் துண்டுகளைப் போட்டு அணைக்காத சிகரெட்டையும் போட்டு சோதனை செய்துபார்த்தேன். குழாய் வழியாகப் பிடித்த தீ எல்லா தளங்களுக்கும் ஏ.ஸி குழாய் மூலம் பரவி, முழு மாடல் தீப் பற்றி எரிய ஏழு நிமிடம் பிடித்தது. எனக்குப் புரிந்துவிட்டது. அருகிலுள்ள குடிசைப் பகுதியைச் சேர்ந்த சிலர், மாலை அலுவலகம் முடிந்து ஊழியர்கள் எல்லோரும் சென்ற பின்னர் எட்டு, ஒன்பது மணி வாக்கில், பக்கத்து பில்டிங் வழியாக எல்.ஐ.சி, இரண்டாவது தளத்துக்கு வந்து தினமும் குடித்து விட்டுப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை விசாரணையில் கண்டுபிடித்தேன்.

என்னுடைய கண்டுபிடிப்புகளை அறிக்கையாகக் கொடுத்தேன். ஏற்கெனவே இருந்தது போன்ற ஏ.ஸி. வசதியை மீண்டும் பொருத்தக்கூடாது; நவீன வசதியைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிக்கையில் தெரிவித்திருந்தேன். என் அறிக்கைக்குப் பின் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

எல்.ஐ.சி கட்டடத்திற்கு அருகாமையில் இருந்த பழைய ஸ்பென்ஸர் வணிக வளாகமும் ஒருமுறை தீ விபத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மின் கசிவு (short circuit) காரணமாகத் தீ விபத்து ஏற்பட்டதாகச் சொன்னார்கள். நான் மிச்சம்

''என்னதான் லோ பட்ஜெட் படம்னாலும் இப்படியா பண்ணுவாங்க...?''


''ஏன்? என்னாச்சு...?''

''டிக்கெட் கவுண்டர்ல காசு வாங்கிட்டு அங்கேயே கதையைச் சொல்லி அனுப்பிட்டாங்க...!''

— டி.என். சத்யா முருகவேல்

மீதியிருந்த ஒயரிங் உட்பட எல்லா மின் சாதனங்களையும் பரிசோதித்துப் பார்த்தேன். ஷார்ட் சர்க்யூட் காரணமல்ல என்று புரிந்தது.

ஸ்பென்சர் கட்டடத்தில் முதலில் தீ பிடித்த இடம் பித்தளை மற்றும் மரத்தினால் செய்யப்பட்ட வீட்டு அலங்காரப் பொருட்கள் விற்கும் கடை. அந்தக் கடைக்காரரைத் தீவிரமாக விசாரித்தோம். பித்தளை, மரச் சாமான்களை விற்கும்போது அவற்றை வார்னிஷ் மூலம் பாலிஷ் செய்து புத்தம் புதிதாக மாற்றி கொடுப்பாராம். அதற்காக வார்னிஷ் பாட்டில்களைக் கடை வாசலில் ஒரு ஓரமாக வைத்திருந்தார். அந்தப் பாட்டில்களை ஒட்டி வார்னிஷ் போட பயன்படுத்தப்பட்டக் கந்தல், கிழிசல் துணிகள் வைக்கப்பட்டிருந்தன. வார்னிஷ், துணிகள்தான் தீ விபத்துக்குக் காரணம் என்று தோன்றியது. ஆனால் எதையும் ஆதாரத்தோடுதான் சொல்ல வேண்டும்.



எனவே என்னுடைய சோதனைச்சாலையில் பலவித ரசாயனப் பரிசோதனைகள் செய்து பார்த்தேன். வார்னிஷின் கூறுகளைப் பிளந்து பார்த்து அவற்றில் உள்ள எரியும் தன்மைகளைக் குறிப்பெடுத்தேன். முடிவாக, கந்தைத் துணிகளில் இருந்தே தீ (spontaneous combustion) பரவியது என்று அறிக்கை கொடுத்தேன்.

சென்னையின் மிக முக்கியமான அடையாளச் சின்னமாக இருந்த மூர்மார்க்கெட் எப்படி எரிந்தது என்பது குறித்து இன்றும் வதந்திகள் இருக்கின்றன. அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் மூர்மார்க்கெட்டில் தீ விபத்து ஏற்பட்ட சில மணித் துளிகளுக்கு முன்தான் மூகாம்பிகை கோயிலுக்குச் செல்ல பக்கத்திலிருக்கும் சென்ட்ரலில் இருந்து ரயில் ஏறியது பலருக்குச் சந்தேகங்களைக் கிளப்பியது. மூர்மார்க்கெட் இடம் ரயில்வேயின் விஸ்தரிப்புப் பணிகளுக்கு மிகவும் தேவையாக இருந்ததுதான் விபத்தின் பின்னணி என்றார்கள் சிலர்.

வழக்கம் போல் தீ விபத்துக்கான காரணத்தைக் கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டோம். மூர்மார்க்கெட்டில் பெரும்பாலும் இருந்தவை துணிக்கடைகள், புத்தகக் கடைகள் மற்றும் ஃபான்ஸி சாமான்கள் விற்கும் கடைகள்தான். ரேடியோ மற்றும் டேப் ரிகார்டர் விற்கும் கடைகளும் இருந்தன.

முதலில் தீ உருவானது ஒரு ரேடியோ கடையில் என்பதைக் கண்டுபிடித்தோம். அந்தக் கடைக்காரர், அக்கம் பக்கத்திலிருந்து நிறைய ஒயர்களை இழுத்து ரேடியோவுக்கும் டேப் ரிகார்டர்களுக்கும் கனெக்ஷன் கொடுத்து வைத்திருக்கிறார். ஒயரிங்கை எடுத்து மின் கம்பியின் மேலுள்ள இன்சுலேஷனை சோதித்துப் பார்த்ததில் உள்ளே எரிந்திருந்தது தெரிய வந்தது. மின்கசிவு (ஷார்ட் சர்க்யூட்)தான் தீ விபத்துக்குக் காரணம் என்று தெரிய வந்தது. அது வேகமாகப் பரவியதற்குத் துணி மற்றும் புத்தகங்கள்தான் காரணம். ஆனால் மூர்மார்க்கெட்டைப் பொறுத்தவரை அதிலிருந்த கடைகள்தான் எரிந்தன. கட்டடம் அப்படியே இருந்தது.

ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது பீஷ்ம நாராயணசிங் கவர்னராக இருந்தார். அப்போது கோட்டையில் இருந்த அவரது அறையில் ஓர் இரவில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. அலங்கார மேற்கூரைகள் எரிந்து போயின. நல்ல வேளையாக, பெரிதாகப் பரவும் முன் தீ அணைக்கப்பட்டது. கவர்னர் சில அரசியல்வாதிகளைப் பற்றிய ரகசிய ஆவணங்கள் வைத்திருந்ததாகவும், அவற்றை அழிக்க யாரோ செய்த சதிதான் தீ விபத்து என்றும் வதந்தி பரவியது. தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமன் என்னை அழைத்து தீ விபத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கச் சொன்னார்.

கிட்டத்தட்ட பத்து நாட்கள் அந்த அறையைச் சோதனை செய்தேன். டியூப் லைட்கள், மின் விசிறிகள் ஆகியவற்றுக்குச் செல்லும் ஒயர்களை நன்கு பரிசோதித்துப் பார்த்தேன். அந்த அறையில் மொத்தம் 12 டியூப் லைட்டுகள் எரிந்து போயிருந்தன. பன்னிரண்டு டியூப் லைட்டுகளையும் மீண்டும் அதே இடத்தில் பொருத்தி அறைக்கு வெளியே இருந்த ஸ்விட்சுகளுடன் கனெக்ஷன் கொடுத்தேன். பிறகு ஒவ்வொரு ஸ்விட்சாக அணைத்துக் கொண்டு வந்தேன். எல்லா ஸ்விட்சுகளையும் அணைத்த பிறகு அறையை எட்டிப் பார்த்தேன்; திடுக்கிட்டேன்!

(தொடரும்)

தறிகள் இங்கே வி

தமிழக அரசின் பு



- தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக ஜவுளிக்கென்று தனியே ஒரு கொள்கை
- 60 வயதான நெசவாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.150 என்பது ரூ.200 ஆக உய
- 60 வயதிற்கு முன் இறக்கும் நெசவாளரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 1995-96ல் ரூ.15 ஆயிரம் என்பது 2000-2001ல் ரூ.50 ஆயிரமாக உயர்வு
- 1996 வரை நிலுவையில் இருந்த தள்ளுபடி மானியம் ரூ.43.25 கோடி கலைஞர் அரசால் வழங்கப்பட்டது
- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை ஏற்றுமதி ரக உற்பத்தியில் ஈடுபடுத்தி அதன் மூலம் நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் கணிசமான உயர்வு
- ஆண்டுக்கு ரூ.100 கோடி மதிப்பில் ஏழை எளியவர்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு
- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளுக்கு தனியாக வணிகப் பெயர் உருவாக்கி விற்பனை அதிகரிப்பு

யாடும்
பாடும்



நூல் நயம் காண்போர் வாழ் நலன் காண்போம்

● எம். டி.ரவிகாந்த், காஞ்சிபுரம்.

? தமிழகத்தில் வரும் தேர்தலுக்குப் பிறகு தனிக்கட்சி ஆட்சி அமைவது நல்லதா? கூட்டணி ஆட்சி அமைவது நல்லதா?

! தனிக்கட்சி ஆட்சியே நல்லது; ஆனால் அது ஊழல் ஆட்சியாக இருக்கக் கூடாது. கூட்டணி ஆட்சி சிலாக்கியமில்லை; ஆனால் நல்லாட்சி அந்த விதமாகத்தான் அமையும் எனில் வரவேற்கலாம். எல்லாம் தமிழக வாக்காளரின் புத்திசாலித்தனத்தைப் பொறுத்திருக்கிறது!

● ஆர். ராஜா சாஹிப், சென்னை - 108 ●

? ஒரு வேளை ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அவர் மீதுள்ள வழக்குகள் எல்லாம் வாபஸாகி விடுமா? அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறதா?

! சட்டத்தில் 'இடம் பண்ண' ஜெயலலிதாவுக்குச் சொல்லியா தரவேண்டும்! நிலைமையைச் சாதகமாக மாற்றிக் கொள்ள பல வழிகள் உள்ளன.



• இடம் பண்ண.....

● புளியரை கணேசன், சென்னை - 30.

? நடிகை ஜோதிகா படங்களுக்கு நாலு வாரம் தடையாமே? இனி தமிழக மக்கள் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்? (ஜோதிகா போட்டோவை கல்கியில் வரவழைக்க எனக்கு வேறு வழி தெரியவில்லை)

! அட்டையிலேயே ஜோதிகா படத்தைப் போட்டு வரவேற்புச் சொன்னோமே-மறந்துட்டீங்களா! நிம்மதியாச் சாப்பிடுங்க!

● கே. லக்ஷ்மணன், மதுரை-16.

? நடிகர் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில்,

நடப்பது காமராஜ் ஆட்சி என்கிறாரே கலைஞ

கர்நாடக-தமிழக அரசுகள் மத்திய அரசின் உதவி கோரியிருந்தால் நாங்கள் உதவியிருப்போம் என மத்திய அமைச்சர் கூறுகிறாரே? இந்தியாவில் எங்கு அநீதி நடந்தாலும் தடுப்பது மத்திய அரசின் கடமை அல்லவா?

! பொதுவாக, மாநில அரசுகள் விஷயத்தில் மத்திய அரசு தலையிடுவதாகக் கருதப்படும் என்பதால் மாநில முதல்வர்கள் கோரிக்கை விடுக்க வேண்டும் என்றுதான் காத்திருப்பார்கள். ஆனால் வீரப்பன் விவகாரத்தில் மாநில முதல்வர்களிடமிருந்து மத்திய அரசு கோரிக்கையை எதிர்பார்ப்பதாக அறிவுறுத்தியிருக்கலாம். மூன்று அரசுகளுமே கோட்டை விட்டுவிட்டன என்பதுதான் உண்மை.

● ஆர். பி. ஜெயச்சந்திரன், திருச்சி-9.

? 'ஆன்மிகத்துக்கும் எனக்கும் எந்த

நீங்கள் கேட்டவை – தராசு

விரோதமும் கிடையாது' என்கிறாரே முதல்வர் கருணாநிதி?

! ஆன்மிகத்தை அவர் வரவேற்பதாகக் கூற வில்லை என்பதுடன் மனிதாபிமானத்தில் நம்பிக்கை உள்ள ஆன்மிகத்திடம் விரோதம் இல்லை என்றுதான்' கவனமாகச் சொல்லி யிருக்கிறார்.

● இரா. நல்லகண்ணு, பாளையங்கோட்டை.

? பொன்விழா காணும் தினமலர் நாளேடு பற்றிக் குதிப்பிடுங்களேன்?

! தலையங்கம் எழுதும் வயதாகிவிட்டது.

● க.பூங்கொடி, சித்தோடு.



● மூன்று அரசுகளும்.....



● தலையங்க வயது

? தற்போது நடப்பது காமராஜர் ஆட்சிதான் என்கிறாரே கருணாநிதி. உண்மையா?

! அப்படியாவது மூப்பனாருக்குக் கண்ணும் காதும் திறக்காதா என்று பார்க்கிறாரோ என்னவோ!

● அ. குமார், காட்டுக்கானூர்.

? தொலைத் தொடர்புத்துறை அரசுத் துறையிலேயே தொடர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாயம்தானே?

! புண்ணாக்கு நியாயம்! தனியார் மயமானால் ஏய்க்காமல் உழைக்க வேண்டுமே என்கிற பயம்தான்!

● ஜி. ராம்தாஸ், திருப்பூர்.

? பூலான் தேவிக்கும் வீரப்பனுக்கும் (சந்தனம்) உள்ள வேறுபாடு என்ன...?

! பூலான் தேவி-சூழ்நிலையின் கைதியாகி தண்டனை அனுபவித்தவர். வீரப்பன்-பிறரைச் சூழ்நிலைக் கைதிகளாக்கி தண்டனையிலிருந்து தப்பிவிடுபவர்!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'காஷ்மீரில் பெண்கள் பர்தா அணியா விடில் காலில் சுடுவோம்' என்று லஷ்கர்-இ-தோய்பா இயக்கம் மிரட்டியுள்ளதே?....

! அணியாத இரு பெண்களைச் சுட்டுக் காயப்படுத்தியேவிட்டது- அழகு நிலையத் தினுள் நுழைந்து. இதுபோன்ற அக்கிரமங் களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு மானால், அதற்கு ஒரே வழி- பாகிஸ்தானுடன் சுமுக உறவு கொள்வதுதான். அந்த வழியைத் திரும்பிப் பார்க்கவும் மறுத்து பிரதமர் பர்தா போட்டுக் கொண்டிருக்கிறாரே!

● ஆர். சுந்தரி, குளித்தலை. ❐

? நிதிநிலை நெருக்கடி-ஆள் குறைப்பு-விருப்ப ஓய்வு- என்று அரசாங்கம் அறிவித்து வருகிற நேரத்தில் டெலிபோன் ஊழியர் ஸ்டிரைக் இரண்டு நாள் நடந்ததற்கே ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்கியிருக் கிறார்களே- அதுவும் கோரிக்கை இன்றியே... இது எவ்விதத்தில் நியாயம்?

! புதிய பொருளாதாரக் கொள்கை அடிப் படையில் தனியார் துறைக்கு டெலிகாம் அமைப்புகளைப் படிப்படியாகத் தள்ளிவிடு வதற்கு முன்னதாக, சம்பள உயர்வுகளை அறிவிப்பதில் அமைச்சருக்கு என்ன கஷ்டம்? சுமை தனியார் துறைக்கு அல்லவா! அதைக் கடைசியில் பயனீட்டாளர்கள் தானே தாங்கப் போகிறார்கள்!



● தண்டனையும்....



● ...தப்பித்தலும்!

❐ ரூ. 50/- பரிசு பெறுபவர்:
ஆர். சுந்தரி,
13ஏ, சோழர் தெரு,
குளித்தலை - 639104.

● ரூ. 25/- பரிசு பெறுபவர்:
ஆர். ராஜாசாஹிப்,
584, பி.எச். சாலை,
அரும்பாக்கம்,
சென்னை - 600 106.



8

கோயிலருகே பஸ் பிடித்து, வெளியூர் பஸ் ஸ்டாண்டில் இறங்கி, பாம்பன் செல்லும் சேதுபதி நெடுஞ்சாலை யோரமாக நடந்துகொண்டிருந்தார்கள், உமாவும் அற்புதமேரியும். இருபுறமும் மாவு போலப் பரவிக் குவிந்திருந்தது மணல்வெளி. அடர்ந்த கருவேலம் புதர்களின் இருள், மணல்பரப்பின் வெண்மையை மேலும் வெளிச்சமூட்டிக் காட்டியது.

அற்புதமேரி கள்ளி பொறுக்கத் தொடங்கியதும் உமா ஒரு புளிய மரத்தடியில் அமர்ந்து அவற்றை உடைத்துச் சிராக்க ஆரம்பித்தாள். அப்பாவுக்கென சமித்துகள் உடைத்து வைப்பதற்கும் இதற்கும்தான் எத்தனை வித்தியாசம்? விரல்களின் இடுக்குகளில் குத்திய முட்கள், நினைவுகளின் பெருவெளியின் இடையே புகுந்து வலித்தது.

"ம்? அப்புறம்?" என்றாள் அற்புதமேரி.

நீலுப்பாட்டி கிளறிவிட்ட அகிலாவின் ஞாபகத் தீ பரவி அவளை நிலைகொள்ளாதிருக்கச் செய்துவிட்டது. இரண்டு நாட்களாக, குடும்பக் கதைகள், ஊர் வம்புகள், ஆண்களைப் பற்றிய குறிப்புகள், என எதையும் பகிர்ந்துகொள்ள உமாவுக்கு அற்புதமேரி ஒரு சரியான துணையாகவே இருந்தாள். ஆனால் ஒரு பெரும் சுமையாக வந்து கவிந்த சோகம் தன்னைப் போலவே அவளையும் தலைகுப்புறப் புரட்டி விட்டிருப்பதை உமா உணர்ந்தாள். உண்மையில் அவளது துக்கத்துடன் தன்னுடையதை ஒப்பிடுவதே சரியல்ல என்று அவளுக்குத் தோன்றியது.

உயிர்கள் ஒன்றன்மீதொன்று கவிவதன் விளைவாக அன்பு சுரக்கிறது. பிரதிபலன் கோரி நிற்காத அன்பு, நெருக்கமுண்டாக்குகிறது. நெருக்கத்தின் தன்மையே அல்லவா உறவுக்குப் பெயராகிறது!

"உன்னை மாதிரியொரு சிநேகிதி எனக்கு அண்ணியா வர்றான்னா வேண்டாம்பனா உமா? சந்தோசந்தானா? ஆனா, இதெல்லா

பா. ராகவன்

நடக்குமான்னுதான் நெஞ்ச கெடந்து அடிக்கு" என்றாள் அற்புதமேரி.

உமா அவள் கரங்களைப் பற்றிக்கொண்டாள். பேச்சாக உருப்பெறாத உணர்ச்சியைத் தன் ஸ்பரிசம் மூலம் அவள் நரம்புகளில் நேரடியாகச் செலுத்திவிடும் தவிப்பு அவள் செய்கையில் இருந்தது. பிற்பகல் நான்கு மணிக்குத் தொடங்கிய சம்பாஷனை எங்கெங்கோ உலவி இறுதியில் அகிலாவின் பக்கம் வந்து நின்றது.



அலை உறங்கும் கடல்

"அய்யரு பையனைத்தானே விரும்பினா உங்கக்கா? அப்புறமென்ன சிக்கல்?" என்று அற்புதமேரி கேட்டாள்.

உமாவுக்குத் தன் நினைவுகளில் அவ்வளவாகப் படியாத தினங்களின் சரித்திரம் முழுவதும் நீலுப்பாட்டியால் மட்டுமே தெரிய வந்திருந்தது. ஒரு சுருதியில் நிற்காத அவளது உடைந்த குரல் எப்போதும் அச்சமும் வியப்பும் கலந்தே ரகசியமாக ஒலிக்கும். சாதாரண சம்பவங்களைக்கூட ஒரு தேவதைக் கதைக்குரிய விவரிப்பு முறையில், வலை விசிறிப் போடுவது போல ஆரம்பிப்பாள் நீலுப்பாட்டி. அகிலாவைப் பற்றி அவள் பேசிய சந்தர்ப்பங்களும், அப்படியே அமைந்தன. அதுகாறும் ஒளித்து வைத்திருந்த ஒரு சரித்திரப் பேழையைத் தூசு தட்டாமல் திறந்து காட்டுவது போல அவள் விவரித்த தருணங்கள் உமாவுக்குப் பெரும் மனக் கலக்கத்தையே உண்டு பண்ணின. தன் காதல், வீட்டில் கற்பனைக்கெட்டாத பல விபரீதங்களுக்கு மீண்டுமொரு தொடக்கப் புள்ளியாக அமைந்து விடக் கூடும் என்று பட்டது.

உமாவுக்கு அப்போது பதினொன்று அல்லது பன்னிரண்டு வயது இருக்கும். அகிலாவுக்கு இருபது. தலைமுறைகளும் மனிதர்களும் மாறிக்கொண்டே இருந்தாலும் வாழ்க்கை முறை என்று மாறியிருக்கிறது. ராமேஸ்வரத்தில்?

எல்லா பெண்களைப் போல அகிலாவும் பள்ளிப் படிப்புடன் நிறுத்திக்கொண்டு சமையலறை விறகுகளில் ஒன்றாகத் தானும் எரியத் தொடங்கியிருந்தாள்.

அம்மாவுக்கு எல்லாம் ராணுவ ஒழுங்கில் இருந்தாக வேண்டும். சமையல் தொடங்கி

சலவை வரை. வெண்டைக்காய் நறுக்குவ தென்றால் ஒரு அரிசிப் பொறி நீளத்துக்கு மேல் கூடாது. வீடு பெருக்கித் துடைத்தால், சாப்பிடத் தட்டே தேவையில்லை என்பதாக அமைய வேண்டும், சுத்தம். துணி உலர்த்து வதில் ஒரு லயம். துவையல் அரைப்பதில் ஒரு லயம். விளக்கேற்றும்போதுகூட குண்டுசி நுனி போலத் திரி இருக்க வேண்டு மென்பாள்.

ஓர் இல்லதரசி ஆவதற்கான ஆரம்பப் பயிற்சியில் அகிலா முனைந்திருந்தபோது தான் ராமநாதனைக் கண்டாள். அக்னி தீர்த் தக் கரையில் அவனே ஒரு ஜோதி ரூபமான வனாக அவளுக்குத் தோன்றியிருக்க வேண் டும். உயரமும் திண்மையுமான அவன் தோற் றம் அகிலாவை முதலில் கவர்ந்திருக்கக் கூடும். படித்துக் கொண்டிருந்த எம்.காம் இரண்டாவதாக. இந்திரனையும் வருண னையும் வாயுவையும் பிற தேவதாரூபங் களையும் தன் உச்சரிப்பின் கம்பீரத்தில் கட்டியிழுத்து வந்து கண் முன் நிறுத்துவது போன்ற அவனது மந்திர உச்சாடனம் யாருக்கும் சிலிர்ப்பூட்டக் கூடியது. பரம ஏழை என்று தெரிந்தால் அவன் வைதிகம் செய்து வைக்கக் காசு வாங்க மாட்டான்.

சங்கத்தில் அது பற்றிய சலசலப்புகள் விவாதமாகவும் சச்சரவாகவும் உருப்பெற்ற போதுகூடத் தனி நபர் விருப்பம் என்பதாகத் தீர்ப்பாகி, பல சமயம் பலரது அதிருப்திக்கு உள்ளாகியிருந்தான்.

"தோ பார் ராமு, நீ வேணா மகாத்மாவா இரு. ஆனா, மனுஷா பக்கத்துல உட்கார்ந்து பிழைப்பைக் கெடுக்காதே. உன் எம்.காமை முடிச்சுட்டேன்னா என்னு டப்பாவை நீ தூக்கப் போறதில்லை. அப்புறம் வரவன் 'ஃபிரீ அய்யரு' இல்லியான்னு கேட்டா நாங்க பதில் சொல்ல முடியாது. வேணு மானா, உன் கடையைக் கொண்டு தனுஷ் கோடில விரிச்சுக்கோ. திருப்புல்லாணில வெச்சுக்கோ, சொல்லிட்டேன்" என்று அப்புசாமியே கூடப் பலமுறை கூறியதை அகிலா கேட்டிருக்கிறாள்.

"இல்லாதப்பட்டவா கிட்ட பணம் வாங்க மனசு கேக்கலை மாமா. நீங்களும் வேணா இப்படி இருந்து பாருங்கோ. குடுக்கறவன் ரெண்டு கையாலேயும் அள்ளிக் குடுப்பான்" என்பான் ராமநாதன்.

இதுவே கூட அகிலாவை அவனிடம் ஈர்க்கக் காரணமாயிருந்திருக்கலாம் என்று நீலுப்பாட்டி உமாவிடம் சொன்னாள். அப்புசாமிக்கு அவனைப் பிடிக்காமல் போனதற்கும்கூட.

ஆனால், எதற்கும் ஒரு உச்சகட்டம் உண்டல்லவா? ஒரு மகாசிவராத்திரி சமயம் அது நேர்ந்து விட்டது.

நகரம் நிரம்பி வழிந்த நேரம் அது. எப்போதும் ஈரத்துடனேயே இருக்கும் ஆல யத்தின் தரையெங்கும் பாசி பிடிக்கு மளவுக்கு ஈரமும் அழுக்கும் படர்ந்து, சுத்த மாக்கச் சமயமில்லாத நெரிசல் உண்டானது. அக்னி தீர்த்த சாஸ்திரிகள் அத்தனை பேருக்கும் மூச்சு விட நேரமில்லாத பணி நெருக்கடி. மடி பிதுங்கும் வருமானம்.

உற்சவக் காலம், பத்து நாட்கள் பங்குகள் போக ஒரு நாளைக்கே இரண்டாயிரம் வீதம், குறைந்தது இருபதாயிரம் சேர்த்து விட முடியும் என்று அப்புசாமி நம்பினார்.

மூன்றாம் நாள் காலை அவருக்கொரு காஷ்மீரி தொழிலதிபர் அகப்பட்டான். ஆப்பிள் ஏற்றுமதி செய்து வருவதாகச் சொன்னவனின் மனைவியும் இரு சிறு பெண் குழந்தைகளும் நிலா உருண்டைகள் போலிருந்தார்கள்.

அப்புசாமி பெருமூச்சு விட்டார். தேடிப் போய் சிலரிடம் மட்டுமே குவியும் பணம் பற்றிய ஏக்கப் பெருமூச்சு.

ஒரு சங்கல்பத்துக்கும் பித்ரு தர்ப்பணத் துக்குமாகச் சேர்த்து ஐயாயிரம் தருவதாகக் கேட்காமலே சொன்னான் அந்தக் காஷ்மீரி.

"எப்போதுமா ஏழை பிராமணர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்? கொடுக் கும்போது பேரம் பேசக் கூடாது; கணக்குப் பார்க்கக்கூடாது."

அப்புசாமி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஈர

"உன் பையனை ஏன் தமிழ் மீடியம் பண்ணிக்கு மாத்தினே...?"

"எட்டு வருஷமா இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல்ல படிச்சும், அவனுக்கு 'அம்மா... தாயேன்'னு ஒழுங்கா சொல்லத் தெரியலையே!...."

— மிஸ்டர் எக்ஸ்



மணலில் லிங்கம் பிடிக்கத் தொடங்கினார்.

அப்போதுதான் அவசரமாக ஓடி வந்தான் ராமநாதன்.

"மாமா, ஒரு நிமிஷம்."

"என்ன?" என்றார் அப்புசாமி.

"ஒரு பெரிய பார்ட்டி வந்திருக்கு. இருவத்தஞ்சு பேர். குஜராத்தி மார்வாடிஸ். லட்சம் பணத்தைக் கட்டிண்டு வந்து இறங்கியிருக்கா. பண்ணிவெச்சா, சுளையா முப்பத்தஞ்சு, நாப்பது ரூபா தேறும். கெய்டு நாகராஜன் என்னைக் கூப்பிட்டு விட்டான். எனக்கு இது எக்ஸாம் டைம். மெனக்கெடணும். இந்தக் காச பார்த்தேன்னா, அது போயிடும். சட்டுனு உங்க ஞாபகம் வந்தது..."

துள்ளிக் குதித்தார் அப்புசாமி.

"எங்கே இருக்கா?" என்று கேட்டார்.

"ரயில்வே ஸ்டேஷன்லேயே மடக்கி உட்கார வெச்சுட்டு வந்தேன்."

உடலில் புது ரத்தம் பாய்ந்து, ஆவேசம் வந்தவர் போலானார் அப்புசாமி.

"தோ போறேன்!" என்று சிறிக் கிளம்பியவர், "இவனுக்கு சங்கல்பம் பண்ணி வெக்கணும். இதை மட்டும் நீ பார்த்துக் கோயேன்" என்று கேட்டார்.

"சரி மாமா."

"என் கண்ணு!" என்று செல்லமாக அவன் கன்னத்தைக் கிள்ளியெடுத்தவர், இரண்டிரண்டு படிக்கட்டுகளாகத் தாவி ஏறி, விநாடியில் மாயமாய் மறைந்தார்.

அப்புசாமி முதலில் வீட்டுக்குத்தான் ஓடினார். இருபத்தைந்து பேருக்குச் சமையலுக்குச் சொல்லிவிட்டு, 'சுப்பிரமணி' என்று குரல் கொடுத்தபடியே தெருவுக்கு வந்தார்.

மொட்டை கோபுர வாசலில் விடலைகளுக்குச் சமமாக கில்லியடித்துக் கொண்டிருந்த சுப்பிரமணி, "மாமா?" என்றான்.

"பெரிய பார்ட்டி வருது. கிறுக்கன் கடைல சாமானுக்குச் சொல்லிட்டு, மாட்டுக்காரனைத் தயாரா வந்துடச் சொல்லு" என்று உத்தரவிட்டுவிட்டு, குதிரை வண்டி பிடித்து, அவர் ரயில்வே ஸ்டேஷனைச் சென்றடைவதற்குள் -அரை மணி நேரம் ஆகிவிட்டிருந்தது.

ஸ்டேஷன் காலியாக இருந்தது. இருபத்தஞ்சு பேர் கொண்ட குஜராத்தி குழு எங்கு சென்றது என்று தெரியவில்லை.

பரபரப்படைந்து, ஸ்டேஷன் மாஸ்டரிடம் விசாரித்தார் அப்புசாமி. பிறகு வாயிலிலிருந்த ஆட்டோ டிரைவர்களிடம், குதிரை



"தலைவர் ரொம்பக் குழப்பத்துல இருக்கார்னு நினைக்கிறேன்."

"எப்படிச் சொல்றே?"

"இன்னிக்குக் கட்சியிலிருந்து அவர் வெளியேற்றிய எல்லோரும் எதிர்கட்சிக்காரங்களாச்சே!"

- நிர்மலா தேவி

வண்டிக்காரர்களிடம், கண்ணில் பட்ட கெய்டுகளிடம், சக சாஸ்திரிகளிடம்.

"ரெண்டு மூணு குரூப் இந்த ரயில்ல வந்தது. ஆனா யாரும் யாருக்காகவும் காத்திருந்த மாதிரி இல்லியே? எல்லாம் போயாச்சு."

ரயில் நிலையத்திலிருந்து கோயிலடி செல்லும் சாலையில் தலை தெரிக்க ஓடினார் அப்புசாமி. குஜராத்திகள், குஜராத்திகள் என்று அவர் சிந்தையும் விழிகளும் அதையே சுற்றிச் சுற்றி வந்தன.

என்ன சொல்லி விட்டு வந்தான் ராமநாதன்? காத்திருக்கச் சொன்னதாக அல்லவா தன்னிடம் சொன்னான்? ஒரு டோக்கன் அட்வான்ஸ் வாங்காமல் இத்தனை நம்பிக்கையாக யாத்திரிகளை ஸ்டேஷனிலேயே விட்டு வரும் வழக்கமில்லையே? அட்வான்ஸ் கொடுத்த யாத்ரிகள் காத்திருக்காமல் போக மாட்டார்களே? அதுவும் குஜராத்திகள் சாஸ்திரிகளின் விசிட்டிங் கார்டு வாங்கிக் கொள்ளாமல் ஒருபோதும் முன் பணம் தருவதில்லை.

தவிப்புடன் நான்கு ரதவீதிகளிலும் தர்மசாலைகளிலும் ஓட்டல்களிலும் சுற்றி வந்து களைத்துப் போய் மீண்டும் அக்னி தீர்த்தக் கரைக்கே வந்து சேர்ந்தார் அப்புசாமி.

ராமநாதன் அங்கு இல்லை. சங்கல்பம், காரியம் முடிந்து காஷ்மீரியும் போய்விட்டிருக்கக் கூடும். ஆனால் மற்ற தோழர்களும் எங்கே காணாமல் போய்விட்டார்கள்.

விறுவிறுவென நடந்து ராஜுவின் சங்குக் கடைக்குச் சென்று விசாரித்தார் அப்புசாமி.

"நல்ல கூத்து போ அய்ரே! நீ விட்டுட்டுப்

போன காஷ்மீரியோட குழந்தை தண்ணில தவறி விழுந்திடுச்சி. யாருமே கவனிக்கலை. மூச்சுமுட்டி, சாகற நேரம் ராமு பார்த்துட்டு ஓடிப் போய் முழுகித் தூக்கினான். எடுத்துட்டு ராம்நாட் ஓடியிருக்காங்க, ஆஸ்பத்திருக்கு. இங்க இருக்கற ஆஸ்பத்திரியெல்லாம் அந்தாளுக்கு வேணாமாம்..."

மாலை ஆறு மணிக்கு ராமநாதன் களைத்துப் போய் திரும்பி வந்தான்.

"என்னடா ஆச்சு?" என்றார் அப்புசாமி.

அரை நிமிடத்தில் ராஜு சொன்ன கருக்கத்தை அரைமணி நேரம் விரிவாகச் சொன்னான் ராமநாதன்.

உணர்ச்சியற்றுக் கேட்டுக் கொண்டிருந்த



அப்புசாமி, "பாவம் தொலைக்க வந்த இடத்துல பிள்ளையைத் தொலைக்க இருந்தான் பாரு! போறது போ. பிழைச்சுடுத்தோல்லியோ?"

"ஆமாம் ஆமாம்."

"அவ்னோதான். நம்ம தட்சணை குடுத்துட்டானோல்லியோ?"

ராமநாதன் அவரைக் கேள்வியுடன் நிமிர்ந்து பார்த்தான்.

"என்னடா பாக்கறே? அஞ்சாயிரம் தரேன்னானே?"

"அஞ்சாயிரமா! நான் சங்கல்பம் மட்டுந்தான் முடிச்சிருந்தேன். அதுக்குள்ள இப்படி ஆயிடுத்து. டாக்ஸி பிடிச்சி ராம்நாட் ஓடி, ஆஸ்பத்திரி அது இதுன்னு அவன் அலையறப்ப நான் என்னத்தைக் கேட்பேன்?"

"முட்டாள்!" என்று கத்தினார் அப்புசாமி.

"பணமே வாங்கலியா?"

"இல்லை" என்றான் ராமநாதன்.

"பாவி! பாவி!"– அவன் மேல்துண்டை எக்கிப் பிடித்தார் அப்புசாமி.

"உன்னால என் வருமானமும் போச்சு; நாளெல்லாம் அலைய விட்டதுதான் மிச்சம். ரயில்வே ஸ்டேஷன்ல குஜராத்தியும் இல்லே, புடலங்காயுமில்லே! வேற எவன் தள்ளிண்டு போனான்னும் தெரியலை. அவன்கிட்டயாவது அட்வான்ஸ் வாங்கினியா, அதுவுமில்லியா?"

"இல்லை மாமா."

அப்புசாமி அவனை ஒருகணம் முறைத்துப் பார்த்தார்.

"இனிமே என் மூஞ்சிலேயே முழிக்காதே. ஒழி" என்று சொன்னார். அவரது வழக்கமான மூச்சிறைப்பு, அன்றைய அதீதப் பரபரப்பினால் அதிகமாகியிருந்தது.

"பாரு! இதுதான் என் சம்பாத்தியம். ஒவ்வொரு நாளும் பிச்சையெடுத்தே ஆயுசு முடியப் போறது. உன் தர்மாத்மா போதனைகளையெல்லாம் உன்னோடவே வைச்சுக்கோ. ஒருநாள் பிழைப்பைக் கெடுத்தியே, நீ உருப்படுவியா? அஞ்சாயிரம்! அஞ்சாயிரம் தரேன்னான். கெட்டிக்காரனானா, வாங்கிண்டப்புறம் இல்லே வேலையை ஆரம்பிச்சிருக்கணும்? காலவ ஸ்மிருதி படிச்சவன்தானே நீயி? பணக்காரன் பண்ணின பாவம் எந்த நேரத்திலும் பழி வாங்கும்; ஏழை பண்ணின பாவம் என்னா உதிர்ந்துபோகும். வாங்கலைன்னு கூசாம சொல்றியேடா! என் வயிறு எரியறதே!"

ராமநாதன் பதிலேதும் பேசவில்லை. நீண்ட நேரம் மௌனமாக நின்றிருந்தவன், சட்டென்று, "மன்னிச்சுடுங்கோ மாமா. அந்த அஞ்சாயிரத்தை நானே உங்களுக்குக் கொடுத்துடறேன்" என்றான்.

"என்னது?" என்றார் அப்புசாமி. ஒரு கணந்தான். சற்றும் எதிர்பாராமல் பளாரென்று அவன் கன்னத்தில் அறைந்தவர், "போடா வெளியே!" என்றார்.

அவர் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. உடல் வியர்த்து வழிந்தது. நிற்க முடியாமல் தூணைப் பிடித்தபடி அமர்ந்தவர், உள்ளே பார்த்து, "அகிலா, இங்க வந்து வாசக் கதவை இழுத்துச் சார்த்து!" என்று உத்தரவிட்டார்.

அத்தனை காட்சிகளையும் அகிலா பார்த்துக்கொண்டுதான் இருந்தாள். 'வரேன் மாமா' என்று அவன் படியிறங்கிப் போகவும், தாங்க மாட்டாமல் நீலுப் பாட்டியிடம் ஓடிச் சென்று மடியில் விழுந்து குமுறி அழ ஆரம்பித்தாள்.

(தொடரும்)

முடியாது போனால் கூட வருவேன்!

மேடையில் தபலா, மிருதங்கம், டிரம்ஸ், கிடார் என்று ஒரு மெல்லிசை நிகழ்ச்சிக்குத் தேவையான அனைத்து இசைக் கருவிகளும் தயாராக இருக்கின்றன. அவற்றை இசைக்க, இசைக் கலைஞர்களும் ரெடி. கோட்டு, சூட்டு அணிந்த ஓர் இளைஞர் மைக் பிடித்துப் பாட ஆரம்பிக்கிறார். இன்னொரு பெண் உடன் பாடுகிறார். பாடல் முடிந்தவுடன், அரங்கமே கை தட்டிப் பாராட்டுகிறது. கலைஞர்களால் கைத்தட்டலைக் கேட்க முடிகிறதேயொழிய, பார்வையாளர்களைப் பார்க்க முடியவில்லை. காரணம், அவர்கள் பார்வையற்றவர்கள்.

இந்த இருவர் மட்டுமில்லை, அந்தக் குழுவில் உள்ள பாடகர்கள், பாடகிகள், இசைக் கலைஞர்கள் அத்தனை பேருமே, பார்வை இழந்தவர்கள்தான். இசைக் குழுவுக்கு 'ராகப் பிரியா' என்று பெயர். நடத்தி வருபவர் கோமகன் என்ற இளைஞர். பாடகர்.

பத்தாண்டுகளாக இசைத்து வரும் குழுவிற்கு காமராஜர் அரங்கத்தில் நடந்த சமீபத்திய புரோகிராமில் ஒரு பெரிய கௌரவம் கிடைத்தது.





ஆம்! பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் இவர்களுடன் கலந்து மேடையில் பாடல்கள் பாடினார். நிகழ்ச்சி ஏற்பாடு ப்ரியாவிஷன் 'ராது'.

பாடியதைவிட, எஸ்.பி.பி.யின் பேச்சு நெகிழ்ச்சியாக இருந்தது. "இவர்களுக்கு எல்லாம் பார்வை குறைவு என்று இவர்கள் மீது வெறுமனே அனுதாபம் காட்டாதீர்கள். இவர்கள் ஆண்டவனின் ஆசிர்வாதம் அதிகமாகக் கிடைக்கப் பெற்றவர்கள். அதனால்தான், இத்தனை அற்புதமான குரல் வளம் பெற்று இருக்கிறார்கள். என்னைப் பெரிய பாடகன் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நான், எந்த ஒரு பாட்டைப் பாடினாலும், டைரியில் எழுதி வைத்துக் கொண்டுதான் பாட வேண்டியிருக்கிறது. அப்போது கூட, சில சமயங்களில் தடுமாற்றம் ஏற்பட்டு விடுகிறது. ஸ்பெஷல் லைட்டிங் என்று மேடையில் வெளிச்சத்தைச் சற்றே குறைத்தால்கூட, டைரியில் உள்ள பாடல் வரிகள் தெரியாமல் பிராப்ளம் ஆகி விடுகிறது. ஆனால், இவர்களைப் பாருங்கள். பாட்டுகளை எழுதி வைத்துக் கொள்ளாமலேயே, துளி பிசிறு இல்லாமல் மிக அற்புதமாகப் பாடுகிறார்கள். அவர்கள் திறமைக்கு என் பணிவான வணக்கங்கள்" என்று பேசினார்.



• கோமகன்

'இனி வருடத்தில் ஒருநாள் முடிந்தபோது, நீங்கள் எங்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பாடினால் எங்களுக்கு கௌரவம்' என்று கோமகன் வைத்த வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டார் எஸ்.பி.பி. "முடிந்தபோது இல்லை, முடியாது போனால்கூட கண்டிப்பாய் வருகிறேன்" என்றார்.

— கௌதம் ராம்

படம்: யோகா

24.9.200



வட்டமேஜை:

உயர்ந்த எண்ணம்!

சென்ற வார கல்கியின் ஹைலைட்டே 'பாத்தூர் நடராஜர் சிலை' பற்றிய வழக்கினை விளக்கிய சந்திர சேகரனின் கட்டுரைத் தொடர்தான். சிறு வயதில் இவ் வழக்கு பற்றி நாளிதழ்களில் பிடித்தது மட்டும்தான். இப்போது 'கல்கி'யில்தான் விரிவாகப் படிக்கிறேன். இது போன்ற அனுபவசாலிகளின் தொடர்கள் இளவயதினரைப் பண்படுத்துகிறது. டைரக்டர்கள் ஸ்ரீதர், பாலச் சந்தர், போலீஸ் ஆபீசர் சி.வி. நரசிம்மன்... வரிசையில் தற்போது டாக்டர் பி. சந்திரசேகரன். வெல்டன் கல்கி!

திண்டுக்கல் – 5,
ஜனனி பார்கவி.

'திரைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டிருக்கும் அசிஸ்டெண்ட் டைரக்டர்களை, அவர்களின் கஷ்ட நஷ்டங்களை வெளியுலகுக்குக் காட்டும் உயர்ந்த எண்ணம் 'கல்கி'யைத் தவிர யாருக்கு வரும்?''

தஞ்சாவூர்-9,
தஞ்சை ராகவ், மகேஷ்.

கற்பக விநாயகர் வேத ஆகம பாடசாலை ஜாதி வித்தியாசமின்றி, அனைத்து சாதியினருக்கும் பயிற்சி அளிப்பது மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கிறது.

திருச்சி – 14, ராஜிராதா.

தலையங்கம் த.மா.கா.வை அழகாக ஸ்கேன் எடுத்தது. இறுதியில் கூறப்பட்ட 'காங்கிரஸுடன் த.மா.கா சேர்ந்து கொள்ளலாம்' என்ற கருத்து நெத்தியடியாக இருந்தாலும் அதில் உள்ள பலன்களைப் பார்க்கும் பொழுது அதுவும் யோசிக்கப்பட வேண்டிய விஷயம் தான்.

பூனாம்பாளையம்,
ஆர்.பி. ஜெயச்சந்திரன்.

'சித்தி' புகழ் நீனா கூறியதில் எனக்கு உடன்பாடில்லை. டி.வி. சீரியலுக்கு இப்போதிலிருந்தே சென்ஸார் கொண்டு வருவது நல்லது! பல சீரியல்களில் படுக்கையறை காட்சிகள், கவர்ச்சி உடைகள், கன்றாவி வசனங்கள் பார்க்க, கேட்க சகிக்கவில்லை.

நெய்வேலி-3, சந்திரமாலா
உத்தண்டராமன்.

'மரத்துண்டும் சில மனிதர்களும்' கற்பனை சிறிதும் கலக்காத யதார்த்தமான, சிக்கல்கள், அநாவசிய திருப்பங்கள் அற்ற சிறுகதை. இயந்திரமாக்குதல் எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதையும் இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் என்பதையும் அழகாக வெளிப்படுத்துகிறது.

சென்னை – 78,
கே.எஸ். நாராயணன்.

இஸ்லாமியக் கலாசாரக் கண்காட்சி கட்டுரையில் 'மதுவும் இசையும் ஒன்று, இசையின் வசமாகி மதியிழக்காதே' என்ற விளம்பரச் செய்தி மனத்தை மிகவும் வருத்தி விட்டது. மது மயக்கமுறச் செய்யும், வெறியைத் தூண்டும். தாய், தாரம், மகள் வேற்றுமையைக்கூட மறக்கச் செய்யும். நோய் தரும், குடும்ப அமைதி கெடுக்கும், இறுதியில் பல இன்னல்களைத் தந்து கொன்றே விடும்.

காலடி ஓசையிலிருந்து சுவாசிக்கும் மூச்சுக்காற்று வரை அனைத்திலும் இரண்டறக் கலந்து இசை எல்லா உயிர்களுக்கும் இன்பம் தருகிறது. ஊனோடு உயிரோடு கலந்து இன்புறச் செய்கிறது. நோய் தீர்த்து, அமைதி தந்து ஆத்ம சுகம் தரவல்லது.

சென்னை–107,
பி.கே. ரகுபதி.

'குர்ஆன் முஸ்லிம்களின் சொத்து அல்ல!' கட்டுரை கண்டேன். 'மதுவும் இசையும் ஒன்று' என்ற கருத்தை இக் கட்டுரையில் படித்த போது 'கள்ளால் மயங்குவது போலே...' என்ற பாரதியாரின் பாடல் வரிகள் நெஞ்சில் பளிச்சிட்டன!

சென்னை-75, வி.ஸ்ரீ. வரதன்.

சமீபத்தில் பவள விழா கண்ட ஆர்.எம்.வீரப்பன் பற்றி சொல்கிறார் எம்.ஜி.ஆர். கழக பொதுச்செயலாளரான எஸ். ஜெகத்ரட்சகன்.

"அரசியலில் பதவிகள் பெறுவதற்குப் பலவிதமான வழிகளை அரசியல்வாதிகள் கையாள்வார்கள். ஆனால் தேடி வரும் பதவிகளைக்கூட, 'கட்சி மற்றும் மக்கள் நலனை முன்னிட்டு, புறக்கணித்து விடுவார் ஆர்.எம்.வீ. துவக்கக் காலத்தில் பெரியாருடைய 'குடி அரசு' பத்திரிகையில் வேலை செய்ததில் துவங்கி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோடு இணைந்து, படங்கள் தயாரித்து, பின்னர் அமைச்சரவையிலும் பங்கு பெற்ற காலம் வரை உழைப்பு, உழைப்புதான். விசுவாசமே அவரது பலம்.

1987ல் எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பிறகு பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தமக்கிருக்கிறது என்பது தெரிந்தும்கூட, 'ஜானகி அம்மையார் முதல்வராக பொறுப்பேற்க விரும்புகிறார்' எனத் தெரிந்ததும், அரசியல் சதி நாட்டங்களில் ஈடுபடாமல், பெரிய மனத்துடன் முதல்வர் இருக்கையில் ஜானகி அம்மையாரை அமர்த்தினார் ஆர்.எம்.வி. அந்தக் காலக் கட்டங்களில் அவர்கூடவே இருந்து பல நிகழ்வுகளுக்கு சாட்சியாக நின்றதால், ஆர்.எம்.வீ எவ்வளவு பக்குவத்தோடும் பொறுமையோடும் பதவி ஆசை இல்லாமலும் நடந்து கொண்டார் என்பதை நினைக்கும்போது வியப்பேற்படுகிறது.

தற்கால அரசியலுக்குப் பொருத்தமில்லாதவரோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

1995ல் எவருமே ஜெயலலிதாவை எதிர்க்க அஞ்சி நின்றபோது, அவரிடமிருந்து விலகி, எம்.ஜி.ஆர் கழகம் கண்டார் ஆர்.எம்.வீ. ஜெயலலிதாவை வீழ்த்த ரஜினி ரசிகர்கள் என்ற ஆயுதத்தை உபயோகப்படுத்தக் காரணமாக இருந்தவரும் ஆர்.எம்.வீ.தான்.



இப்படி ஜெயலலிதா எதிர்ப்பு சக்தியை ஒருமுகப்படுத்திய எம்.ஜி.ஆர் கழகத்துக்கு எந்தச் சட்டமன்றத் தொகுதியும் ஒதுக்கப்படவில்லை. இருந்தாலும், 'தீய சக்தியை ஒழிப்பதே எங்கள் நோக்கம்; பதவிகளைப் பெறுவதல்ல' என்ற கோஷத்தோடு, தி.மு.க கூட்டணிக்காக பிரச்சாரம் செய்து வெற்றியைத் தேடிக் கொடுத்தவர்களில் ஆர்.எம்.வீ.யும் ஒருவர்.

— ப்ரியன்



அமெரிக்காவில் இருக்கிறது பாஸ்டன் மருத்துவ மையம். இந்த மருத்துவ மையத்தில் இருநூற்றைம்பதுக்கும் அதிகமான மருத்துவத்துறை வல்லுனர்கள், சர்வ தேச அளவில் சேவை புரிகிறார்கள். பல்வேறு மருத்துவத்துறை ஆராய்ச்சிகளுக்குமாக, ஆண்டுதோறும் மிக அதிகமாய்ச் செலவிடும் மருத்துவ மையங்களில் இதுவும் ஒன்று.

இதன் 'டெலிமெடிசன்' என்று தொலை தூர மருத்துவ சேவையை, குவைத், கிரீஸ், பாகிஸ்தான், ஸ்பெயின், இங்கிலாந்து உட்பட பல்வேறு நாட்டு மருத்துவமனைகளும் பயன்படுத்திக் கொள்ளுகின்றன. இந்தியாவில் இந்தச் சேவையைப் பெறும் முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் பாஸ்டன் மருத்துவ மையமும் இணைந்து சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டெலி மெடிசன் சேவையை வழங்கப்போகிறது.

இதன் மூலம், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அட்மிட் ஆகியுள்ள ஒரு நோயாளிக்கு ஆபரேஷன் செய்யலாமா? வேண்டாமா? எப்படிச் செய்யலாம்? போன்ற விவரங்களை, அமெரிக்காவில் உள்ள மருத்துவ வல்லுனர்கள் நேரடியாகக் கண்டு, ஆலோசனை வழங்க முடி

சந்திரபாபு நாயுடு எப்படி விட்டு வைத்தார்?

யும். உபயம்: செயற்கைக் கோள் தொலைத்தொடர்புதான்!

பாஸ்டன் மருத்துவ மையத்தின் தலைவராக இருப்பவர் அகமது மொகைதீன் என்கிற மருத்துவ நிபுணர். ஹைதராபாத்தைச் சேர்ந்தவர்.

இதுபோன்ற வாய்ப்புகளைக் கொத்திக் கொண்டுபோக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு காத்துக் கொண்டிருக்கிறாரே! நீங்கள் எப்படி தமிழ்நாட்டு மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து சேவை வழங்க முன் வந்தீர்கள்? என்று டாக்டர் மொகைதீனிடம் கேட்டபோது, "தமிழ்நாட்டில், சுகாதாரத் துறையில் பல முன்னணி முயற்சிகள் நடப்பது பற்றி நாங்கள் அமெரிக்கப் பத்திரிகைகள் லெவற்றில் படித்தோம். தமிழக அரசும், எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகமும் எங்களது டெலிமெடிசன் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள ஆர்வம் காட்டினர். எனவே இத்திட்டம் உருவானது" என்றார்.

— சி.எம்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

அழகின் இரு சிகரங்கள்

ராணி சாரீஸ் & சுந்தர் சாரீஸ்



ராணி சாரீஸ் அறிமுகப்படுத்துகிறது சுந்தர் சாரீஸ் மில்லெனியம் புடவைகள். புதுப்புது டிசைன்களில் உங்கள் உள்ளம் கவரும் கைத்தறி சேலைகள் பட்டுப் புடவைகளுக்கு நிகராய், பரவசமூட்டும் விலைகளில்.

ராணி சாரீஸ் சுந்தர் சாரீஸ்
இரண்டுஉத்திரவாத லேபிள்கள்.

அனைத்து சுங்குடி மற்றும் காட்டன் சேலைகளுக்கு



FOUNDER OF
"RANEE SAREES"

"ராணி சாரீஸ்"
"RANEE SAREES"
MADURAI
SPECIAL QUALITY :
COLOURS ARE GUARANTEED
FOR DHOBI WASH

COPY RIGHT REGD. A-52846/95

Made of Super Fine counts
100% Superior Cotton With
Fast Colour Guaranteed
Jari jacquard Designs with Grand Pallu.

Sundhar
DHOTIES &
SAREES
100% PURE COTTON

SASI / MDU / 2K

மும்பையில் எமது விற்பனை :
அக்டோபர் 2000.4,5,6 மூன்று தினங்கள்
இடம் : ஃபைன் ஆர்ட்ஸ், செம்பூர், மும்பை.

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையான நிறுவனம்



PH:744888,745100.

Ranee Sarees
Show Room A/c

PADMAVADHI TEXTIELS
76,South Masi Street, Madurai-1.
visit us at:www. raneesarees.com

ராணி சாரீஸ் - நிறம் மாறாத சுங்குடி பூக்கள்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered — No. TN / Chief PMG-141 / 2000 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 97 * Registered as a Newspaper in Srilanka

